வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஐப்பசி திங்கள் 2-ம் நாள் (18—10—1964) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 11 | இதழ் 21

# அரசியல் வாதிகள் மீது ரகசிய

# பொலீசாரின் கண்காணிப்பு

## புதிய ஒற்றர் படை நிறுவப்பட்டுள்ளதாம்

நாடெங்கணும் இரகசியப் பொலீசார் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்பவர்களின் பெயர்முகவரி முதலியவற்றைச் சேகரிப்பதுடன், அரசியல்சார்பற்ற நிகழ்ச்சிகளையும் இவர்கள் கண்காணித்து வருவதாகச் செய்தி கிடைத்துள்ளது.

புதிய ஒற்றர் படை ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறதென்றும், மறைந்த திரு. பண்டாரநாயக்கா 1957 ல் அமைத்த 'தொண்டர் படை' போன்றே இதுவும் இருக்கும் என்றும் நம்பப்படுகிறது. ஓர் சர்வாதிகார ஆட்சி ஏற்படப்போவதற்கான முன்னேட்டங்களே இவைகள் என்றும் அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

நாட்டில் ஆங்காங்கே நடைபெறும் பொதுக் கூட்டங்கள், பொது நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கண்காணிக்கும் ஒரு புதிய இரகசியப் பொலீசுப் படை இயங்குவதாக ஒரு செய்தி கூறுகிறது.

பொதுக் கூட்டங்களில் குறிப்பாக அரசியல் கூட்டங்களில் பங்கு பற்றும் பேச்சாளர்களின் பட்டியல்களையும், முகவரிகளையும் இந்த இரகசியப் பொலீசார் சேகரித்து வருகிருர்களாம்.

அரசியல் கலப்பற்ற ஓர் கலைவிழாவில் கலந்து கொண்டவர்களின் பெயர்களையும், அண்மையில் ஒரு இரகசியப் பொலீசார் சேகரித்ததைக் கண்டு பொதுமக்கள் ஆத்திரப்பட்டனராம். இக் கலைவிழாவுக்காக ஒட்டப்பட்டிருந்த ஒரு சுவரொட்டடையைச், சுவரிலிருந்து ஒரு இரகசியப் பொலீசார் பெயர்த்தெடுத்தாராம்.

சர்வாதிகார ஆட்சி ஒன்று உருவாகப் போவதற்கு இத்தகைய நிகழ்ச்சிகளே எச்சரிக்கை விடுகின்றன என்று ஒரு அரசியல் பிரமுகர் நமது நிருபரிடம் கருத்துக் கூறினுர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணியிலிருந்து சில வாலிபர்களைக் கொண்ட ஒற்றர் படை ஒன்று உருவாக்கப்பட்டு வருவதாகவும் ஒரு செய்தி கிடைத்துள்ளது.

1957 வருடம் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களை நசுக்க, காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா ஒரு தொண்டர் படையினை நிறுவியமை நாடறிந்ததே. இதே தொண்டர் படைதான் நாளாவட்டத்தில் 'சிங்க ரெஜிமன்ட்' என்ற இராணுவப் பிரிவுடன் இணைந்ததாகவும் அப்பொழுது கூறப்பட்டது. இதே ரீதியில்தான் இந்த ஒற்றர் படையும் ஏற்படுத்தப்படுகிறதோ என்று பொது மக்கள் ஐயுறுகின்றனர்.

## திருமலையில் நவரத்தினம் மறைவு

திருகோணமலையில் கடந்த வருடம் நிறுவப்பட்ட அரசாங்கப்பொது ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய திரு. இ. நவரத்தினம் அகால மரணம் அடைந்தார் என்ற செய்தி கிடைத்தது. திரு. நவரத்தினம் மட்டக்களப்பு திருக்கோயிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

அரசாங்க ஊழியராக விருந்தாலும் தமிழரசுக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். மொழி வழி பிரிந்து தமிழ் பேசும் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காகப் போராட வேண்டும் என்ற பேரவாக் கொண்டு உழைத்தவர்.

25 வயதான இவ்விளைஞர் தமிழ் அபிமானம் பெரிதும் கொண்டவர். இவருடைய மறைவு இனப்பற்றுடன் வளரும் இளைஞர் சமுதாயத்துக்கு ஈடுசெய்ய முடியாத பெருநட்டமாகும். அன்னரைப் பிரிந்து வாடும் அவர் குடும்பத்தாருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

—ஆ-ர்

# குருஷ்சேவ் பதவி துறந்தார்

## உலகில் பெரும் பரபரப்பு

நிகிட்டா குருஷ்சேவ் சோவியத் ரஷ்சிய பிரதமர் பதவியையும், கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பதவியையும் வியாழக்கிழமை நள்ளிரவு (இலங்கை நேரப்படி) துறந்து விட்டார் என்ற செய்தி உலகத்தில் ஒரு பெரும் பரபரப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. திரு. குருஷ்சேவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான திரு. லியோனிட் பிரெசினெவ் கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகவும், திரு. அலெக்சி கோசிஜின் பிரதமராகவும் பதவி ஏற்றுள்ளனர்.

திரு. குருஷ்சேவின் பதவி துறப்பை ஒட்டி உலக அரசியலில் பலத்த மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் வதந்தி அடிபடுகிறது.

ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் கொம்யூனிச தத்துவத்தில் ஏற்பட்ட அடிப்படைச்சிக்கலும் தகராறுகளும் புதிய திருப்பத்தை அடையவும் கூடும் என்று கூறப்படுகிறது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமரும், கொம்யூனிஸ்டு கட்சித் தலைவரும் குருஷ்சேவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வளர்ந்தவர்களே யானுலும், ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் ஸ்டாலினுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று கூறப்படுகிறது. ரஷ்யாவுக்குள் ஸ்டாலினை ஆதரிக்கும் குழு வளர்ந்து வருவதாகவும், அவர்கள் சீனக் கொம்யூனிச சித்தாந்தத்தை ஆதரித்து குருஷ்சேவுக்குத் தலையிடி கொடுத்து வந்துள்ளதாகவும் ஏற்கனவே பல செய்திகள் வெளியாகியுள்ளன.

# அயல் நாட்டு பயணம் செல்லும் அரசியல் வாதிகள்

## அந்தஸ்துக்கேற்றபடி கட்டுப்பாடுகள்

அயல் நாடுகளுக்குச் செல்லும் பிரயாணிகளின் மீது கண்காணிப்பும் கட்டுப்பாடும் கடுமையாக விருக்கும் இவ்வேளையில் சில அரசியல் வாதிகளும், ஆளும் கட்சிக்கு அனுசரணையாகவுள்ள சிலரும் அடிக்கடி வேற்று நாடுகளுக்குச் சென்று திரும்புவது பற்றி அரசியல் அவதானிகள் கண்ணேட்டம் செலுத்தி வருகின்றனர். இத்தகைய பிரயாணங்களை மேற்கொள்ளுபவர்கள் தாங்கள் வெளியே செல்லும் காரணங்களை மர்மமாகவே வைத்துள்ளார்களாம்.

நாட்டில் அந்நிய செலாவணி வெகுவாகக்குறைந்து விட்டமையினுல் வெளி நாடுகளுக்குச் செல்லும் பிரயாணிகளின் போக்கு வரத்துக்கள் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பலருடைய அவசரப் பிரயாணங்களும் ரத்தாக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் இதே வேளையில் பல அரசியல் பிரமுகர்களும் ஆளும் கட்சிக்கு அனுசரணையாக விருப்பவர்களும் திடீர் திடீரென வெளியூர்களுக்குப் பிரயாணமாகிவருகின்றனர்.

இவர்கள் பிரயாணம் மேற்கொள்ளும் காரணங்களும், இவர்களுக்கு வழங்கப்படும் செலாவணி விபரங்களும் மர்மமாகவே இருப்பதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

அண்மையில் அயல் நாடுகளுக்குச் சென்றிருந்த ஒரு அரசியல் பிரமுகர் நோய் வாய்ப்பட்டு அயல் நாட்டிலே சிகிச்சை பெற்றுவருகிறுர் என்ற செய்தி அடிபட்டது. அவருடைய மனைவியும் அந்நாட்டுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டார். சில நாட்களுக்குள்ளாகவே அரசியல் வாதியான அப்பெண்மணி வேருேர் நாட்டின் நிகழ்ச்சி ஒன்றில் பங்கு கொண்டதாகப் பத்திரிகைகள் செய்தி கொடுத்தன.

தங்கள் உடல் நிலைகளைப் பரிசீலனை செய்வதற்கு என்று சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு சில அரசியல் வாதிகள்—அரசியல் காரணங்களுக்காகவே வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றனர். இத்தகைய சலுகைகள் இந்நாட்டில் வரிப்பணம் செலுத்தும் ஏனைய பிரசைகளுக்கு வழங்கப்படுவதாகத் தெரியவில்லை.

மேல்நாட்டில் கல்விபயிலச்சென்ற ஒரு மாணவன், ஒரு விபத்துக்குள்ளாகி உயிருக்கு மன்ருடிக்கொண்டிருந்தபோது, அவனுடைய தாயார் தன் மகனைப்பார்க்கப்போக பெரு முயற்சி எடுத்தார். ஆனுல் இறுதியில் பிரதமரைக் கண்டு முறையிட்ட பின்னரே போக அனு

(9-ம் பக்கம் பார்க்க)

## அகிம்சை வாதிக்கு சமாதான பரிசு

அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கான சம உரிமைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடாத்தி வரும் கலாநிதி மாட்டின் லூதர் கிங் அவர்களுக்கு 1964ம் ஆண்டிற்குரிய சமாதானத்துக்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது. இவர் அண்ணல் காந்தியின் அகிம்சைவழி நின்று 1955ம் ஆண்டு முதல் நீக்ரோக்களுக்கான உரிமைப் போராட்டத்தில் தீவிரமாக உழைத்து வருகிறுர்.

நீக்ரோவாகப் பிறந்து, பாதிரியாக வளர்ந்து, போராட்ட வீரராகக் களத்தில் நிற்கும் இவருக்கு வயது 35.

[மாட்டின் லூதர்கிங் தலைமையில் நடைபெறும் உரிமைப் போராட்டம் பற்றிய கட்டுரை 14-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது]

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்தொகை காட்டும் இல்லறக் காட்சி

எங்கேயோ பிறந்து எங்கேயோவளர்ந்து இணைந்த இளந்தம்பதிகள். இளமையின் இன்பத்தை நுகர பெற்றவர்களால் பிணைத்து விடப்பட்ட பருவச் சிட்டுக்கள். வாழ்வின் கரத்திலே விடுபட்ட வண்ணப் பறவைகள். ஆமாம்; அவள் உருவம், தெள்ளிய சந்தனக் குழம்பைக் குங்குமத்திலே குழைத்து விடப்பட்டது போன்ற மேனி; கிள்ளிவிட்டால் சிவந்துவிடக் கூடிய கன்னக் கதுப்புக்கள்; அஞ்சனந் தீட்டிய நீள் நயனங்கள்; பவள நிற இதழ்கள்; மின்னி மறைவது போன்ற மென்னிடை; இவ்வளவும் பெற்றிருந்த அம் மதிமுக நுதலிலே செந்நிறத் திலகம்; தொடையளவு நீண்டிருந்த கருங்குழல் அனைத்தும் ஒன்றிணைந்து அவளை அழகுத் தெய்வமோ எனக்கண்டோர் மயங்கும்படி ஆக்கின. வளமார்ந்த செல்வக் குடும்பத்தில் வாழ்வை நடாத்த வந்திருப்பவளாதலால் துன்பத்தின் சாயை அவளிடம் கடுகளவேனும் அற்றிருந்தது.

### வாழ்க்கை ஒப்பந்தம்

அவனும் அவளுக்குச் சளைத்தவனல்ல. வாளிப்பான உடற்கட்டு; சுருள் கேசம்; முகத்திலிருந்த அரும்பு மீசை எதையும் துரும்பென மதிப்பதாகப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. கன்னியரின் கடைக்கண் பார்வைக்கு இலக்காகும்படியாக, மன்மதனோ என விளிக்கும்படியான தோற்றத்துடன் விளங்கினான்.

இருவருக்கும் வாழ்விலே ஒப்பந்தம் செய்தாகி விட்டது. கணவன் வீட்டிற்கு வந்திருக்கின்றாள் பெண். பெண்ணின்மீது ஆணுக்கு அளவுகடந்த காதல்; அவ்வாறே பெண்ணுக்கும் ஆண் மீது அளவற்ற மோகம். ஆண் மீதுகொண்ட பேரன்பு காரணமாக பெண்ணே தன் கரத்தால் மடைத்தொழில் செய்ய முனைகின்றாள்.

### மடைத்தொழில் புரியும் மங்கை

பெண் தயிர்க் குழம்பு சமைக்கின்றாள். காந்தள் மலரையிணைத்த மென்விரல்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பேராதனை

**குலோத்துங்கன்**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

காரியம்பார்க்கின் குழம்பின் பதம் பிசகிவிடுமென கருதி) களால் உறைந்து கட்டியாய் விட்டிருக்கும்தயிரைப்பிசைகின்றாள். அவ்வேளையில் மேனியை மறைத்திருக்கும் விலையேறப்பெற்ற ஆடை நெகிழ்கின்றது. (கைகழுவி

## இலக்கியப் பூஞ்சோலை

தயிர் பிசைந்த கரங்களாலேயே அதை மீண்டும் உடுக்கின்றாள். மைதீட்டப்பெற்ற அழகிய குவளைமலர் நயனங்களிலே தாளிதப்புகைபரந்து அவள் சமையலுக்கு இடையூறு விளைவிக்கின்றது. ஆயினும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தலைவன் மகிழத்தான் மேற்கொண்ட காரியத்திலே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றாள்.

### மெல்ல நகும் நங்கை

தயிர்க்குழம்புச் சமையல் ஒருவாறுமுடிவடைகின்றது. தலைவன் சாப்பிட அமர்கின்றான். முன்னால் வெள்ளித் தட்டிலே சாதம் போடப்பட்டிருக்கின்றது. அறுசுவை குழம்புவகை சூழ இருந்து நறுமணம் பரப்பிக்கொண்டிருக்கின்றன. அவற்றிடையே தயிர்க்குழம்பும் இடம் பிடித்திருந்தது. முதலில் அத்தயிர்க்குழம்பையே இல்லத்தாள் பரிமாறுகின்றாள். அதன் வாசனை தலைவனுக்கு இனிமையூட்டியது. உள்ளத்திலே உவகை பொங்க 'தேவியின் கை பட்டாலே போதும்; தேவாமிர்தம் எதற்கு? இந்திரன்கூட இறங்கிவந்துவிடுவான் போலிருக்கின்றது, உன் சமையலை உருசித்துப் பார்க்க. தயிர்க்குழம்பு எவ்வளவு இனிமையாயிருக்கின்றது! இவ்வளவு அற்புதமாகச் சமைக்க எங்கே பயின்றாய்? வாழுள்முழுதும் இது ஒன்றையேசாப்பிட்டுக் கொண்டிருந்தாலே போதும் போன்றிருக்கின்றது' என்று அவன் சமையலைப் பாராட்டியவாறே உண்கின்றான்.

அப்பொழுது தலைவியின் முகம் கதிரவனைக்கண்ட கமலமென மலர்ந்து கொவ்வைவாய் இதழ்களிடையே மெல்லிய புன்னகை இழைந்தோடுகின்றது. உள்ளத்திலே ஒருவிதமான இன்பவுணர்ச்சி எழுந்து மெய் சிலிர்க்க; நாணத்தால் தலை நிலத்தை நோக்குகின்றது.

அகப் பொருள் கூறும் குறுந்தொகையிலே ஆன்பாற் புலவரொருவர் தனது இலக்கியத்திலே உருவக்கிய இளந்தம்பதிகளின் இல்லற இன்பத்தைத்தான் இங்கே நாம் காணுகிறோம்:

'முளிதயிர் பிசைந்த
காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம்
கழா அது உடீஇக்
குவளை உண்கண்
குய்ப்புகை கமழத்
தான் துழந்தட்ட
தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ
னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்
றொண்ணுதல் முகனே.'

—கூடலூர்கிழார்

---

## ஆண்டவனுக்கே தெரியும்

ஆங்கில மா கவிஞர் பைரனின் கை யெழுத்து. அத்துணை அழகாயிராது பைரனும் தனது கையெழுத்தைத் திருத்திக்கொள்வதற்காகப் பெரிதும் முயன்றார். அந்த முயற்சியில் அவருக்குத் தோல்விதான் கிட்டியது. கையெழுத்தும் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள், அவர் அச்சகம் ஒன்றிற்கு அச்சிடுவதற்காக தம் கையெழுத்துப் பிரதியை அனுப்பி வைத்தார். அச்சக நிருவாகியாலோ, அச்சுக் கோப்பவர்களாலோ அதனை ஒருவரி கூடப் படிக்க முடியவில்லை. ஆகவே கையெழுத்துப் பிரதி பைரனிடமே திரும்பி வந்தது. திருத்தி எழுத பைரன் முயன்றார்.

அந்தோ பரிதாபம்! எழுதிய அவரால் கூட அதைப் படிக்க இயலவில்லை. இப்படியும் அப்படியும் வைத்துப் பார்த்தார். பக்கத்தில் பிடித்தும் தொலைவில் பிடித்தும் படிக்க முயன்றார். அவருக்கே புரியவில்லை.

"இதை எழுதும் போது என்ன எழுதினேன் என்று எனக்கும் தெரியும், ஆண்டவனுக்கும் தெரியும். ஆனால், இப்பொழுதோ, ஐயகோ! அந்த ஆண்டவன் ஒருவனுக்குத் தான் தெரியும்" என்றார் பைரன்;

[மூத்தாரம்]

## எழுத்தாளர் வாழ்வில்

---

# கேடிலா மக்களைத் தோற்று

—(சம்மாந்துறை, யூ. செயின்)—

ஆயிரம், அர்த்தமொன் றில்லாத் தோற்றத்
தாலொன்று மில்லையிங், காதலாலே
பாயிரம் பாடியென் பயன்கள் உண்டு
பக்குவம் அற்றபல் செய்கைபற்றித்?
தீயிலும் தீயரே திக்கில் அன்னார்
தேறுதல் தீவினை விளைத்தல் போலாம்
தூயநல் ஒருவரைத் தோற்று வித்தல்
துணைக்கொரு தோழனாய் அமைந்து போகும்

பூமியில் பாரமாய்ப் பொழுது போக்கும்
போலிகள் பிறத்தலால் புகழோ? இன்றேல்
உமிகளுக் குவமையாய் ஓதத் தக்கான்
உலகினில் இருப்பதால் ஏதும் உண்டோ?
நிமிர்ந்துசென் றக்கலில் நிறைவு காணும்
நெறியுள நல்லதோர் சில னைத்தான்
திமிர்ந்தஞா னத்துறைன் தெய்வம் ஆனோய்.
தேடியே தோற்றிடல் வேண்டும் இங்கு.

பெறுதலின் பெருமையுன் பாதம் புக்கும்
பேறுடை மக்களைப் பெற்ற யல்லால்
சிறுமைகள் உற்றுயர் சீர்கள் மங்கும்
சேர்கின்ற நற்பயன் செத்து மாளும்
ஊறுசெய் மனிதரை உண்டு பண்ணின்
உலகமே அழிந்துபோம் உய்ய நல்ல
உறுதுணை கொடுப்பரைத் தோற்று வித்தால்
உன்னையே போற்றிடும் உயிர்க ளெல்லாம்.

அஞ்சாமை உளத்திலே அணிந்து போற்றும்
அறிவுள மக்களை ஆக்கல் மேன்மை
நெஞ்சுரம் இல்லாதான், நேர்மை இல்லான்
நினைப்பவை அனைத்துமே நஞ்சாய் மாறும்
கொஞ்சமும் அஞ்சிடாக் கொடிது செய்யக்
கொற்றவன் ஆயினுங் கொள்ளோம், ஆனால்
கெஞ்சியே கேட்கிறோம் உலகம் வாழக்
கேடில்லா மக்களைத் தோற்ற வேண்டும்.

---

# தமிழ் இசை

—ஈழவேந்தன்—

கொழும்பு விவேகாநந்த சபையின் ஆதரவில் நடைபெறும் தமிழிசை விழாவை யொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. தமிழிசைக் கலைஞர் தமிழிசைப் பாடல்களை ஒதுக்கிவிட்டு வேற்று மொழிப் பாடல்களுக்கு அடிமையாகியிருக்கும் நிலையை இக்கட்டுரையில் ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார். "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" என்ற அப்பர் அருள் மொழி தமிழிசைக் கலைஞர்களின் வேற்று மொழிப் பற்றை மாற்றட்டும்.

ஆங்கிலேயனைப் பார்த்து நீ ஆங்கிலத்தில் பாடு என்று யாம் கேட்பதில்லை. அது போன்றுதான் இத்தாலியனையோ, பிரெஞ்சு நாட்டவனையோ சீனதேசத்தவனையோ பார்த்து நீ உன் மொழியில் பாடு என்று யாம் கேட்பதில்லை. காரணம் இயற்கைக்கு இயைந்த முறையில் தம் தம் மொழியில்தான் அவர்கள் பாடுவது வழக்கம். ஆனால் கேவலம் எம் தமிழ் இனத்தைப் பொறுத்தவரை ஒரு தமிழ்ப் பாடகனையோ, பாடகியையோ பாடச் சொன்னால் அவனோ அவளோ தெலுங்கில் அல்லது வட மொழியிற்தான் தம் பாட்டுத் திறத்தினைக் காட்ட முயல்வர். தமிழிற் பாடும்படி வலித்து வேண்டினாற்தான் தமிழில் சில வேளையில் பாட முயல்வர்.

### தன் நிலை கெட்டால் தமிழ் இனம் அழியும்

நாம் தமிழர், நாம் ஒரு தனி இனம் எமக்கென்று ஒரு தனி மொழி தனிப் பண் பாடு தனி இசை உண்டென்றெல்லாம் பெருமை பேசுகிறோம். எனினும் பரந்த நோக்கு, விரிந்த உளப்பாங்கு என்ற பெயரில் எம் இனத்தின் தனி இயல்பும் தனி வாழ்வியல் முறையும் பூண்டோடு அழிந்தொழியும் தன்மையில் ஒழுகுகிறோம். இதைத்தான் தமிழ் இசை இயக்கத்தின் முதன்மைத் தலைவர்களுள் ஒருவராய் விளங்கிய ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் ஒரு முறை உள்ளம் நொந்து பின் வருமாறு கூறினார். "தமிழருக்கு தேசியம் என்றால் இந்தி, உலகமொழி என்றால் ஆங்கிலம், வழிபாடு என்றால் வடமொழி, இசை என்றால் தெலுங்கு, [illegible] யாடலிற் கூட எல்லையற்ற பிற மொழிக் கலப்பு. இந்நிலையில் தமிழ் எங்ஙனம் வாழ முடியும்." இன்று தமிழ் மக்கள் பலரிடம் தம் இனத்தின் தனித்தன்மையை பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி- மறுமலர்ச்சி தோன்றியுள்ளதை யாம் மறுக்க முடியாதெனினும், இவ்வுணர்ச்சி எம் இனத்தின் நிலைத்த நல்வாழ்விற்கு ஏற்ற முறையில் விரிந்து பரவவில்லை என்பதை யாம் ஏற்றேயாக வேண்டும்.

### எம் வாழ்வில் எங்கும் எதிலும் இசை

இசையினால் ஆட்கொள்ளப்படுகிற பண்பு மானிட இனத்தின் பொது இயல்பாய் அமையினும் தமிழ் இனத்தைப் பொறுத்தவரை இசைக்கு எம் இனம் மிகச் சிறந்த நிலையினைக் கொடுத்துள்ளதென்பதைத் தமிழ் இலக்கியங்கள் ஊடாக அறிகிறோம். இசை உணர்ச்சி தமிழனோடு கூடப் பிறந்த உணர்ச்சி என்று கூறினாற் கூட மிகையாகாது. தமிழ [illegible] மணவினை, பிணவினை ஆகிய இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் சரி குழந்தையை "ஆராரோ ஆர் இவரோ" என்று தாலாட்டி ஓராட்டுகிற பாடலிலும் சரி தமிழ் இசையின் மணம் கமழ்ந்திருப்பதைக் காணலாம்.

### சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து பாடுக

ஆதலால் இனியாவது யாம் பொருளற்ற பாட்டுகளைப் புத்தமுது என்று போற்றிக் கைத்தாளமிடாது, இருளுக்குள் சித்திரத்தின் திறன் காண முயலும் பேதைகளாக மாறாது எந் தமிழில் இசையில்லை எந் தாய்க்கே உடையில்லை என்று உரைத்து, தமிழின் தன் மானத்தை விற்று வாய்ச் சோற்றே பெரிதென்று எண்ணி வேற்று மொழியில் இசை பாட முயல்கின்ற வேட்கையினைத் துறந்து, குருடும் குருடும் குருடாட்டம் ஆடிக் குழி விழும் நிலையினை நீக்கி இன்பவுணர்ச்சி இனிய தமிழ் இசைக்கே உண்டென்பதை உணர்ந்து "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து" சுவைக்கும் நல்ல தமிழ் இசையாளராக சுவைஞராக (ரசிகர்) மாறவேண்டும். அப்பொழுதுதான் நாவலர் தார், தமிழ் காக்கும் நல்லவர் வல்லவர் என எம்மை வாழ்த்தி வழுத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். எந்தனி,
வெலிசர, ருகம.

கே: திருமணத்தின் பின், மாமி, மாமன் வீட்டில் இருப்பது நல்லதா? அல்லது தனியாகக் குடும்பம் நடத்துவது நல்லதா?

ப: தனிக் குடும்பம் நடத்துவதில் தனிப் பொறுப்பு ஏற்படுகிறது. குடும்பத்தை நடத்த பிறர் கையை எதிர்பார்க்கும் பழக்கத்திலிருந்து விடுபடும் வாய்ப்பும் கிடைக்கிறது. அதில் ஒரு தனி இன்பமும் அடங்கியுள்ளது.

ஃ

க. சிவஸ்கந்தா,
நாகேந்திரமடம்

கே: சந்தேகம் எதனால் எழுவது? இதனை நிவர்த்தி செய்ய வழியுண்டா?

ப: ஒரு பின்னணி இருந்தாலன்றி சந்தேகம் ஏற்பட முடியாது. அப் பின்னணியைத் தகர்க்க வழி தேட வேண்டும். தேடும் வழி சந்தேகத்தை வலுப்படுத்தாதிருக்க வகை செய்து கொள்ள வேண்டும்.

கே: காதலர்கள் தோல்வி கண்டு தற்கொலை செய்து கொள்வது சரியா?

ப: தற்கொலை செய்வதே கோழைத்தனம். தோல்வியை வெற்றியாக மாற்ற வழி கண்டு பிடிக்க முடியாவிட்டால் தோல்வியைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். வெற்றியை மட்டும் எதிர்பார்த்து காதல் செய்ய வேண்டாம்.

கே: கேள்விகளுக்குப் பதில் பகரும்போது எந்த நோக்குடன் பகருவீர்கள்?

ப: ஓகோ! அடிப்படையில் கையை வைக்கப் பார்க்கிறீரே! அது சிதம்பர இரகசியம்.

ஃ

லூட்டி அவுஸ்கோன்,
ஏருவூர்.

கே: மாதம் முந்நூற்றைம்பது சம்பளத்தையும், தலைமை ஆசிரியர் பதவியையும் தியாகஞ் செய்து எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மட்டுநகர் தொகுதிக்கு அபேட்சகராகப் போட்டியிடப் போகிறாராமே ஓர் ஆசிரியர்?

ப: ஐயோ பாவம்! மாதச் சம்பளம் 350 இழந்ததோடு கட்டுப்பணம் 1000 வேறு இழக்கப் போகிறாரே! உங்களின் இரட்டை அனுதாபத்தை இப்பொழுதே அவருக்கு தெரிவித்துவிடுங்கள்.

கே: இந்த நாடு பாலும் தேனும் பாயும் நாடாக விருக்காமல் மதுபானம் பாயும் நாடாக மாறப் போகிறதாமே!

ப: ஏற்கனவே "கசிப்பு" பாயும் நாடாகத்தானே இருக்கிறது. அது கள் பாயும் நாடாக மாறிவிடும், அவ்வளவுதானே!

ஃ

எம். எஸ். பெரமன்,
உடவளை.

கே: அன்பும், அறிவும் போட்டி இட்டால் எது வெல்லும்?

ப: அன்பு என்பதைக் கூறவும் வேண்டுமா!

ஃ

குமாரச்செல்வன்,
ஏழாலை மேற்கு

கே: முன்பு மக்கள் வங்கிக்குப் பொறுப்பாயிருந்த மந்திரியை வடபகுதி எம். பி. ஒருவர் ஏன் புகழ்ந்து துதி பாடினார்?

ப: கடினமான கேள்விதான். எதற்கும் அந்த வங்கியில் அவர் கடன் வாங்கியிருக்கிறாரா என்பதைக் கண்டு பிடியுங்கள்! விடை கிடைக்கும்.

ஃ

கே. கே. வி. ஆனந்தசர்மா,
வறக்காப்பளை.

கே: நான் எழுதியனுப்பும் தரமான கேள்விகளையெல்லாம் குப்பைக் கூடையில் வீசிவிட்டு, தரமற்ற கேள்விகட்கும், காதற் கேள்விகட்கும் முக்கியத்துவம் கொடுக்கிறீர்களே, என்ன காரணம்?

ப: ஓ! நீங்கள் தரமற்ற கேள்விகளையும், காதல் கேள்விகளையும் வேறு கேட்கிறீர்களா?

ஃ

ஏ. தவமணி,
கிண்ணியா

கே: கிண்ணியாவில் ஏ. எல். ஏ. மஜீது அவர்கள் நடாத்திய இஸ்லாமியக் கலைவிழாவில் அரசியல் பிரசாரம் நடைபெற்ற காரணமென்ன?

ப: கலை விழாவை ஆரம்பித்த நோக்கம் நிறைவேறியுள்ளது.

ஃ

எஸ். அன்ரன் ஜெயக்குமார்,
கரவெட்டி

கே: எனக்குப் படிக்க மிகவும் ஆசை. ஆனால் படிப்பது நினைவிருப்பதில்லை. படிப்பதை உடனுக்குடன் மறந்து விடுகிறேன். இதற்கு என்ன செய்யலாம்?

ப: ஆசை மட்டும் இருந்தால்போதுமா? அக்கறையும் இருக்க வேண்டும். எந்தப் பாடத்தையும் சிந்தையைச் செலுத்திப் படித்தால், மறந்து போவதற்குக் காரணம் கிடையாது. படிக்கும்போது மனதைப் பல விஷயங்களில் ஓட விடாதீர்!

ஃ

க. பரமநாதன்,
வெள்ளவத்தை

கே: நீங்கள் எப்பொழுதும் பெண்கள் பக்கந்தான் என்று நண்பர் சொல்லுகிறார். என்ன மர்மமோ?

ப: பெண் என்றால் பேயும் இரங்குமாம். நான் இரங்க மாட்டேனா என்ன? ஆண்கள் பக்கம் சேர நான் தயார். ஆனால் அங்கே ஓர் ஆண் கூடக் கிடையாதே! எல்லா ஆண்களும் ஏற்கனவே பெண்கள் பக்கம் சேர்ந்து விட்டார்களே!

ஃ

இராமநாதன்,
கல்முனை.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அந்தப் பெண் படிக்கும் பொழுது கண்ணை கையால் மறைத்துப் படிக்கிறாள். அவளைக் காதலிக்கலாமா?

ப: கண்ணை மறைத்துக் கொண்டால் படிக்க முடியாதே! அவள் கண்ணை மறைத்துக் கொண்டு படிப்பது விந்தைதான். அந்த விந்தையைக் கண்டுபிடிப்பதற்காகவாவது அவளை நீங்கள் காதலிக்கத்தான் வேண்டும்.

ஃ

எஸ். ஆர். பொன்முடியன்,
திருமலை

கே: ஒரு குடும்பத்தில் ஆண் பிள்ளை பிறந்தால் கற்கண்டும், பெண்பிள்ளை பிறந்தால் சர்க்கரையும் கொடுக்கின்றார்களே அது ஏன்?

ப: நீங்கள் கூறுவது தவறு. பெண் பிறந்தாலும் இப்போதெல்லாம் கற்கண்டுதான் கொடுக்கிறார்கள். சர்க்கரை இறக்குமதித்தடை காரணமாயிருக்கலாம். எனவே சர்க்கரை கொடுப்பதா, கற்கண்டு கொடுப்பதா என்ற பிரச்சினை இறக்குமதித் தடையைப் பொறுத்ததேயன்றி, பால் வித்தியாசத்தைப் பொறுத்ததன்று.

கே: சில பெண்கள் இடை தெரிய ஆடை அணிவது ஏன்?

ப: இடைக்கு மேலுள்ள பகுதி தெரியக் கூடியதாக ஆடை அணிவது தற்போதைய மேனாட்டுப் "பாஷன்". இடை மட்டும் சிறிது தெரியக்கூடியதாக ஆடை அணிவது இந்நாட்டுப் "பாஷன்". இதில் எந்த அளவுக்கு இடை தெரிய வேண்டுமென்பது அவரவர் மனோ நிலையைப் பொறுத்த விஷயம்.

ஃ

[illegible] கம்பளை

கே: ஒரு பெண்ணை மனமாரக் காதலித்த ஒருவரிடம் இடையில், தன் பெற்றோர் தேடித் தரும் மணமகனைத்தான் கலியாணம் முடிப்பேன், எனப் பதில் தரும் பெண்ணை என்ன செய்யலாம்?

ப: அவள் காதலுக்கும் கலியாணத்துக்கும் முள்ள வித்தியாசத்தைச் சரிவரத் தெரிந்து கொண்ட அனுபவசாலி. எனவே அவளைப் பாராட்டுங்கள்.

ஃ

சுதந்திரபிரியன்,
நீர்கொழும்பு

கே: இலங்கையில் பிறந்தவர்களான வம்சாவளியினருக்குச் சென்ற காலங்களிலெல்லாம் இலங்கைப் பிரஜைக்குரிய கூப்பன்களைக் கொடுத்தார்கள். இந்த வருடம் அதே இலங்கை வம்சாவளியினருக்குப் பிறநாட்டினருக்குரிய கூப்பன்களைக்கொடுத்திருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

ப: பிரஜாவுரிமையைப் பறிக்கும் குறுக்கு வழி இது. அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தின் அட்டைத் தாளின் நிறத்தை மாற்றிவிட்டால் பிரஜாவுரிமையும் மாறிவிடும் என்பது அவர்களின் கண்டுபிடிப்பு. இதைத் தடுக்க ஒன்றுபட்ட போராட்டம் அவசியமாகும்.

ஃ

ஆர். கே. திருகோணசுந்தரம்,
புது வட்டுக்கோட்டை

கே: இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரை இந்தியா ஏற்றுக்கொள்ள மறுத்தால், அவர்களை இந்த அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்துள்ளது?

ப: அவர்களைச் சிறு சிறு கோஷ்டிகளாகப் பிரித்து உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் அனுப்புமாறு ஏரிக்கரைப் பத்திரிகையொன்று யோசனை கூறியுள்ளது.

கே: மலையகத் தமிழர்களின் பிரச்சினையில் ஆங்கிலேயர்களும் பங்குபற்ற இடமுண்டா?

ப: இடமில்லை. அவர்கள் மலையகத் தமிழ் மக்களைச் சக்கையாகப் பிழிந்து சாற்றைத் தமது நாட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். இப்பொழுது கப்பலேறவும் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இனி தமிழர்களைப் பற்றி என்ன கவலை?

கே: இந்தியாவில் சிங்களவர்கள் வாழ்கிறார்களா? அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

ப: இருக்கிறார்கள். மிகவும் சொற்பம். "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழி கூட சிங்கள இலக்கியத்தில் இடம் பெறவில்லையே. ஆகையாற்றான் அவர்கள் இச் சிறு தீவினுள்ளேயே அடைந்து கிடக்கிறார்கள்.

ஃ

மு. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: காலம் சென்ற பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் மந்திரிகளாக இருந்து குத்துச் சண்டை போட்ட ஆர். ஜி. பிலிப் கே. எம். பி. புதிய அரசியல் முன்னணி அமைக்கப் போவது எதைக் காட்டுகிறது?

ப: பிலிப் முதல் நம்பர் வகுப்புவாதி என்ற இரகசியம் அம்பலத்துக்கு வருகிறது. இன பேதத்தையும் மத பேதத்தையும் பொதுத் தேர்தல் சமயத்தில் கிளறிவிடச் செய்யும் ஏற்பாடு இது.

கே: தமிழரசுக் கட்சி இந்த மாதம் ஒரு புதிய பத்திரிகை தொடங்குவதாக அறிந்தேன். அது உண்மையா? அப்படியானால்............?

ப: அப்படியானால் என்ன? அது கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகை.

ஃ

சுதந்திரபிரியன்,
கொச்சிக்கடை

கே: சுதந்திரம் கிடைத்ததும் புண்ணிய புருஷர்களாக வாழலாம் என்று எண்ணி மக்கள் தவிப்பது ஏன்?

ப: சுதந்திரம் கிடைத்ததும் சகல புண்ணியங்களும் கிடைத்துவிட்டதாக அவர்கள் கருதுவதே காரணம்.

ஃ

ச. முருகேசு, மட்டக்களப்பு

கே: 'குமரி முதல் சென்னை வரை' என்ற கட்டுரை, சுய புராணமா, மர்மக் கதையா?

ப: கட்டுரையை வாசித்தாலே தெரிந்துவிடுமே அது ஒரு பிரயாணக் கட்டுரை என்பது. தலைப்பை மட்டும் வாசித்துவிட்டா கேள்வி கேட்பது?

ஃ

ஆர். பி. கண்ணன்,
புதுவட்டகுடை

கே: சிலர் தமிழர்களாய் இருந்தும் கூட, சிங்களவரைப்போன்று நடிக்கின்றார்களே?

ப: அவர்களின் இந்த நடிப்பு உண்மையாகி எவ்வளவு விரைவில் சிங்களவர்களாகி விடுகிறார்களோ அவ்வளவு விரைவில் தமிழ் பேசும் இனம் புனித மடையும்.

# செத்தேன் ஐயோ!

**'மட்டுமுனைப் பாவாணர்'**

சிற்றிடை ஒடிந்து வீழ
பொற்கொடிப் பூவை நல்லாள்
பற்றினள் என்னுள்ளத்தை
பாங்குடன் நடக்கலுற்றாள்.
எழிலுடன் பூத்த சோலை
எழுந்த சைந்தாடுதல் போல்
எனனுளம் தவிக்க விட்ட
ஏந்திழை எங்கே போனாள்?
மூலையில் மூன்றாண்டாக
முடங்கிய 'சைக்கிள்' வண்டி
சாலையில் பவனி செல்லச்
சித்தமாய் விட்டதந்தோ!
தெருமுனை திரும்பிச் சென்ற
தோகையைத் தொடர்ந் தேனங்கே
தடியனாய் ஒருவன் வந்து
தடாலென வீழ்ந்தான் முன்னே.
'கண்ணில்லா எருமைமாடா?'
கத்தினான், அவன் சொல்எந்தன்
காதிலே நுழையவில்லை.
கடுவேகமுடனே சென்றேன்.

'எல்' லொன்று போட்ட வண்டி
ஏந்திழை ஓட்டி வந்தாள்;
மெல்லென எந்தன் 'சைக்கிள்'
மோதற்ற, அங்கே வீழ்ந்தேன்.
கொட்டிய இரத்தம் கூட
கவலையை ஊட்டவில்லை,
முன்புறம் சென்ற பூவை
முறுவலைத் தேடலுற்றேன்.
மோதிய சப்தம் அந்த
மோகினி காதுக் கெட்ட
மெல்லெனத் திரும்பிப் பார்த்தாள்
மெய்யது சோர்ந்து போனேன்.
பெண்மையைப் பின்னால் கண்டு
பேதை என் நெஞ்சு வீணாய்
கற்பனை செய்து கொண்ட
கதைகளும் கருத்தும் பொய்யா?
ஐம்பது வயதைத் தாண்டி
அறுபதுள் நுழைந்து செல்லும்
கைப்பெண்ணும் பாட்டி செய்த
குறும்பினால் செத்தேன் ஐயோ!

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
மாயா ஜோதி
ஊது பத்திகளே
சுகந்த வாசனை
நிலைத்து எரியும் தன்மை
நியாயமான விலை
நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.
உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கெய்ரோ மாநாட்டின் சாதனை ★ ஜோன்சன் வெற்றிநிச்சயம்

பிரிட்டிஷ் தேர்தல் முடிவடைந்ததோடு அமெரிக்க ஜனதிபதி தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. ஜனதிபதி ஜோன்சனும், குடியரசுக் கட்சி பிரதிநிதி பெரி கோல்ட்வோட்டரும் ஏற்கனவே தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். "ஜோன்சனுக்கே வெற்றி" என்பதே பலரின் கருத்து.

கெய்ரோ மாநாட்டைச் சீர்குலைக்க சில சக்திகள் முயன்றதென்றும், அச் சக்திகளின் தூண்டுதலே கொங்கோப் பிரதமர் சோம்பேயின் திடீர் பிரவேசமென்றும் கூறப்படுகிறது ஜனதிபதி நாசரின் துணிச்சலான நடவடிக்கைகள் மாநாடு வெற்றிகரமாக நடைபெற பெரிதும் உதவின.

## நேருவுக்கு பின் நாசர்

தான் மட்டும் பதவிக்கு வந்தால் கியூபாவின் அட்டகாசத்தை ஒழித்துக் கட்டிவிடுவதாகவும், வியட்நாம் பிரச்சினையை ஒரே நாளில் தீர்த்துக் கட்டிவிடுவதாகவும், அணு குண்டைப் பந்தாடுவதாகவும் இன்னும் ஏதேதோ வேடிக்கையாகவோ உண்மையாகவோ கூறி பிரசாரம் செய்து வருகிறார் கோல்ட் வோட்டர்.

இதனல், இவர் அமெரிக்க ஜனதிபதியாகப் பதவி ஏற்றால் உலகத்தை யுத்த பூதத்திடம் பலியிட்டு விடுவாரோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஆயினும் ஜோன்சனே ஜனதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவார் என்று உலக அரசியல் அவதானிப்பவர்கள் கூறுகின்றனர்.

### கவர்னர் தேர்தல்கள்

அடுத்த மாதம் நவம்பர் 3-ம் தேதி அமெரிக்காவின் 50 மாநிலங்களில் பாதி மாநிலங்களிலுள்ள வாக்காளர்கள் ஜனதிபதிக்கும் மத்திய சட்ட மன்றத்தினருக்கும் வாக்களிப்பதோடு தத்தம் மாநில கவர்னர்களையும் தேர்ந்தெடுப்பார்கள்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கவர்னர்களில் 12 பேர்களும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த கவர்னர்களில் 3 பேர்களும் மறு தேர்தலுக்கு நிற்கிறார்கள். மற்றப் பத்து மாநிலங்களில் கவர்னர் தேர்தலுக்கு நிற்பவர்கள் இப்பொழுது பதவியில் இல்லாதவர்கள். தற்சமயம் அமெரிக்காவின் ஐம்பது கவர்னர்களில், 35 பேர் ஜனநாயகக் கட்சியினர், 15 பேர் குடியரசுக் கட்சியினர்.

ஒரு மாநிலத்தில் தேர்தல் மூலம் கிடைக்கும் மிக உயர்ந்த பதவி, கவர்னர் பதவியே. கவர்னர் பதவி,

## உலகவலம்

மத்திய அரசாங்கத்தின் மேற் சபையாகிய செனட்டுக்கும், ஏன் ஜனதிபதி பதவியைப் பெறுவதற்கும் முதற் படியாக விளங்கியிருக்கிறது.

மிச்சிகன் மாநில கவர்னர் ஜோர்ஜ் ராம்னி நவம்பரில் மீண்டும் தேர்தலுக்கு நிற்கிறார். சென்ற ஜுலை மாதம் குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு கூடுவதற்கு முன்பு இவர் அக் கட்சியின் ஜனதிபதி அபேட்சகராக வரக்கூடும் என்றுகருதப்பட்டது.

ஜனதிபதி ஜோன்ஸனுடைய மாநிலமாகிய டெக்ஸாசில் ஜனநாயகக் கட்சி கவர்னர் ஜோன் கொனலி மீண்டும் தேர்தலுக்கு நிற்கிறார். இவர்தான் ஓர் ஆண்டுக்கு முன்பு ஜனதிபதி கென்னடி படு

(9-ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் பத்திரிகை மசோதா
## அமைச்சர்களின் உலகவலம்
## ஐ. தே கட்சியினரின் 'தீவிரம்'

# வட கிழக்கை நோக்கி
# அரசியற் கட்சிகள் படையெடுப்பு

மூதவையில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நிறைவெய்திய பத்திரிகை மசோதா, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது பல பிரச்சினைகளுக்கு இலக்காகி ஈற்றில் அடுத்த ஆண்டு பெப்பரவரித் திங்கள் இரண்டாந் நாள் விவாதத்திற்காகப் பிற்போடப்பட்டுள்ளது, வாசகர்கள் அறிந்ததே. இம் மசோதாவைச் சமர்ப்பிப்பதில் அரசாங்கக் கட்சியினர்விட்ட தவறுதலை எதிர்க் கட்சியினர் நல்ல முறையில் பயன்படுத்தியுள்ளனர்.

இம் மசோதா சட்டமாக்கப்படுமாளுல் இந் நாட்டில் ஜனநாயகத்துக்கே இடமில்லாது போயவிடும். தினப் பத்திரிகைகளிலோ அல்லது வாரப் பத்திரிகைகளிலோ





ஆச்சரியப்படுகிறீர்களா? ஸ்ரீதேவியின் படைப்புகள் இருந்தால், நொடிப்பொழுதில் சமையல் செய்து விடலாம் என்பது உங்களுக்குத் தெரியாதா?

திடீர் - உழுந்து வடை மாவு, தோசை மாவு, முறுக்கு மாவு, சாம்பார் பொடி, ரசப்பொடி.

முதலியன சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்டு, பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு எங்கும் விற்பனையாகின்றன. தயாரிப்பு முறைகளைப் பையினுள் காணலாம்.

விநியோகஸ்தர்கள்:

புறக்கோட்டை:- (1) நியூ கந்தையா குரோசரி ஸ்டோர்ஸ், 11, குமார வீதி. (2) ஸ்டர்லிங் புரடக்ட்ஸ் லிட், 99, பிரதான வீதி. (3) M. P. கோமஸ் & Co. லிட், பிரதான வீதி. கொள்ளுப்பிட்டி:- பிரேமசிறி ஸ்டோர்ஸ், 28, தர்மபால மாவத்த. பம்பலப்பிட்டி:- தவச்செல்வம் ஸ்டோர்ஸ், 41, காலி வீதி. வெள்ளவத்தை:- ஸ்ரீ மஹால், 83, காலி வீதி. தெஹிவளை:- ஞெபட் டீ கம்பனி, 174, காலி வீதி. இரத்மலானை:- நெப்டியூன் பார்மஸி, 421 E காலி வீதி. பொரளை:- J. S. பெர்ஞன்டோ, 1203 பொரளை மாடி. நுகேகொடை:- வால்டர் பெரேரா, செனவிரத்ன கட்டிடம், கன்சபாவ சந்தி. நீர்கொழும்பு:- அல்ஹாஜ். A.M.C. மரிக்கார், 158, பிரதான வீதி. குருணுகல்-: முருகன் ஸ்டோர்ஸ்,- 102, புத்தளம் வீதி. யோகவந்தளாவை:- V. E. A. இளையதம்பி. கம்பளை:- கமலா ஸ்டோர்ஸ், அம்பகமுவ வீதி. மட்டக்களப்பு:- ஏறுவூர் பற்று பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம். வடமராட்சி:- சன் ஸ்டோர்ஸ்,பருத்தித்துறை. லியாங்கொட:- பன்வலி - ஹவுஸ், 39, மெயின் வீதி. ஊவாமாகாணம்:- ஜஸ்மின்ஸ், 83, லோவர் வீதி, பதுளை. யாழ்ப்பாணம்:- இஸ்மல்ஜி அமிஜி, 130, ஆஸ்பத்திரி வீதி.

V. P. P. யில் அனுப்பப்படமாட்டாது.

விநியோகஸ்தர் இல்லாத இடங்களுக்கு விநியோகஸ்தர் தேவை.

உற்பத்தியாளர்கள்: நவலங்கா டிரேடர்ஸ்,
(புறக்கோட்டை இலங்கை வங்கிக்கு அருகாமையில்)
212/48, காஸ்வெர்க்ஸ் வீதி, கொழும்பு-11. தொலைபேசி: [illegible]


## வாராசாரம்

உண்மையான செய்திகளை வெளியிட முடியாத நிலை உருவாகும். நாட்டில் வெளியாகும் சகல வெளியீடுகளும் ஆட்சியாளரின் ஊதுகுழலாகவே இயங்கும். இம் மசோதா சட்டமாக்கப்படுமானல் பத்திரிகைத் தொழிலும் இந்நாட்டில் இறந்தொழியும்.

இம் மசோதாவின் விவாதத்தைப் பிற்போட்ட எதிர்க்கட்சியினர் அதேபோன்று, இம் மசோதா சட்டமாகாது ஒழிந்துவிடும் பணியையும் நிச்சயம் செய்தாக வேண்டும் என்ற கருத்து பலரிடம் காணப்படுகிறது.

முதலாவது மசோதா கடந்த வாரம் பிரச்சினையைக் கிளப்பி விட்டு ஓய்ந்து விட்டது. இப்பொழுது இரண்டாவது மசோதா வந்திருக்கிறது இம் மசோதாவும் பல சட்டப் பிரச்சினைகளை எதிர்பார்த்து நிற்கிறது.

இம் மசோதாவும் சட்டமாகாது போனல் அதிக தூரம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பத்திரிகை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையும் வெளியாகியுள்ளது. இக்குழுவின் அறிக்கையில் இப்பொழுது வந்துள்ள இரண்டாவது மசோதாவுக்கு இடமேயில்லை. பத்தி

(9-ம் பக்கம் பார்க்க)

## சந்தியில்

ஸ்ரீறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் மக்களுக்குச் சலிப்புத் தட்டி விட்டது என்ற உண்மை பலரும் அறிந்த பரகசியமாவிட்டது. தனித்து ஆட்சி நடத்த முடியாதுபோகவே இடதுசாரிகளான சமசமாஜிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டார்கள். மக்களுடைய ஆதரவு இக் கூட்டாட்சிக்கும் இருப்பதாக நம்ப முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை ஐக்கிய தேசியக் கட்சியினர் பயன்படுத்திக்கொள்ளப் பிரயத்தனம் செய்ய ஆரம்பித்துள்ளார்கள்.

முன்னுளில் தமிழ் பேசும் மக்களுக்கு வாக்குறுதிகளையாவது வாரி வழங்கிய வள்ளல்களான யூ. என். பி. பெருந்தலைகள் 1956 ம் ஆண்டுடன் தமிழ் பேசும் மக்களிடம் நம்பிக்கை இழந்தவர்களாக, செல்லாக் காசுகளாக ஆகிவிட்டனர்.

அதே வருடம் களனியில் நடந்த மாநாட்டில் 'சிங்களம் மட்டும்' கோஷத்தை வானுயர எழுப்பியவர்கள் அவர்களே! அதே சுலோகத்துடன் ஆட்சிபீடமேற முனைந்தார்கள்—தோற்ருர்கள்.

'தமிழ் மொழிக்குச் சரியாசனமளிப்பேன்,' என்று யாழ்ப்பாணம் சென்றிருந்த அந்நாள் பிரதமரானசேர் ஜோன் கொத்தலாவலை, '100 இருத்தல் மலர் மாலையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு, கூறினர்; ஆனல் களனி மாநாட்டிலே சிங்களம் மட்டும் தீர்மானம் நுழைந்தது. நன்றி கொன்ற செயலால் நாட்டாட்சி மாறியது.

தமிழ் பேசும் மக்களுக்குச் செய்த துரோகச் செயலினை மறந்து விட்டு யூ. என். பிககாரர் மட்டக்களப்புக்கு சென்ருர்களாம். மட்டக்களப்பு வேளாண்மை வயல் அளிக்கும் திரண்ட பணம் மூட்டையாக முடங்கிக்கிடக்கிறது சிலரிடம் இந்தக் காசு பொது மக்களிடம் புளக்கத்துக்கு வர வேண்டாமா?

கிழக்கு மாகாணத்திலுள்ள அரிசி ஆலைகளை அரசாங்கம் சுவீகரிக்கத் திட்டமிட்டுள்ளதையிட்டு சுதந்திரனில் செய்தி வெளியிட்டோமல்லவா? அச் செய்தி சில கிழக்கு மாகாண மில் 'முதலாளி'களைத் திகிலடையச் செய்திருக்கிறது.

ஒரு மில் பிரமுகர் மில்களைக் காப்பாற்ற ஒரு புது வழியை நாடினராம். யூ. என். பி. ஆட்சி ஏற்படுமானல் நிச்சயமாக அரிசி ஆலைகள் சுவீகரிக்கப்பட மாட்டாது என்று கற்பனை பண்ணினர். திரு. டி. எஸ். சேனநாயக்கா முன்பு மட்டக்களப்புக்கு வந்திருந்த போது எடுத்த ஒரு படம் ஒன்றில் இந்நபருடைய பிம்பமும் இருக்கிறதாம். அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு யூ என். பி. தலைவர்களை அண்டி, தானறியாச் சிங்களத்துடன் தட்டுத் தடுமாறிப் பிதற்றினராம்.

எப்படியோ யூ. என். பியினர் வருகை கிழக்கு மாகாணத்திலும்—ஏன் வடக்கு மாகாணத்திலும் சில பண மூட்டைகளை அவிழ்த்து விடும் என்று கருதுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரப் பிரமுகர்

ஒக்டோபர் ஐந்தாம் திகதி, உலகத்தின் கண்கள் எகிப்து நாட்டின் தலை நகராகிய கெய்ரோவிலேயே பதிந்திருந்தன.

அன்று தான், மண்டல சார்பற்ற, 47 நடுவுநிலைமை நாடுகளின் மாநாடு ஆரம்பமாகியது.

இந்த மாநாட்டை ஒழுங்கு செய்வதில் தீவிர முயற்சி எடுத்தவர், ஜனாதிபதி நாசர் ஆவார். அவரே மாநாட்டுக்கும் தலைமை தாங்கினார்.

அவரது தலைமையின் கீழ் மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது. உலக சமாதானத்துக்கும், நாடுகளின் சக வாழ்வுக்கும் ஆக்க பூர்வமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காலனி ஆதிக்கம், புதிய காலனி ஆதிக்கம் ஆகியவற்றை ஒழிக்க வேண்டுமென கெய்ரோ மாநாடு தீர்மானித்துள்ளது, ஜனாதிபதி நாசருக்கு விசேஷ திருப்தியளிக்கக் கூடிய வெற்றியாகும்.

பிரிட்டிஷ், பிரெஞ்சு காலனி ஆதிக்கத்தின் கீழ் எகிப்து அகப்பட்டிருந்த காலத்தில், தமது தாய் நாட்டைச் சுதந்திர நாடாக்கி, பொருளாதாரம், கலாச்சாரம், சமூக வாழ்வு ஆகிய பல துறைகளிலும் முன்னேற்ற வேண்டுமென்ற தீவிர எண்ணங்கொண்டிருந்தார் இளைஞர் நாசர்.

எகிப்திலேயே ஓடும் ஜீவநதியானநைல் மூலம் எகிப்து மக்களுக்கு எவ்வித நன்மையுமின்றி, அந்நியரான பிரிட்டிஷாரும், பிரஞ்சுக்காரரும் சூயஸ் கால்வாய் மூலம் கொள்ளைப் பணம் சம்பாதிப்பதைக் கண்டு அவர் கொதித்தெழுந்தார். பயன்—பலத்த எதிர்ப்பையும் மீறி, துணிவுடன் சூயஸ் கால்வாய் தேசியமயமாக்கப்பட்டது. அச் சாதனை மூலம் நாசர் உலகத்தின் கவனத்தை ஈர்ந்தார்.

## ஜனாதிபதி நாசர்

ஜனாதிபதி நாசரின் தலைமையில், அரபு உலகம் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வருகிறது இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, பர்மா, கானா, போன்ற பல நாடுகளுடனும் ஐக்கியத்தை வளர்த்து, பரஸ்பரம் பொருளாதார, அரசியற் பிரச்சினைகளை அலசி, பல துறைகளிலும் ஒருவர்க்கொருவர் உதவி செய்யும் வகையில் அரபிய நாடுகள் செயற்படுகின்றன.

ஆனால், இவரை வேறு கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்களும் உண்டு. அவர்களில் ஒருவர் தான், அழையா விருந்தினராகக் கெய்ரோவுள் நுழைந்து, அடை பட்டுக் கிடந்து, வீடு நோக்கிப் புறப்பட்ட கொங்கோப் பிரதமர் ஷோம்பே.

நாசரைப் பற்றி அவர் என்ன சொல்லுகிறார் தெரியுமா? 'ஆபிரிக்கக் கண்டத்தையே அடக்கி ஆளுவதே நாசரின் நோக்கமாகும்' என்கிறார்.

ஆனால், நேருவின் மறைவுக்குப் பின், மண்டல சார்பற்ற நாடுகளின் தலைவர்களுள் ஜனாதிபதி நாசரே, சகதியும், செல்வாக்கும் வாய்ந்தவராக இன்று பொதுவாகக் கருதப்படுகிறார்.

# பாட நூல்களை வெளியிடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு உடுவில் பிரதிநிதி கண்டனம்

'பள்ளிப் பிள்ளைகளுக்கான பாட நூல்களை அரசாங்கம் வெளியிட முனைவது இந்நாட்டுக்கு—குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு—பேராபத்தை உண்டு பண்ணும்,' என்று உடுவில் பாராளுமன்ற உறுப்பினரான திரு. வி. தர்மலிங்கம், வலிகாமம் மேற்கு உள்ளூராட்சி மன்றங்களின் தமிழ் இலக்கிய விழா புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: நமது கலை, கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு நூல்கள் மிகவும் அவசியம். இத்தகைய நூற்காட்சியினை ஒழுங்கு செய்தவர்களைப் பாராட்டுகின்றேன். பண்டைய மன்னர்கள் இலக்கியம், கலை வளர எவ்வளவோ செய்தனர். இன்று அப் பணியை உள்ளூராட்சி மன்றங்களே செய்ய வேண்டியுள்ளது.

சிந்தனைச் சிற்பிகளின் உள்ளத்தில் எழுகின்ற கருத்துக்களும் சிந்தனைகளும் தான் நூல் வடிவு பெற்றுத் தலைமுறை தலைமுறையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு எமக்கு விடப்பட்டுள்ள பொக்கிஷங்கள். எவ்வித கட்டுப்பாடுமற்ற நிலையில் ஒரறிஞன் எழுதும் நூல் தான் என்றென்றும் மக்களுக்குப் பயன்படக் கூடிய பொக்கிஷங்களாகத் திகழ முடியும்.

### இலக்கிய வளர்ச்சி தடைப்படும்

கூட்டு அரசாங்கம் பாட நூல்களை வெளியிடுவதாகத் தனது தனியுரிமையாக்கிக் கொள்வதென முடிவு செய்துள்ளமை பொதுவாக நாட்டுக்கும் குறிப்பாக இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களுக்கும் பேராபத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

அரசாங்கத்தின் இம் முடிவு தேசிய கல்விக் குழுவின் ஆலோசனைகளுக்கு முற்றிலும் முரணானது. ஒவ்வொரு பாடத்துக்கும் பாட நூல்கள், வெளிவருவதை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் என்று இக் குழுவினர் கூறியுள்ளனர். ஆனல் அரசாங்கத்தின் முடிவு கையாளப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரே தன்மையான இரண்டொரு நூல்கள் மாத்திரம் வெளிவரும்.

அரசாங்கம் பாட நூல்களை வெளியிடும் தனியுரிமையைப் பெற்றதும், இத் தொழிலில் தங்கியிருந்த நிலையங்கள் மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவ்வாறு இவை மூடப் பெற்றால் பின்னணி இலக்கியங்களை மட்டும் பிரசுரிப்பதற்கு வசதியுள்ள எந்த நிலையமும் இருக்கமாட்டாது. பின்னணி இலக்கியம் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது.

### சர்வாதிகாரத்திற்கு வழி

எனவே அரசாங்கத்தின் இம்முடிவு கல்விக் காரணங்களுக்காகச் செய்யப்படாது அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டதாகவே தெரிகிறது. இம்முடிவு நாங்கள் ஒப்புக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சாசனத்தையும் மீறுகிறது.

தனி மனித உரிமைகளை வேண்டுமென்றே திட்டமிட்டு அபகரிக்கும் இவ்வரசாங்கம் பாட நூல்களை ஒரு கருவியாகக் கொண்டு மக்களுடைய சிந்தனைச் சுதந்திரத்துக்கு முற்றுப்புள்ளியிடுமென்பதில் எதுவித சந்தேகமுமில்லை. சர்வாதிகார நாடுகள் இப்படியான நடவடிக்கைகள் மூலம் தான் மக்களின் சிந்தனைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தின வென்பது சரித்திரம் கண்ட உண்மை.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் போர்வையில் அரசாங்கம் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் இந் நடவடிக்கையும் பத்திரிகைச்சுதந்திரம் போன்ற சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சி போல், நாட்டு மக்களுடைய அறிவியல் கலாச்சார வளர்ச்சியை அரசாங்கம் விரும்பும் பாதையில் இழுத்துச் செல்லும் முயற்சி ஒரு கட்டமாகும்.

### உண்மை திரிக்கப்படும்

அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் போதிய நூல்களில்லாதபடியால் அவற்றை அரசாங்கம் பிரசுரிப்பதில் ஓரளவு நியாயம் உண்டு.

கணித,அறிவியல் உண்மைகளை அதிகம் திரிக்க முடியாது. இந்த அரசாங்கம் தானும் 'இரண்டும் இரண்டும் ஐந்து' என்று கூறும் கணித நூலை வெளியிடத் துணியாது.

ஆனல் வரலாறு இலக்கியம், சமயம் போன்ற பாட நூல்களை இவ்வரசாங்கம் வெளியிடத் தொடங்கினல் அரசாங்கம் விரும்பியவாறு உண்மைகளைத் திருத்தி தமிழ், மக்களுக்கும் ஏனைய சிறுபான்மையினங்களுக்கும் இந்நாட்டின் சரித்திரத்திலே எதுவித இடமும் இல்லாமல் செய்து விடலாம்.

சமீபத்தில் எமது சர்வகலாசாலை வெளியிட்ட இலங்கையின் வரலாற்று நூலில் தமிழருடைய வரலாறு புறக்கணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அரசாங்கம் வெளியிடும் நூல்கள் இதிலும் மோசமாகவேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

# வைத்தியசாலை பெரிது மருந்துதானில்லை

# கிழக்குத் தபால்

## அன்புடையீர்,

கடந்த வாரம் சுதந்திரன் இதழில் முதல் பக்கத்தில் திருகோணமலை அரசாங்க பொது ஊழியர்சங்க ஆண்டு விழாப் படம் ஒன்றைப் பிரசுரித்திருந்தோம். இச் சங்கத்தினை நிறுவுதற்கு பெரு முயற்சி எடுத்து, சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணி புரிந்த திரு இ. நவரத்தினம் ஆண்டறிக்கை வாசிப்பதைஅப் படம் காண்பித்தது. திரு. நவரத்தினம் அகால மரண மெய்தி விட்டார் என்ற துக்ககரமானசெய்தியை இவ்வாரம் கூறவேண்டியிருக்கிறது.

### பிரஜா உரிமை

'படிப்பறியா காலத்தில், பிறப்புப் பதிவு அவசியம் என்பது தெரியாத வேளையில் வாழ்ந்தவர்களின் பிறப்பை நிரூபிக்கும்படி இக்காலத்தில் வாழும் மக்களைக் கேட்பது அநீதியானதாகும். ஆகவே, பிரஜா உரிமைப் பிரச்சினையில் வீண் கெடுபிடிகளை அரசு கடைப்பிடிப்பது தவிர்க்கப்பட வேண்டும்' என்று தமிழ் பிரதேச உள்ளூராட்சி மன்றத் தலைவரும் திருமலை நகர சபைத் தலைவருமான டாக்டர் சி சிவானந்தம், பிரஜாவுரிமை விசாரணைசபைக்கு ஒரு மகஜரை அனுப்பியிருக்கிறார்.

### மூதூர் முதல்வர்

வடகொரியா, செஞ்சீன ஆகிய நாடுகளில் தனது ஒருமாத காலசுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு மூதூர் முதல்வர் ஜனப் எம். ஈ எச் முகம்மதலி இலங்கை திரும்பியுள்ளார். இவ்விரு நாடுகளிலும் சிறுபான்மையோர்.பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட்டிருக்கின்றன என்பதையிட்டு நன்கு ஆராய்ந்திருப்பதாக ஜனப் முகம்மதலி எம்மிடம் கூறினர்.

### கந்தூரி

மூதூர் நத்வத்துல் உலமா சபையாரின் 15வது வருட புகாரி கந்தூரி மூதூரில் 11-10-64ல் வெகு சிறப்பாக நடைபெற்றது. மூதூர் முதல்வர் ஜனப் முகம்மதலி உட்பட பல்லாயிரக்கணக் முஸ்லிம் மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

### சிங்களப் படிவங்கள்

பங்கீட்டுப் புத்தகங்களைப் பெறுவதற்குக் கொடுக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவங்கள் கூடத் தமிழில் அனுப்பாமல் தனிச் சிங்களத்தில் அனுப்பிவைக்கப் படுவதனல் கல்குடாத் தொகுதிப் பொதுமக்கள் பெரிதும் துன்பத்துக்குள்ளாகின்றார்கள். நூறு சத விகிதம் தமிழ் பேசும் மக்கள் வதியும் இப் பிரதேசத்தில் சிங்களப் படிவங்களை அனுப்புவது அநீதியானதென உள்துறை அமைச்சுக்கு கல்குடா பிரதிநிதி திரு. பொ. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

### மருந்துத் தட்டுப்பாடு

மட்டக்களப்பு அரசாங்க வைத்திய சாலை இப் பிராந்தியத்திலுள்ள பல சிறிய வைத்தியசாலைகளுக்குத் தலைமை தாங்கி வருவதாகும். ஆனல் இவ் வைத்தியசாலையில் எப்பொழுதும் மருந்துத் தட்டுப்பாடு இருந்து வருவது, பொதுமக்களுக்கும் டாக்டர்களுக்கும் பெரும் பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது.

இவ் வைத்தியசாலைக்கு போதுமான மருந்துக்களை அனுப்பிவைக்குமாறு பட்டிருப்பு எம். பி. திரு சி. மூ. இராசமாணிக்கம் சுகாதார அமைச்சைக் கேட்டுக் கொண்டுள்ளார்,

### காளியாமடு

நெங்கலடிக் கிராமத்தை அடுத்துள்ள பழம் பெருமை வாய்ந்த காளியாமடு கற்பக விநாயகர் ஆலயப் புனருத்தாரண வேலைகளுக்காக நிதி திரட்டும் பொருட்டு ஓர் கலைவிழா கடந்த வாரம் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. மட்டக்களப்பு இசை நடன கலாமன்றத்தினரின் பாடல் நடனம், வாத்தியக் கச்சேரிகள் இடம்பெற்றன. நடன நட்டுவாங்கத்தை நடன ஆசிரியர் திரு. கைலாயபிள்ளை கவனித்தார்.

—பாடும் மீன்—




# ரிஷி அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
விலை ½ ருத்தல் ரூபா 22/50
(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நீண்ட கதை
# ஏக்கம்

அன்று ஞாயிற்றுக் கிழமை. விருந்தாளிகளையும் கூட்டிக்கொண்டு அவர் வருவார் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் வருவதற்கு முன்னதாகவே சமையல் வேலைகளை மும்முரமாக முடித்தாகவேண்டுமே! எப்படியோ எல்லா வேலைகளையும் முடித்து விட்டேன். குழம்பு மட்டும் தான் அடுப்பில் இருந்தது.

அரவிந்தன்—அவன் தான் எங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் பூத்த அன்பு மலர்—தொட்டிலில் கிடந்தபடியே அழ ஆரம்பித்துவிட்டான்.

கைஉதவிக்குக்கூட யாரும் இல்லை. தமிழ் வாத்தியார் வீட்டில் வேலைக்காரர் வைத்துக்கொள்ளக் கட்டுபடியாகுமா என்ன? குழந்தை அழுகிறது. குழம்பு கொதிக்கிறது. தொட்டிலடிக்கும் உடனே ஆள்தேவை. அடுப்படிக்கும் ஆள் தேவை. நான் ஒரே சீவன் எங்கு செல்வது?

செயலாற்ற முடியாத ஒரு விஞடி. 'மடார்'...'ஐயோ' என்று கதறியபடி கீழே விழுகின்றேன். அவர்தான்—என் முதுகில் ஓங்கிக் குத்திவிட்டு கோபத்துடன் என்னைப் பார்த்துக்கொண்டு நிற்கிறூர். முதுகேபிளந்துவிட்டது போன்ற வலி-தாங்க முடியவில்லை.

அழுதுகொண்டிருந்த அரவிந்தனை அரவணைக்க அவர் போய்விட்டார். அழுது கொண்டே அடுப்படி அலுவல்களை முடித்துக்கொண்டு அவர் அறைக்குச் சென்றேன். மணமாகி இத்தனை வருடங்கள் என்னை ஒரு நாளாவது சினந்துகொள்ளாத ஒருவர் இப்படித் திடீரென்று கை நீட்டி அடிப்பதென்றால்...?

அவருடைய கண்களில் குறும்பு கொப்பளித்தது. வாய் சிரித்தது. எனது வேதனை அவருக்குவிளையாட்டுப் போலும்! வாய்விட்டுச் சிரித்தார். அவருடைய இடது கை எனது இடையைச்சுற்றியது...மெதுவான குரலில்..'விஜயா! உன்னை அழ வைத்து வேடிக்கைபார்க்க எத்தனை வருடங்கள் காத்திருந்தேன் தெரியுமா? நானும் தான் என்னவெல்லாமோ செய்துபார்த்தேன், உன்னுடைய கண்ணீரைப் பார்க்க. நீ சிரித்துச் சமாளித்து விடுவாய். இன்று தான் எனது எண்ணம் ஈடேறியது. வேண்டுமென்றே தான் இன்று உனக்கு அடித்தேன். எங்கே சிரி...சிரி...'

சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டேன். ஆனால் கண்ணீர்தான் நின்றபாடில்லையே! இப்பொழுது எனது கண்கள் சொரிவது ஆனந்தக் கண்ணீர். ஆனந்தக் கண்ணீரா? ஆம்; ஆனந்தக் கண்ணீரே தான்! அப்படியானுல் அவருடைய அந்த முரட்டுத் தனத்தை நான் எதிர்பார்த்திருந்தேனு?

மாணவர்களுக்குப் பொல்லாத வாத்தியாராகவும், ஊருக்கு முரடராகவும் உள்ள என் கணவர் என்னிடம் தனது முரட்டுத்தனத்தை ஒரு முறையாவது காட்டமாட்டாரா, என்று நான் பலகாலம் ஏங்கியிருந்தேன். கேட்டால் மற்றவர்கள் சிரிக்கும் ஓர் அர்த்தமற்ற பைத்தியக்கார ஏக்கம் தான்! இருந்தும் அப்படி ஓர் ஆசை எனக்கு. இதை அமுலாக்கப் பலதடவைகளில் அவருக்குக் கோபம் வரத்தக்கதாக நடந்தும் இருக்கின்றேன். இருந்தும் என்ன செய்ய? அவருக்குத்தான் என் மீது கோபமே ஏற்படுவதில்லையே!

நல்ல வேளை; என்னைப் போல் அவருக்கும் ஓர் அர்த்தமற்ற ஆசை—என்னை அழ வைத்துப் பார்க்கவேண்டுமென்று! அந்த ஆசை மட்டும் அவருக்கு இல்லாதிருந்தால் என் ஏக்கம் நிறைவேறியது போலத்தான்!

—விஜயா—

# அழகுக்கு அழகு அளிக்கும் அழகு சாதனங்கள்

எகிப்து நாட்டு எழிலரசி கிளியோப்பாத்ராவை சரித்திர ஏடுகள் வர்ணிக்கின்றன. ஆனுல் அவள் இயற்கை அழகியே அல்ல என்றும் சில ஏடுகள் கூறுகின்றன. செயற்கைச் சாதனங்களைக் கொண்டே அவள் தன்னை அழகு படுத்திக் கொண்டாளாம்.

பெண்கள் எல்லோரும் இயற்கை அழகிகளல்லர் தான். இளமையில் எல்லாப் பெண்களிடத்திலும் ஒரு வகைக் கவர்ச்சி தென்படும். அக் கவர்ச்சியை மேம்படுத்திஞல் அங்கே அழகு இயல்பாகவே துளிர்க்கிறது.

தில்லை. பலன் வேறு விதமாகவே முடிகிறது. ஆகவே தமிழ்ப் பெண்கள் இயற்கை அளித்துள்ள எழில் சாதனங்களைப் பாவிப்பதன் மூலமே

### திருமதி சரசுவதி முருகேசு

தங்கள் அழகை விருத்தி செய்து கொள்வது அவசியம்.

பண்டைத் தமிழ்ப் பெண்களுக்கு உதவியாகவிருந்த மஞ்சள், எலுமிச்சம் பழம், முதலிய இரண்டையுமே

**அரிவையர்க்கு அழகுதேவை. அழகைக் கொடுக்கும் சாதனங்கள் எவை? பண்டையத் தமிழ் பெண்டிர் கண்ட முறைகளை நாமும் கொள்வது அவசியம். அடுத்த இதழிலிருந்து அழகு சாதனங்களைச் செய்யும் முறைகளை திருமதி சரசுவதி முருகேசு விளக்குகிருர்.**

அழகு சாதனங்களைப் பாவிப்பது தீதல்ல. நமது பண்டைய இலக்கியங்களைப் பார்த்தால், தமிழகப் பெண்டிர் செயற்கைச் சாதனங்களைக் கொண்டே தங்கள் அழகுக்கு அழகு செய்துள்ளனர் என்பதைக் காண முடிகிறது. மஞ்சளும், எலுமிச்சம் பழமும், சந்தனமும் தமிழகப் பெண்டிரின் அழகுக்கு அணி செய்துவந்துள்ளன.

இந்நாட்களில் சோப்புக்களையும், பவுடர்களையும், ஸ்னே, லோசன் முதலியவற்றையுமே நமது சகோதரிகள் நம்பிக்கொண்டுள்ளனர். இன்று இப் பொருட்கள் வெறும் வர்த்தக நோக்கோடு, மட்டுமே ஆக்கப்படுவதால் கலப்படங்களே அதிகரித்து விடுகின்றன. நமது சகோதரிகள் இப்பொருட்களைப் பாவிப்பதனுல் எதிர் பார்த்த நன்மை கிடைப்ப

கைக் கொள்வது இன்றியமையாததாகும். சந்தனம் இப்பொழுதெல்லாம் கிடைப்பது கஷ்டமாதலினுல் அதை விட்டுவிடலாம்.

மஞ்சளைத் தினசரி குளிக்கும்போது உடம்பில் தேய்த்துக்கொள்ளல் வேண்டும்.

## கருவுக்குச் சிகிச்சை

பரம்பரை வியாதிகள் சில உள்ளன அல்லவா? இவை தொடர்பாக தந்தை வழி மகனுக்கோ, தாய் வழி அவள் குழந்தைகளுக்கோ ஏற்பட்டு விடுகின்றன.

இத்தகைய பரம்பரை நோயைத் தடுக்கும் முறையினை இப்பொழுது ஆராய்ந்து வெற்றிகண்டுள்




# மங்கையர் சங்கம்

கெட்ட கிருமிகளையும் மஞ்சள் அணுக வொட்டாது. எலுமிச்சம் பழச் சாறு உட்கொள்ளுவதற்கும் சிறந்தது. பெண்களின் சருமத்தை மென்மையுடையதாக்க தேசிக்காய்த்தோலில் உள்ள எண்ணெய் உதவுகிறது. சருமத்தில் ஏற்படக்கூடிய சகல நோய்களுக்கும் இது ஒரு சிறந்த நிவாரணி.

ளனர், அமெரிக்க டாக்டர்கள்.

கருவிலிருக்கும் 4000 குழந்தைகளின் இரத்தத்தை எடுத்துப் பரிசிலனை செய்து பார்த்தார்களாம். சராசரி 6 விதமான குழந்தைகளுக்குப் பரம்பரைநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாம். கருவிலிருக்கும் போதே இத்தகைய நோயைக் கண்டிக்கும் வைத்திய முறைகள் கையாளப்பட்டு வந்தால் இந் நோய்களைத் தடுத்துவிட முடியும் என்று இந்த டாக்டர்கள் கூறுகின்றுர்கள்.



அண்ணாமலை பல்கலைக் கழக இசைக் கல்லூரியில் பயிற்சி பெற்றுத் திரும்பிய குமாரி சிவநாயகி சிவகுரு அவர்களின் வீணை அரங்கேற்றம் கடந்த 10ம் திகதி பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி நிதிக்காக நிகழ்ந்த இக்கச்சேரிக்கு ஏராளமான இரசிகர்கள் வந்திருந்தனர்.

## இது என்ன விழா?

ஐயா,

கடந்த 40 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு அரும் பெரும் தொண்டாற்றிய விவேகானந்த வித்தியாலயம் இன்று மிகக் கேவலமான முறையில் செல்லுவதை எண்ணிப் பழைய மாணவர்களாகிய நாங்கள் வேதனை யடைகின்றேம்.

11-10-64ல் நடைபெற்ற ரசுவதி பூசையிலே மதுசபானதை யேறிய காடையர் ஊ ள மலர்ந்திருந்தனர்.

பழைய மாணவர் மன்றத்தினை அமைக்கப் பல முறை கோரிக்கை விடுத்தோம். ஆனுல் இடம் தரப்படவில்லை.

தமக்குச்சாதகமானவர்கள் சிலரை வைத்துக் கொண்டு ஓர் சங்கம் அமைத்து சரசுவதி பூசையையும் நடத்திஞர் தலைமை ஆசிரியர் பழைய மாணவர்களான எங்களைப் புறக்கணித்ததற்கான காரணம் கேட்கச் சென்ற எங்களை வெருட்டுவதற்காக மதுபோதை ஏறிய ஒரு காலிக் கூட்டம் வேறு தயாராயிருந்தது என்பதை வேதனையுடன் குறிப்பிடுகிறேன்.

தத்தம் பாடசாலைகளின் நலனையே நாடவேண்டிய தலைமையாசிரியர்கட்கு இத்தகைய செயல் தகாது.

"தமிழரசி"

கொழும்பு-15

## பரவசமானேம்

ஐயா,

புதிய பொலிவோடு 'சுதந்திரன்' தோன்றியதைப் பார்த்துப் பரவசப்பட்டோம். இதே போன்று பல புதிய அம்சங்களைச் சேர்த்து மகிழ்விக்க வேண்டுகிறேம்.

மூ. வடிவேல்

கண்டி.

## பிளவு இல்லை

ஐயா,

'நாம் தமிழர் இயக்கத்தில் பிளவு' என்ற தங்கள் செய்தி கண்டு திகைத்தேன்.

கடந்த மாதம் மதுரையில் நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் திரு. ஈரோடு சின்னச்சாமியும், திரு. கா. சிவப்பிரகாசமும் 5 ஆண்டுகளுக்கும் 3 ஆண்டுகளுக்குமாக இயக்கத்திலிருந்து நீக்கிவைக்கப்பட்டனர். இயக்கத்தில் பிளவு என்ற செய்தி தவருனதாகும்.

ஹ. மு. வருசைஅகமது
பண்டாரவளை.

## ... குரல்

சகோதரிகளே!

தங்கள் வீடுகளிலேயே இலகுவாக, குறைந்த பொருட் செலவில் அழகு சாதனங்களைச் செய்யும் முறைகளை சகோதரி சரசுவதி முருகேசு கூறவிருக்கிருர். அத்துடன் சமையல் பகுதியும் அடுத்த வார இதழிலேயே ஆரம்பிக்கிறேம். உங்கள் ஆலோசனைகளையும் வரவேற்கிறேம். —செல்வி அக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கு தங்கவேலுவின் பரிகாரம்

ஆமாம்! சின்னக் காஞ்சிபுரத்தில் தான்நமது அறிஞர் அண்ணா பிறந்து —வளர்ந்து —தவழ்ந்து—விளையாடிப் பெரியவனுகிய இல்லம் இருக்கிறது. நாம் காஞ்சியில் நின்ற சமயம் அறிஞர் அண்ணா சென்னையில் சிறையில் இருந்தபடியால், அவரைப் பார்க்க வாய்ப்புக் கிட்டவில்லை. அவருடைய 'தொத்தா'வின் ஈமச்சடங்கில் கலந்து கொள்வதற்காக 'பரோல்'லில் காஞ்சிக்கு வந்திருந்த அவர் இரண்டு தினங்களுக்கு முன்னம் தானும் சென்னைச் சிறைச்சாலைக்குச் சென்றாராம்.

அந்த மேதையைத்தான் நம்மால் பாக்க்க முடியவில்லை. அந்த மாமேதையின் இல்லத்தையாவது கண் குளிரக்கண்டு விட்டுத் திரும்புவோம்.

ஒன்றல்ல; இரண்டல்ல; மொத்தம் மூன்று இல்லங்கள்



அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணாவுக்குச் சின்னக் காஞ்சி புரத்தில் இருக்கின்றன. அந்த மூன்று இல்லங்களையும் வெளியில் இருந்தபடியே பக்தி சிரத்தையுடன் பார்த்து வணங்கி விட்டு, நாம் முகாமிட்டிருந்த 'ஜவுளிக்கடைச் சத்திரத்து'க்கு வருகின்றோம் நாம்.

## மீண்டும் சென்னைக்கு

காஞ்சிபுரத்தில் ஜவுளிக் கடைகள் ஜாஸ்தி என்பதற்காகவோ என்னவோ தெரியாது; புதிதாக அங்கு நிர்மாணித்துள்ள சத்திரத்துக்கும், 'ஜவுளிக் கடைச் சத்திரம்' என்றே பெயரிட்டிருக்கின்றார்கள்!

காஞ்சியை விட்டுப் புறப்படும் நேரம் அண்மிவிட்டது. காஞ்சி பஸ் நிலையத்தில் கம்பீரமாக நின்று சென்னை 'எக்ஸ்பிரஸ்'ஸில் நாம் இதோ ஏறிக்கொள்ளுகின்றோம்.

'டாண்' என்று சொகுசாகக் கொண்டுவந்து சென்னையில் நம்மை இறக்கி விடுகின்றது பஸ்.

'அப்புறம்?'

## யார் இந்த குமாரி விமலா?

அப்புறமென்ன? கவிஞர் காசி ஆனந்தனும், மானவரும் 'ட்ராப்' பண்ணி வைத்திருந்த 'புரோகிராம்' பிரகாரம் காரியங்கள் 'மள மள' வென்று நிகழ்கின்றன.

முதலாவதாக நமது நகைச்சுவை நடிகர் தங்கவேலுவைச் சந்திக்கப் புறப்படுகின்றோம் நாம். நாமாகக் கையை வீசிக்கொண்டு தங்கவேலுவைப் பார்க்க நாம் போய்விடவில்லை. ஒரு சினிமா நடிகையே நமக்கு வழி காட்டியாகக் கூட வருகின்றார்!

அந்த நடிகை வேறு யாருமல்ல; குமாரி விமலாதான் அந்தக் குட்டி நடிகை!

என்ன விழிக்கின்றீர்கள்? சிவாஜி கணேசனின் வெளியீடான 'பார் மகளே பார்' பார்த்திருக்கின்றீர்கள் அல்லவா? அதில் சிவாஜியின் இரண்டு பெண்களாக விஜயகுமாரியும், புஷ்பலதாவும் நடிக்கின்றார்கள் அல்லவா? இந்த இருவரின் இளம் பிராயத்தில் இரண்டு சிறுமிகள் நடிக்கிறார்கள் அல்லவா? அவர்களில் ஒருத்திதான்—

## குமரி முதல் சென்னை வரை

## (26)

அதாவது சின்னப் புஷ்பலதாவாக வருபவர் தான் இந்தக் குட்டி நடிகை விமலா!

இந்த விமலாவையும், இவ்ளுடைய அத்தையையும் சென்னையில் அவர்கள் இல்லத்தில் சென்று பார்க்கின்றோம். விமலாவின் அத்தை இருக்கின்றாரே அவர்களும் ஒரு நடிகைதான்!

பி. யூ. சின்னப்பா நடித்த 'ஜகதலப்பிரதாபன்' பார்த்திருக்கின்றீர்கள் அல்லவா? அதில் அடிக்கடி தோன்றி, 'ஜகதலப்பிரதாப'னுக்கு அருள்பாலிக்கும் காளி வேறு யாருமல்ல; இந்த விமலாவின் அன்னைதான்!

## இலங்கையரா?

"விமலாவைச் சினிமாவில் சேர்த்த பெருமை உங்கள் இலங்கையைச் சேர்ந்த ஒருவரையே சாரும்!" என்று அந்த அம்மையார் சொல்லவும் நாம் சற்று அதிர்ச்சியுறுகின்றோம்.

"யார் அம்மா அந்த இலங்கையர்?"

"ஏன் உங்களில் யாராவது சினிமாவில் நடிக்க வேண்டுமா?"

"அப்படி ஒன்றுமில்லை. எங்கள் கோஷ்டியில், 'மைனர்' மஹாலிங்கம் என்றும், 'காதல் மன்னன்' கோபால் என்றும் இருவர் வந்துள்ளனர். அவர்களுக்கு நீண்ட நாளாக இந்தச் சினிமாவில் நடிக்க வேண்டுமென்று ஆசை. அதனுல் தான்..."

நாம் இப்படிக் கூறியது தான் தாமதம். நம் கூட வந்த, கோபாலும், மஹாலிங்கமும் கொடுத்த ஒரு 'போஸ்!' சிவாஜியும், எம். ஜி. ஆரும் எந்த மூலைக்கு?

'எங்க பொண்ணு விமலாவைச் சினிமாவில் சேர்த்த பெருமை உங்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த இரா. பத்மநாதன் அவர்களையே சார்ந்தது' என்றார் அந்த அம்மையார்.

இதைக் கேட்ட நமக்குப் பெருமையால் உடல் சிலிர்த்தது. ஈழத்தில் பிறந்த ஒருவர் இந்திய சினிமா நடிகையின் மகளுக்குச் சினிமாவில் சேரச் சந்தர்ப்பம் எடுத்துக்கொடுத்தென்றால் சாதாரணமா?

## குட்டி நட்சத்திரங்கள்

இந்தக் குட்டி நட்சத்திரம் விமலாவின் வீட்டில் நாம் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அவளுடைய வீட்டுக்கு அணித்தாயுள்ள இன்னுமொரு குட்டி நட்சத்திரத்தையும் சற்றுப் பார்த்துவிட்டு, அப்பால் தங்கவேலுவைப் பார்க்கப் புறப்படுவோம்.

இந்தக் குட்டி நடிகர் வேறு யாருமல்ல; பால நடிகர் தசரதனே அவர்! 'நானும் ஒரு பெண்' படத்தில் எம். ஆர். ராதாவின் அருமாந்த புதல்வனாகத் தோன்றி சக்கை போடு போட்டிருக்கின்றாரே! அவர் தான் தசரதன். நாம் இந்தியாவில் பார்த்த எம். ஜி. ஆர். நடித்த 'பரிசு' படத்திலும் இவரைப் பார்க்கலாம்!

நாம் இவர் வீட்டுக்குப் போன சமயம் பக்கத்து வீட்டுப் 'பசங்க'ளுடன் முண்டடித்து விளையாடிக் கொண்டிருந்தார் தசரதன்!



கே. ஏ. தங்கவேலு

அவரையும் கண்டு பேசிவிட்டு, விமலா முன் செல்ல, அவளைப் பின் தொடர்ந்து நாம் செல்லுகின்றோம், நடிகர் தங்கவேலுவின் நாடகக் கம்பெனி ஆபீஸுக்கு! (விமலா கூடத் தற்சமயம் தங்கவேலுவின் நாடகக் கம்பெனியில்தான் நிரந்தர நடிகையாக இருக்கின்றார்.)

சில்க் வேஷ்டி, சில்க் ஜிப்பா, வைர மோதிரம், தங்கச் செயின் என்று 'தகதக' என்று தங்கமாகக் காட்சி தருகின்றார் தங்கவேலு! பல் இடுக்கில் பீடாவும், விரல் இடுக்கில் 'கோல்ட் பிளாக்' சிகரெட்டும் அணி செய்கின்றன.

நம்மையெல்லாம் இலங்கைக்காரர்கள் என்று தெரிந்து கொண்டதும் உடனடியாக ஒரு கேள்வியை 'டணல்' என்று தூக்கிப் போட்டார் தங்கவேலு.

வளரும்

# சிக்கலான சிறி பிரச்சினை——சீராக வழி உண்டா?

மட்டக்களப்புக்கு சிங்கள சிறிபொறித்தபஸ்வண்டிகள் புதிதாக வந்திருக்கின்றன. இப்பகுதியில் இதுவரை சிங்கள சிறி பஸ் வண்டிகள் சேவையிலில்லாமலில்லை. திருகோணமலையில் ஏராளமான சிங்கள சிறி பஸ்களை எதேஷ்டமாகக் காணலாம். மட்டக்களப்பு நகரத்திலும் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சிங்கள சிறி பஸ்கள் நடமாடுகின்றன.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்.

தமிழ் பிரதேசமான மட்டக்களப்புக்கும் சிங்களப் பகுதியான பதுளைக்கும் இடையில் ஓடுவது சிங்கள சிறி பஸ். மட்டக்களப்பிலிருந்து அம்பாரை, கேகாலை, அனுராதபுரம் முதலிய இடங்களுக்கும், திருகோணமலையிலிருந்து பொலனறுவை, மாத்தளை, கண்டி, அனுராதபுரம், கொழும்பு, ஆகிய பாதைகளுக்கும் சிங்கள சிறி பஸ்கள் செலுத்தப்பட்டு வந்தன.

இரு தமிழ்ப் பிரதேசங்களை இணைக்கும் பஸ் சேவைக்கு இதுவரை சிங்கள சிறி பஸ்கள் பாவிக்கப்படவில்லை. கடந்தசிலவாரங்களுக்கு முன்னர் தான் இந்தச் சேவைக்கும் சிங்கள சிறி வண்டிகள் ஓடவிடப்பட்டுள்ளன.

## வாகனமேறி வந்த எழுத்து

மோட்டார் வண்டிகளில் ஏறிக்கொண்டு, தமிழ்ப் பிரதேசங்களுக்குள் சிங்களம் புகுவதை—ஆதிக்கத்தை நிலை நாட்ட எத்தனிப்பதை, தமிழ்பேசும் மக்கள் எதிர்த்தனர். சிறிப் போராட்டம் மூண்டது. மட்டக்களப்பு இப்போராட்டத்தின் முன்னணியில் நின்றது.

வெறிபிடித்த சிங்கள ஆதிக்கத்தின் சின்னமான சிங்கள சிறிஎழுத்தைஅழித்து சிறை சென்றார், தந்தை செல்வா. இந்த நிகழ்ச்சியும் மட்டக்களப்பிலேதான் நடைபெற்றது.

'அடிமைப்படுத்த வந்த ஆதிக்க வெறி பிடித்த ஆணவத்தை எதிர்த்து ஆர்த்தெழுந்து வெற்றிகண்ட மக்கள், இன்று தலை கவிழ்ந்து பின்வாங்கி விட்டார்களா? சிங்கள சிறி வண்டிகளைத் தடையின்றி ஓடவிட்டு விட்டார்களா?' என்று மட்டக்களப்பை நோக்கிப் பலரும் வினவெழுப்புகின்றனர்.

ஆதித்தன்

வெளியே விழும் மழை நீரையும் காயும் வெய்யிலையும் தன்னுள்ளே வலிந்திழுக்கும் 'தகுதி' பெற்ற மோட்டார் பஸ்கள்தான் தமிழ்ப் பிரதேசங்களின் போக்குவரத்துச் சாதனங்களாக இதுவரை இருந்து வந்தன. ரொக்கட்டு வேகத்தை ஏனையோர் நாட, எம்மனோர், காற்றோடு கலக்கும் கரியமலவாயுவை உட்கொண்டு எமலோக யாத்திரைக்கு, விரைவான சீட்டுத் தேடிக்கொண்டிருந்தனர்.

## அற்ப விடயம்

ஒரு வாகனத்தில் பொறிக்கப்படும்எழுத்து அற்பமான பிரச்சினைதான். விபத்து நேர்ந்தால் [illegible] கண்டு பிடிப்பதற்காகப் போடப்படும் இலக்கத்தகட்டில்—ஒரு சிறு எழுத்தில் மாற்றம் செய்து, சிறுபான்மை இனத்தவர்க்கு அற்ப திருப்தியாவது கொடுக்க விரும்பாத இனத்தவர்கள் நமக்காக எதைத்தான் செய்யப் போகிறார்கள்? இந்த அற்ப விடயத்துக்கா இவ்வளவுகெடுபிடி? என்றுவேற்று நாட்டார் கேட்கும் அளவுக்கு 'விரிவடைந்த மனமுடைய' பெரும்பான்மையோர் முன்னேறி விட்டார்கள்.

சுமார் ஏழு நெடிய வருடங்கள். வடக்குக் கிழக்கில் வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்கள் தங்களை வருத்தித் தியாகம் செய்தனர்,போக்குவரத்துத் துறையில்.

ஆட்சிக்கும் ஒரு சூழ்ச்சியான சாட்டு: 'புதிய பஸ்கள் தர ஆயத்தம், ஆனால் சிங்கள சிறி பஸ்கள் ஓடுவதை விரும்ப மாட்டீர்களே!' என்று கூறித் தட்டிக் கழித்து வந்தார்கள். இப்போ எப்படியோ துணிவு பிறந்து சிறி வண்டிகளை அனுப்பியும் விட்டார்கள்.

இப்பொழுது இரு தமிழ்ப் பிரதேசங்களையும் சிங்கள சிறி பஸ்கள் இணைக்கின்றன. மக்கள் என்றும்போல் இன்றும் தங்கள் கடமைகளைச் செய்துதான் வருகின்றனர்!

அமைதி நிலவுகிறது!

அடக்கம் தொனிக்கிறது!

அசிரத்தையும் காணப்படுகிறது!

இன்று நிலவும் அமைதி, அடக்கம், அசிரத்தை-இவை நீறுபூத்தநெருப்பா, அல்லது [illegible] தனவா?

காலம் பதில் கூறட்டும்.

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174 SEA STREET, COLOMBO-11

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3,00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 ஒக்டோபர் மாதம் 18ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## புதிய அபாயம்!

மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கி, அவர்களின் ஜீவாதாரமான உரிமைகள் ஒவ்வொன்ருக அபகரிக்கப்பட்டன. எந்த நோக்கத்துக்காக பிரசாவுரிமைச் சட்டங்களை இயற்றினர்களோ, அந்த நோக்கம் இன்று நிறைவேறிவிட்டது.

தமிழ் பேசும் வம்சாவளிப் பிரசைகளும் இன்று நாடற்றவர்களின் நிலையைத்தான் அடைந்துள்ளனர். எதற்கெடுத்தாலும் "குடியுரிமையை நிரூபியுங்கள்" என்று அவர்களிடம் கேட்கப்படுகிறது. சாதாரண அரசாங்க ஊழியர் தொட்டு அமைச்சர்கள் வரை அவர்களிடம் கேட்பதெல்லாம் இந்தக் குடியுரிமையைத்தான். குடியுரிமை இருந்தாற்ருன் தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் மூச்சுவிட முடியும் என்ெருரு விதி இயற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிரசாவுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட போதே தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் தீர்க்க தரிசனத்துடன் கூறினர், இச் சட்டம் இன்று இந்திய வம்சாவளி மக்களைப் பாதிக்கிறதெனினும், நாளை அது வம்சாவளித் தமிழ் பேசும் மக்கள் அனைவரையுமே பாதிக்கும் என்று—அவரது பொன் வாக்கு இன்று நூறு சத விகிதம் உண்மையாகியுள்ளது.

இச் சட்டத்தால் சிறுபான்மை மக்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர். குடியுரிமையைச் சுலபமாக நிரூபிக்க முடியாதபடி கடினமான சட்டங்களை இயற்றிவிட்டு, அச் சட்டங்களுக்கேற்ப குடியுரிமையை நிரூபியுங்கள் என்று கேட்பது அக் குடியுரிமையைப் பறிப்பதற்குச் செய்த ஏற்பாடு என்பது தெளிவு.

சிங்களவர்களைத் தவிர வேறு யாரும் காணி வாங்குவதைத் தடுக்கும் சட்ட மொன்றும் இயற்றி விட்டனர். இதனால் ஆயிரக் கணக்கான வம்சாவளிப் பிரசைகள் தாங்கள் வாங்கிய காணியின் உறுதிகளைப் பதிவு செய்ய முடியாமல் இடர்ப்படுகின்றனர். இச்சட்டத்தால் இலங்கை முஸ்லிம் மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் நாடற்றவர் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பல்லாயிரக் கணக்கான வம்சாவளிப் பிரசைகளின் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைப் பறிமுதல் செய்துவிட்டு "பிரசாவுரிமையை நிரூபியுங்கள்" என்று கட்டளையிடப்பட்டுள்ளனர். அவர்களிற் சிலருக்குப் பிற நாட்டினருக்குரிய பங்கீட்டுப் புத்தகங்களைக் கேள்வி முறையின்றி வழங்கி, அவர்களை ஒரே நாளில் அந்நியராக்கிவிட்டனர்.

அடுத்த ஆண்டு ஆரம்பம் முதல் பதினையிரக் கணக்கான வம்சா வளிப் பிரசைகள் வேலை நீக்கத்தை எதிர் நோக்கியுள்ளனர். வர்த்தக ஸ்தாபனங்கள் அடுத்த ஜனவரி முதல் இலங்கைப் பிரசைகளை மட்டுமே வேலையிலமர்த்த முடியும். எனவே குடியுரிமையை நிரூபிக்குமாறு தமிழ் முஸ்லிம் சிப்பந்திகளுக்கு வர்த்தக நிலையங்கள் அறிவிப்பு கொடுத்துள்ளன.

அவர்கள் வம்சாவளிப் பிரசைகளெனினும், தந்தையின் பாட்டனரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைக் கொடுத்து, பிரசாவுரிமையை நிரூபிப்பது சாத்தியமன்று. பிறப்புப் பதிவு இலங்கையில் அமுலாக்கத் தொடங்கியதே 1897 ஜூலை 1-ந் திகதிதான். அதற்கு முன்பு பிறந்த தந்தையின் அல்லது பாட்டனரின் பிறப்புகள் எப்படிப் பதிவு செய்யப் பட்டிருக்க முடியும்?

இந்த நிலையில் வர்த்தக ஸ்தாபனங்களிலிருந்து தமிழ் பேசும் வம்சாவளிப் பிரசைகள் வெளியே தள்ளப்பட்டு அவர்களின் இடங்கள் சிங்களவர்களைக் கொண்டு நிரப்பப்படுமென்பதில் ஐயமில்லை.

அனைவருக்கும் அடையாள அட்டை வழங்குவதற்கான சட்டம் விரைவில் இயற்றப்படுமெனத் தெரிகிறது. பிரசைகளுக்குரிய அடையாள அட்டைகளைப் பெற வேண்டுமானல், தமிழ் பேசும் வம்சாவளிப் பிரசைகள் தங்களின் குடியுரிமையை நிரூபிக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால் ஏற்படக் கூடிய விளைவு இலட்சக் கணக்கான தமிழ் பேசும் வம்சாவளிப் பிரசைகளுக்குப் பிறநாட்டினருக்குரிய அடையாள அட்டைகள் வழங்கப்படுவதுதான்.

இவ்வாறு தமிழ் பேசும் வம்சாவளி மக்களிற் பெரும்பாலோர் இவ் வருட இறுதிக்குள் நாடற்றவர் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவார்களென்பது திண்ணம்.

நாடற்றவர்களாக்கிய பின் அடுத்த நடவடிக்கை அவர்களை நாடு கடத்துவதாகத் தான் இருக்க முடியும்.

வம்சாவளிப் பிரசைகள் தங்களின் குடியுரிமையை நிரூபிப்பதில் ஏற்படும் கஷ்டங்களை ஆராய்வதற்காகப் பிரதமர் ஒரு குழுவை நியமித்துள்ளார். இக் குழுவுக்குத் திருமலை நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் சி. சிவானந்தம் அனுப்பியுள்ள மகஜரில் சில நல்ல யோசனைகளைக் கூறியுள்ளார்.

"தந்தையின், பாட்டனரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்படி வற்புறுத்தக் கூடாது. ஒருவரின் பிறப்புப் பத்திரத்தில் "இலங்கைத் தமிழர்" என்று குறிப்பிட்டிருந்தால் அதனையே போதுமான ஆதாரமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறப்பைத் தெரிந்த பெரியவர்களின் வாக்கு மூலத்தையும் போதுமான சாட்சியமாக ஏற்க வேண்டும். காணி உறுதி போன்ற தஸ்தாவேசுகளையும் அத்தாட்சிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று சிறந்த யோசனை கூறியுள்ளார் டாக்டர் சிவானந்தம்.

விசாரணைக் குழுவைப் பேட்டிகண்ட ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தூதுகோஷ்டியும் இதே யோசனைகளைத்தான் வற்புறுத்தியுள்ளன.

இந்த யோசனைகளுக்கிணங்க பிரசாவுரிமைச் சட்டத்தை முற்ருக மாற்றி அமைத்தாலன்றி சிறுபான்மைமக்கள் தங்களின் சொந்த நாட்டில் அந்நியர்களாக வாழ வேண்டிய நிலைதான் உருவாகும்.

இது தமிழ்பேசும் இனத்தை அழிக்கும் ஒரு பயங்கரமான நிலைமையாகும். வம்சாவளிப் பிரசைகளின் குடியுரிமையைப் பறிப்பதற்காகக் கையாளப்படும் உபாயங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தமிழ்பேசும் மக்களின் தொழிற்சங்கங்களும், தலைவர்களும், தமிழரசுக் கட்சியும் ஒன்றுசேர்ந்து பங்கீடு அரிசிப் புத்தகம் வழங்குதல், காணி வாங்குதல், அடையாள அட்டை வழங்குதல், வர்த்தகச் சிப்பந்திகளை வேலைநீக்கம் செய்தல் போன்ற பிரச்சினைகளில் [illegible] நியாயம் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென வற்புறுத்துகின்ேரும்.

# வளம் பெருக வழியில்லை ஆனால் பழி தீர்க்கும் படலம் ஆரம்பமாகிறது

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

**விவசாய முன்னேற்றத்துக்கான திட்டங்களையும் கூட பாரபட்சக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் இந்நாட்டு ஆட்சியின் போக்கே விசித்திரமானது. பெருகும் சனத் தொகை—வெளியேறும் செல்வம் இரண்டையும் சீர்படுத்தும் திட்டமும் கிடையாது—செயலும் இல்லை.**

**இந்நிலையில்......**

**பழிக்குப் பழி வாங்கும் நோக்கம் மட்டும் தீர்ந்தபாடில்லை.**

இலங்கைஒரு விவசாயநாடு. பெரிய தொழில்கள் இங்கு சிறப்புற முடியா. கைத்தொழில்கள் கூட இங்கு செவ்வனே நடைபெற இயலா. பெரிய ஆலைகளோ, இயந்திர சாதனங்களைக் கொண்ட தொழிற் கூடங்களோ இந் நாட்டுக்கு உதவி கொடுக்கமாட்டா. விவசாயம் ஒன்றே இந்நாட்டுக்கு உகந்தது. விவசாயத் துறையிலேதான் இந்நாட்டின் வளர்ச்சியும், வளமும் தங்கியிருக்கிறது.

இக்கருத்தை நாம் கூறவில்லை. அயல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் இக் கருத்தினை பல வருடங்களுக்கு முன்னமேயே வலியுறுத்தியிருக்கின்றனர். இக் கருத்தினை மனதில் கொண்டேதான் முன்னுளில் திரு. டி. எஸ். சேனநாயக்கா கல்லோயா திட்டம்போன்ற பெரிய திட்டங்களை மேற்கொண்டனர்.

வருடாவருடம் அரிசி இறக்குமதி செய்வதற்கு கோடிக்கணக்கான ரூபாய்களை இலங்கை அயல் நாடுகளுக்கு அனுப்பிவைக்கிறது. சனத்தொகை கூடிக்கொண்டு போகப்போக, வெளிநாட்டுக்குச் செல்லும் பணத்தின் தொகையும் கூடிக்கொண்டே தானிருக்கும். சனப்பெருக்க வேகத்தையும், செலாவணி வெளியேறும் வேகத்தையும் சமப்படுத்தக்கூடிய வகையில் பணம் தேடும் வழிகள் ஏதாவது உண்டா, இந்த நாட்டில்?

தேயிலையையும், இரப்பரையும் காட்டி உலக மார்க்கெட்டுகளை எத்தனை காலத்துக்கு நம்பி வாழமுடியும்?

**திட்டங்கள் ஏதாவது உண்டா?**

விவசாயத்தைப் பெருக்குவதற்காக இதுவரை இந்த அரசாங்கம் ஏதாவது திட்டங்கள் போட்டிருக்கிறதா? உணவு உற்பத்தித்துறையில் முன்னேற்றங்கள் ஏதாவதுண்டா?

இக் கேள்விகளுக்கு பதில் சொல்லுவதற்கு அரசாங்கத்தால் முடியாது. உண்மையிலேயே அவர்களிடம் விவசாய அபிவிருத்திக்கான திட்டம் எதுவுமே கிடையாது.

விவசாய உற்பத்தித் திட்டங்களில் அரசு பூரண கவனம் செலுத்தும் நோக்கம் இருக்குமானல், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யக்கூடிய வழிகளைக் கடைப்பிடிக்காதிருக்குமா?

முன்னுளில் கிழக்கு மாகாணம் இலங்கையின் தானியக் களஞ்சியம் என்று போற்றப்பட்டதுண்டு. காடடர்ந்த பிரதேசங்களில் ஏராளமான குளங்களை நீர்ப்பாசன அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். சில ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு சிறு சிறு திருத்தங்களை மேற்கொண்டாலே பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பூமியும் பொன் விளையும் பூமியாகிவிடும்.

**உதாசீனம் செய்யப்பட்ட திட்டங்கள்**

கடந்த வரவு செலவுத் திட்டங்களில் சேர்க்கப்படவேண்டும் என்று 20 திட்டங்களை கிழக்கு மாகாண நீர்ப்பாசன அதிகாரிகள் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தார்களாம். இந்த இருபது திட்டங்களும் தமிழ்பிரதேசங்களை ஒட்டியேயிருப்பதால் இத் திட்டங்களைபரிசீலனை செய்யாமல், நாட்டுக்கு இத் திட்டங்கள் எவ்வகையில் உதவும் என்பதனை ஆராய்ந்துணராமல் அரசினர் உதாசீனம் செய்துவிட்டனர்.

பொதுவான நாட்டு முன்னேற்றத்தையிட்டு எண்ணிப்பார்க்கக்கூடிய விரிந்த மனப்பண்பு அரசிடம் இல்லையா, என்று பொதுமக்கள் கேட்கின்றனர். தன் மூக்குடைந்தாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக இருந்தால் போதும் என்ற மனப்போக்குத்தான் இத்தகைய பாரபட்சத்துக்குக் காரணம் என்று கூறவேண்டியிருக்கிறது.

**வாக்குப் பலத்தால் பழிக்குப்பழி**

நாட்டுக்கு நன்மைபயக்க வல்ல எத்தகைய திட்டங்களிலும் நாட்டம் செலுத்த முற்படாத இந்த அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் நோக்கத்திலேயே முழுக்கவனத்தையும் செலவிடுகிறது என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

1956ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும், அதற்கப்புறம் நடைபெற்ற பொதுத்தேர்தல்களிலும் இன்றுள்ள ஆளும் கட்சிக்கு விரோதமாகச் சில பத்திரிகைகள் பிரசாரம் செய்தனவாம். இதற்காகவே இப்பொழுது பத்திரிகைகளைப் பழிவாங்கும் படலம் ஆரம்பமாகியிருக்கிறது என்பது பகிரங்க இரகசியம். எந்தக் காரணத்தை எந்த நாட்டில் வைத்தும், எப்படித்தான் திரித்துக் கூறினலும், இந்த உண்மையின் ஒளியை மூடி மறைத்துவிட முடியாது.

ஏதோ இன்று அவர்களுக்குள்ள வாக்குப் பலத்தால், நியாயத்தின்—நீதியின்-நேர்மையின் உண்மை உருவை மறைத்துக் கொண்டு, உள்ளே ஊழல்களையும் உதவாக்கரைச் செயல்களையும் வளர்க்கலாம். ஆனல் எக்காலமும் இத்தகைய அநீதிச் செயல்கள் நீடிக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேம்.

**அகிலத்துக்கு அறிவுரை- ஆனல்......?**

நெய்ரோவில் கூடிய நடுநிலை நாடுகளின் மாநாட்டின் இறுதியில் வெளியாகிய அறிக்கையில் மக்களின் சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

'அநீதி நிலைத்திருக்கும் வரையிலும், மக்கள் தமது அடிப்படை மூலாதார உரிமைகளான சுதந்திரத்தையும் சுயநிர்ணய உரிமையையும் உரிய முறையில் அனுபவிக்க முடியாதவர்களாயிருக்கும் வரையிலும் உலகில் சமாதானம் நிலவ முடியாது என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த இறுதி அறிக்கையில் மாநாட்டில் கலந்துகொண்ட சகல நாடுகளும் ஒப்புதல் தெரிவித்து ஒப்பமிட்டுள்ளன. இலங்கையும் தனது மனப்பூர்வமான ஒப்புதலை வழங்கியுள்ளது.

உலக அமைதிக்கு, மக்களின் மூலாதார உரிமைகளும் சுயநிர்ணயமும் அவசியம் என்று உணர்ந்து ஏற்றுள்ள இலங்கைப் பிரதமர், இலங்கையின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வரா?

இலங்கையின் அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட தமிழ் பேசும் தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை வழங்கும் வண்ணம் தமிழ் பேசும் மக்கள்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோணேச மலை புனித நகராக மற்றொரு தடை

## 'அருள்மலை' பகுதி கடற்படைக்குரியதாம்

**கோணேஸ்வர ஆலயத்தினை அணித்தாயுள்ள 'அருள்மலை' என்ற பகுதி தங்களுக்குச் சொந்தம் என்று உரிமைகொண்டாட கடற்படையினர் முன்வந்திருப்பதாகத் தெரிகிறது. கோணேசர் மலையைப் புனித நகராகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று சைவப் பெருமக்கள் செய்யும் கிளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கவே இப்புது முயற்சி நடைபெறுவதாக நம்ப இடமுண்டு.**

திருகோணமலையிலுள்ள பிரெட்றிக் கோட்டைக்குள்ளேயே கோணேசர் ஆலயமும் 'அருள்மலை'யும் இருக்கின்றன. கோணேசர் கோயிலிலிருந்து அருள்மலை நூறு அடி தூரத்துக்குள்ளேயே அமைந்திருக்கின்றது. இவ்விடத்தில் திருமலைப் பிரதேசத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கம் ஒன்றை பிரதிஷ்டை செய்து பக்தர்கள் வணங்கிவருகின்றனர்.

இந்த அருள்மலைப் பிரதேசம் இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமானதென, அண்மையில் இங்கு வந்திருந்த கடற்படை அதிகாரி ஒருவர் உரிமைகொண்டாடியிருக்கிறார். இதனால் திருகோணமலை வாழ் சைவப் பெருமக்கள் கொதிப்படைந்திருக்கின்றனர்.

'கிளைவ் கொட்டேஜ்' என்ற கட்டிடத்துக்கு மேற்புறமாகவுள்ள பிரதேசம் அனைத்தும் கோணேசர் ஆலயத்துக்குச் சொந்தமானதென அரசாங்க அதிபரே அறிவித்திருந்தார். இப்பொழுது கடற்படை அதிகாரி தெரிவித்துள்ள கருத்து, கோணேசர் ஆலய பிரதேசமான பிரெட்றிக் கோட்டையை புனித பிரதேசமாக்க சைவப் பெருமக்கள் செய்யும் கிளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவதாகும். வேண்டுமென்றே விஷமிகளில் சிலர் கடற்படை அதிகாரியை இவ்வாறு கூறும்படி தூண்டியிருக்கக்கூடும் என்று வதந்திகள் அடிபடுகின்றன.

சைவத் தலமான கோணேசர் கோட்டைக்குள் புத்த சிலை ஒன்றினை பிரதிஷ்டை செய்துவிடுவதற்கு சில வகுப்புவாத பௌத்த இயக்கங்கள் பெருமுயற்சி எடுத்தன. விகாரை ஒன்றினை கோட்டைக்குள் நிறுவவும், பௌத்த மதப் பாடசாலை ஒன்றினை ஏற்படுத்தவும் எடுத்த முயற்சிகளும், சைவ மக்களின் எதிர்ப்பால் முறியடிக்கப்பட்டு விட்டன. ஆகவே கடற்படையினரைக் கொண்டாவது தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள மேற்படி பௌத்த இயக்கங்கள் முயற்சித்துவருவதாகக் கூறப்படுகிறது.

## வாராசாரம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிகை ஆணைக்குழுவின் சிபார்சின் பிரகாரம் ஏரிக்கரைப் பத்திரிகைகள் பத்திரிகைக் கவுன்சிலிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். எந்த இடத்திலும் பத்திரிகை ஆணைக்குழுவினர் பத்திரிகைக் கூட்டரவு நிறுவுவது பற்றிக் குறிப்பிடவில்லை. எனவே இப்பொழுது உருவெடுத்திருக்கும் இரண்டாவது பத்திரிகை மசோதா முற்றிலும் பத்திரிகை ஆணைக் குழுவின் அறிக்கைக்கு முரண்பட்டதாகும், முதல் மசோதாவிற்கு ஏற்பட்ட முடிவு இதற்கும் ஏற்படலாம்- ஏற்பட்டேயாகவேண்டும்.

### நிதி அமைச்சர் பதில் கூறுவாரா?

இலங்கையின் வெளிநாட்டு ஆஸ்தி மீண்டும் கவலைதரும் நிலையை அடைந்துள்ளதாக மத்திய வங்கி இவ்வாரம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய நிதி அமைச்சர் நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தப் போவதாகவும் வெளிநாட்டு ஆஸ்தியை ஸ்திரப்படுத்தப் போவதாகவும் பதவியேற்றவுடன் பகிரங்கப்படுத்தினார். இன்று அவர் பதவிபெற்று மூன்று மாதங்கட்குள் மீண்டும் வெளிநாட்டு ஆஸ்தி குறைந்துவிட்டது.

அமைச்சர்கள் இடைவிடாது வெளிநாடுகளுக்கு செல்வதை எதிர்கட்சியிலிருந்த காலத்தில் வன்மையாகக் கண்டித்த நிதி அமைச்சர் இன்று 'கூட்டரசாங்கத்தில் இணைந்து வெளிநாட்டைப் பார்' என்ற கோஷத்திற்கு என்ன கூறப் போகிறார்?

## வளம் பெருக..

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கிளர்ச்சி செய்து வருகிறார்கள். நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பவர்களோ தமிழ் பேசும் மக்களின் கிளர்ச்சிக்கு—கோரிக்கைக்கு சிறிதும் செவிசாய்க்க மறுப்பதுடன் மாறாக இனவொழிப்பு நடவடிக்கையையும் துரிதப்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் பிரதமர் உலக சமாதானத்திற்கு சுயநிர்ணய உரிமை அவசியமென்று எகிப்தின் தலைநகரில் நின்று குரல் எழுப்பியுள்ளார். உபதேசம் யாருக்கு?

அகிலத்திற்குக் கூறிய அறிவுரையை பிரதமர் தமது சொந்த நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வருவாரா?

### தமிழரசாரின் மௌனம்

இடதுசாரிக் கட்சிகளும் ஐ. தே. கட்சியினரும் வழமைக்கு மாறாக இம்முறை தமிழ் பிரதேசங்களில் அதிக காலத்தை செலவிடுவதுடன் பிரச்சார ஆரம்பத்தையே இப்பகுதிகளில்தான் தொடங்கியுள்ளனர்.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான கட்சிகள் தமது தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளன. ஆனால் தமிழ்பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விளங்கும் தமிழரசுக் கட்சியினர் மட்டும் இன்னும் இப்பிரச்சினைபற்றிச் சிந்திக்காது இருக்கின்றனர்.

இடதுசாரிகளும் ஐ. தே. கட்சியினரும் வடகிழக்கு மாகாணத்தில் முக்கிய கவனம் செலுத்தும்பொழுது தமிழரசுக்கட்சி அசட்டை செய்வது விவேகமானதல்ல என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

## சாதிவித்தியாச ஒழிப்புக்குழு

சாதிவித்தியாச ஒழிப்பு இயக்கத்தின் செயலவைக் கூட்டம் 19ம் திகதி திங்கட்கிழமை மாலை யாழ். மாநகரசபைக்குழு அறையில் கூடுகிறது. சகல சைவ ஆலயங்களையும் பொது மக்களுக்குத் திறந்துவிடுவது சம்பந்தமான நடவடிக்கைகள் வகுப்பது பற்றி இக்குழு பரிசீலனை நடாத்தும் என்று தெரிகிறது.

## ஆண்டு விழா

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் 19 வது ஆண்டு விழா 18ம் திகதி கொழும்பு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது. தேநீர் விருந்தும், பத்திரிகை நிருபர்கள் மாநாடும், கலைநிகழ்சிகளும் இடம் பெறும்.

## அயல்நாட்டு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதி கிடைத்தது. அப்படியிருந்தும் மகனுடைய பிரேதத்திலேயே விழிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை அவ்வம்மையாருக்கு ஏற்பட்டது.

## உலகவலம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலையான நகரில் அவருடன் துப்பாக்கியால் சுடப்பட்டுப் படுகாயம் அடைந்தவர்.

கவர்னர் தேர்தலுக்கு யாரை நிறுத்துவது என்பதற்கு இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. அநேக மாநிலங்களில் இதற்கென் ஆரம்பத் தேர்தல்கள் நடக்கும்; இத் தேர்தல்கள் கட்சித் தேர்தல்கள்; அந்தந்தக் கட்சி வாக்காளர்கள் தங்கள் கவர்னர் அபேட்சகர்களை இத் தேர்தல்களில் பொறுக்கியெடுப்பார்கள். ஏனைய மாநிலங்கள் அபேட்சகர்களைப் பொறுக்கியெடுக்க மாநாடுகள் கூட்டும்; இம் மாநாடுகளில் பிரதிநிதிகள் கவர்னர் பதவிக்குத் தேர்தலில் நிற்பதற்குரிய அபேட்சகர்களைப் பொறுக்கி யெடுப்பார்கள், தேசிய மாநாடுகள் ஜனாதிபதி அபேட்சகர்களைப் பொறுக்கியெடுப்பதுபோல.

## நாசரின் செல்வாக்கு

கெய்ரோ மாநாடு, நடுநிலைமை நாடுகளின் கூட்டு வலிமையை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது

மாநாடு, ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் எஞ்சியுள்ள ஏகாதிபத்திய குடியேற்றக் கொள்கைக்கு பலத்த அடி கொடுத்திருப்பதோடு, ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றில் அமைதியின்மை ஏற்படுவதற்கு அந்நாடுகளிலுள்ள வல்லரசுகளின் தளங்கள்தான் காரணமென்றும், அத்தளங்கள் அகற்றப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளது.

மறைந்த மாபெரும் தலைவர் நேருஜி உருவாக்கிய பஞ்சசீலத்தையும், உடனிருந்து வாழும் கொள்கையையும் மாநாடு மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இம் மாநாடு இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியின் செல்வாக்கை உலக அரங்கில் உயர்த்தியிருப்பினும், நேருஜிக்குப்பின் நடுநிலைமை நாடுகளின் பெரிய மனிதர் நாசர்தான் என்ற நிலையையும் உருவாக்கியுள்ளது. ஆம், நடுநிலைமை நாடுகளின் 'தலைமை' புது டில்லியிலிருந்து கெய்ரோவுக்குச் சென்றுவிட்டதென்றே கூற வேண்டும்.

இம்மாநாட்டின் விளைவாக இந்திய—சீன எல்லைத் தகராறு பற்றி புது முயற்சிகள் செய்யப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.


சுலபமான தண்ணீர் விநியோகம்

எஸ்எம்ஸி பம்ப்கள்



மணிக்கு 600 - 6000 கலன் நீர் விநியோகம். ஆழமான மிதந்த கிணறுகளுக்கு ஏற்றது. பலவித அளவுகளில் 10 மொடல்களுக்கு மேல் உண்டு. ஒவ்வொன்றும் உத்தரவாதமுடையது.



அல்கதீன் குழாய்கள்

இலேசான, வளையக்கூடிய, கறள் பிடிக்காத இவை 1 அங்குல துவாரத்தில் 200 அடி வரை சுருள்களில் கிடைக்கும். வேறு துவாரங்களில் 500 அடி வரை.

பிளெக்ஸ்ரெல் இணைப்புகள்



பக்க பொருத்துகள் நேர் பொருத்துகள் மூட்டுப் பொருத்துகளை, பால் மற்றும் சொக்கெட் பொருத்துகள்.

எல்லாவித தண்ணீர் அமுக்கம் நீராவி எண்ணெய், பெட்ரோல் ரசாயனங்கள் ஆதியவற்றால் ஒழுக்கு ஏற்படாதது.

கண்டி நீர் சுத்திகரிக்கும் இயந்திரம்

நிதசனமான தண்ணீர் சுத்திகரிப்பு அவசியப்படும்போது கண்டி தளபாட சாதனம் உறுதுணையாக விளங்கும். இவ்வித இயந்திரங்கள் தோட்டங்கள் வீட்டுத் தேவைகள், கைத்தொழில், குளிப்பல், நீச்சல் குள தேவைகளுக்கு வழங்கப்படுகின்றன.





அளவைப் பம்ப்கள்

குளோரைட் மற்றும் ரசாயனங்களை சரியான நியம அளவுகளில் உட்பாய்ச்சுவதற்கு உகந்தவை.



ஹொப்கின்ஸன் நீராவி, தண்ணீர் வால்வ்கள்.

அளவு 2" அதற்கு மேலும் இது 9 அங்குல ஹொப்கின்ஸன் பொரான்டி வால்வ் (1600 ரு சதுரம் வேலைசெய்யும் நீராவி அமுக்க நிலையில்) தடுப்பு கியர் கேஸ் மற்றும் கட்டுப்பாட்டு யூனிட் இணைக்கப்பட்டது.

விஞ்செட் பம்ப்கள்



1½", 2", 3" மணிக்கு 6,000 — 16000 கலன். கூடிய உயரம் 75 அடி. டீசல் மண்ணெண்ணெய், மின்சார இயக்கம், தொழிற்பாடு.

CCC

கொழும்பு கொமேர்ஷல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. வரையறையான அங்கத்தவர் பொறுப்புடையது)

ஜேம்ஸ் பீரிஸ் மாவத்த, கொழும்பு-2. டெலிபோன்: 79351.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

# அழியாதது

> எனக்கும் இதயம் இருக்கின்றது. எண்ணங்கள் எனும் பூக்கள் இதய தாகத்தில் மலரவே செய்கின்றன. வண்டுவக்கும் மலராக நீ இருந்தாலும்,...என் எண்ண மலருவக்கும் பெண்ணாக விரும்பாதது ஏன்?

**நாவேந்தன்**

அழியாதது; அது என்ன...? நிரந்தரமானது, அமரத்துவமானது, நிறைவுள்ளது என்றெல்லாம் சித்தாந்திகளும், வேதாந்திகளும், சமயபக்தர்களும் கூறுவதா? அவ்வாறே இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்! நான் சித்தாந்தி, வேதாந்தியல்லன், சமய ஞானியுமல்லன், அல்லவானுல் நான் மனிதனு...? ஆம். மனிதன். மனிதனிலும் வித்தியாசமுள்ளவனு கலைஞன்? அஃதெப்படியோ! நான் கலைஞன்...... ஆமாம்......!

கவிஞன், கதைஞன் என்றுஞ் சொல்வர். எனக்கு அதைப்பற்றியெல்லாம் கவலை கிடையாது...!

உணர்ச்சிகள், அவைதாம் எனக்கு உணவு, கனவுகள் என் வாழ்க்கை. 'கனவுகளாவது, வாழ்க்கையாவது சுத்தப் பைத்தியக் காரத்தனம்' என்கிறீர்களா? சரி, 'பைத்தியக்காரத்தனம்' கலைஞன் முதிசம் என்ருல், வரலாறு அதை மறுக்காத போது எனக்கென்ன பயம்?

பயம், நிர்ப்பயம், ஜெயம், அபஜெயம் எல்லாம் எனக்கொன்றுதான். அழகுகளை, உணர்ச்சிகளை மென்று இரை மீட்பதில் எனக்கு அசுரப் பசி. சமுதாய ஒழுக்க விதிகளுக்கு இவை முரண்படுவதானுல், அதற்காக நான் அஞ்சுவதில்லை. வாழ்வே இந்த இரை மீட்கும் பழக்கமாகும் போது அச்சப்பட வேண்டியவன் நானல்லன்! இஃது எனக்கு இயற்கை. உடலும் உளமும் எனக்கு உண்டு. நான் ரூபி. அரூபியல்ல! உடலும் உளமும் பங்கப்படாதவரை 'ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவதை' நான் தவருகவே எண்ணுவதில்லை. எண்ணுபவர்களுக்காக என் அனுதாபங்களை ஒட்டு மொத்தமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனக்கு காதல், காமம் இரண்டும் ஒன்றுதான்! 'இல்லை, அவை வெவ்வேருனவை' என்பவர்களும் இருக்கிருர்களா? இருக்கட்டுமே! செல்லரித்து விட்ட ஏட்டுச் சுவடிகளை எடுத்து வைத்து அவற்றை மீத மிச்சம் விடாமல் ஆராய்ச்சி பண்ணி அவை ஒன்ரு, இரண்டா என நிறுவட்டும், எனக்குக் கவலை இல்லை!

'ஏது; இது தத்துவ விசாரணை' என்று மயங்குகிருயா? நல்ல கதை! தத்துவ விசாரமாவது, மண்ணுங்கட்டியாவது! 'இது' என் உணர்ச்சிகள். இது சரியா, பிழையா? அந்தச் சிந்தனையே எனக்கு இல்லை. பற்றற்ற நிலை என்ருவது சொல்லேன். பற்றற்ற நிலையில், முதிர்வில் முத்திப் பேறடையலாம் என்பாய். எனக்கு அது வேண்டியதில்லை. நான்—இரு எழுத்துக்களாய இச் சொல்லின் ஒரு 'ன்'—அது என்னைக் குறிக்கும் தனி முத்திரை. அந்த 'ன்' ஒரு புறநடை! என்னைப் போல் எந்தச் சாதாரண மனிதனும் வாழ முடியாது. வாழக் கூடாது. எனவே நான் எப்படியும் வாழலாம்; இல்லையா?

என்ன ஒன்றும் புரிய வில்லையா? ஏன் விழிக்கிருய்? விழிப்பும் உறக்கமும்......

'உன்னை மறக்கச் சொன்ன பிறகு எல்லாம் ஒன்று தான் எனக்கு!

நீ......?

பெண்...! உன்னில் உள்ள ஒரு "ண்" உன் தனிமுத்திரை, பிரபஞ்சத்தின் பர வெளியில் நான் தேடும் அந்த 'ண்' நீயேதான்...! நானில் உள்ள 'ன்' னும், நீ என்னும் பெண்ணில் உள்ள 'ண்' னும் இன எழுத்துக்கள். இயற்கையானவை. அவற்றுல் பேதங்கள் பிறப்பித்தல் இயலாது. தூரவைத்தலும் இயலாது. ஆனுல் நானும் நீயும்...?

மனிதர்களாக உள்ளவரை தூரமாகத் தான் இருக்க வேண்டுமானுல் அது வாழ்வு, சமுதாய நியதிக் குட்பட்ட ஒழுக்க நியதி, பண்புடைமை என்றெல்லாம் 'முலாம்' பூசப் புறப்படுபவர்களின் திருப்திக்கு நல்ல வெற்றி! ஆனுல் புறம் பூட்ட இம்முலாம் புரையோடிக் கிடக்கும் உள்ளகத்து இரணங்களை மறைக்குந் திராணியுள்ளதா? நான் யதார்த்தமாக கேட்கின்றேன்? உனக்கு விளங்கத்தக்கதாகவே வினவுகின்றேன். 'அறிவு போதாது' என் தத்துவத்தை விளங்க என்று தட்டிக் கழிக்கப் பார்ப்பாய்! ஆனுல்; உண்மையில் உன்னுல் அது முடியாத காரியம்! ஏன்?

நீ என் சிஷ்யை! இல்லையா? நீ என்னிடம் பாடங் கேட்காமலிருக்கலாம். ஆனுல் என்னை அறிந்தவள். என்னில் மயங்கியவள். என்னில் என்னுகை, எதார்த்த நிலையிலில்லாவிடினும், எண்ணத்தளவாவது இருந்து பழக்கப்பட்டவள். ஆகவே உனக்கு இது புரியும்! உண்மையைச் சொல்!

'அழியாதது; அது என்ன?'

கற்பு, ஒழுக்கம்—கடவுள் பக்தி என்பவள் மனைவி. அவளை நான் வாழ்த்துகிறேன். அக்கற்பின் கொழுந்து வாழ்க! ஆனுல் நீ சொல்வது......?

விழிகள் நிறைந்த நீரா...?

முடிவற்ற மௌனமா...?

உன்னை என்னுல் விளங்க முடியாது என்று எண்ணுகின்ருயா? என் அன்பு சிஷ்யையே, நீ என்னைத் தெரிந்து கொள்ளாதது போலப் பாவனை பண்ணினுலும் எனக்கு உன்னை நன்கு தெரியும்! பயப்படாமல் உள்ளத்தைத் திறந்து சொல்.

'அழியாதது என்ன......?'

ஒரு சாதாரண 'எச்சரிக்கைக்' கடிதம்—அப்படித்தான் அதனை எண்ணுகின்றேன். அது கண்டு நீ மிரண்டுவிட்டாயா? பள்ளித்தோழி எழுதினுல் 'அது பரிகாசக் கடிதம்'. மனைவி எழுதினுல் யமபாசமா......?

என் சிஷ்யையே! நீ ஏமாறி விட்டாய். என்னையும் ஏமாற வைக்கின்ருய்!

நீ உயர்ந்தவள், உத்தமி என்று புகழப்படுவதில் எனக்கும் ஆசைதான். 'என்னை'ப் பலி கொடுத்தா உன் புகழ்ச் செடி வேரூன்ற வேண்டும்?

நான் கேட்பது என்ன...? 'உனக்குத் தெரியாதது' என்னும் தெரிந்த விடயத்தைத் திருப்பிச் சொல்லிப்பார். 'உடலை நேசித்ததில்லை. உதிரத்தில் கலந்துவிட ஆசைப்பட்டதில்லை, தசையும் தழுவும் மெய்க்கலப்பை ஒரு போதும் அனுபவித்ததில்லை!

ஆனுல்—

ஆத்மா எனும் முதிர் பருவக் கனவின் இளமை உள்ளத்தை என்னிடம் நீ எடுத்துக் காட்டிய போது அதனை நான் காதலித்தேன். காதலிக்கின்றேன்!

ஒரு வேளை அதற்கு உருவம் வேண்டாததாக இருக்கலாமென்பது உன் எண்ணமென்ருல், நான் ஏன் மறுக்கின்றேன்! ஏன் என்ருல் நீ என்னை மறந்துவிட்ட இத்தனை இரவுகளிலும் நான் வாழாமலா போய் விட்டேன்? அல்லது வெஞ்சினக் கனலை உன்மீது வீசியா விட்டேன்?

அஃதெல்லாமே பொய்தானே? 'வாழ்வாவது மாயம், அது மண்ணுவது திண்ணம்,., காயமே, இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்ற தின்னை தூங்கிகளின் வாக்குத் தீர்க்க தரிசனமாகிறதா?

நான் உயர்ந்தவன். ஒழுக்கசீலன் என்று எனக்கு நானே 'சர்டிபிகேட்' எழுத விரும்பவில்லை. அப்படி எழுதினுல் அது அப்பட்டமான பொய். நான் என்ன ஸ்ரீ இராமனு...? அரிச்சந்திரனு? இல்லை—தருமபுத்திரனு......? ஆனுலும் சாதாரண மனிதப் பிறவியானுலும்......

எனக்கும் இதயம் இருக்கின்றது. எண்ணங்கள் எனும் பூக்கள் இதய தாகத்தில் மலரவே செய்கின்றன. வண்டுவக்கும் மலராக நீ இருந்தாலும்,...என் எண்ண மலருவக்கும் பெண்ணாக விரும்பாதது ஏன்?

சிஷ்யையே, நீ என்ன கர்மயோகியா? கண்ணுதற் கடவுளையே, தன் நிர்வாணக் கோலத்தை மறைக்கக் கைக் குழந்தையாக்கித் தொட்டிலிட்டுத் தாலாட்டிய ரிஷி பத்தினியா...?

என்னுல் நம்ப முடியாது! குறைந்தபட்சம் நீ ஒரு 'சினிமாஸ்டாராக' இல்லாத வரை எனக்கு மகிழ்ச்சிதான்! அதற்காக உன்னைத் 'தெய்வ மகளாக'க் கருத முடியுமா?

குளிர் நிலவையும், மெய் சிலிர்க்கும் தென்றலையும் என்றைக்கும் போலவே தான் இன்றைக்கும் அனுபவிக்கின்றேன். நான் பகுத்தறிவுவாதி என்று பெருமை பேசவில்லை. ஆனுல் உனக்காக வடக்கிருந்து உயிர் துறக்கவோ, மடலூர்ந்து என் காதலைப் பிரசித்தப்படுத்தவோ தேவையில்லை.

'உலகம் என்னை எதிர்த்தாலும், நீங்கள் தான் என்னை மறந்தாலும் உயிர் இருக்கும் வரை, இறந்த பின்பும் உங்களை மறக்க முடியாது என்ருல்......!' எட்டுப் பத்தித்தலைப்பிட்டுப் பிரசுரமான பத்திரிகைச் செய்தி போல என் மனத்திரையில் உன் கடிதவாசகங்கள்......!

ஆமாம்!, போனவற்றை நினைவுபடுத்தி உன்னமைதியைச் சூறையாட விரும்பவில்லை. ஆனுல் என்னன்புச் சிஷ்யையே, உண்மை என்ன......?

'அழியாதது; அது என்ன?'

கனவுகள், இனிய நினைவுகள் என்பாயா? இயற்கை வனப்பின் சிகரமான அந்த அமரச் சூழ்நிலையில் நீ என்னிலும் கொடுத்து வைத்தவளாக இருந்து கூடுதலாக அனுபவிக்கலாம்! பொருமை எனக்கில்லை. ஆனுல் நாளும் நீயும் ஆங்கே, ஒன்று [illegible] கள் நம்மை மறந்து நின்ருேமே!

நீ ஒரு அதிசயப் பிறவி. 'உண்மையை நேசிப்பவள்' என்று தானே சொன்னுய், சரி!

அழகு! உன்னிடம் வியக்கும் அளவுக்கில்லையே! கல்வி, என்னிலும் தகுதிப் பத்திரம் கூடியதாக இருக்கலாம். அதனை எதனுல் அளவிடுவது? பண்புகள், எல்லாமே நான் துருவிப் பார்த்ததில்லை!

ஆனுல்—

இவற்றின் மொத்தவுருவமான நீ ஒரு காவியம்! உன் கடிதங்கள் காவிய ரசனையிற் ருேயவைக்கின்றன. உன் நினைவுகள் மழைத்துளிகளை விழுங்கி வாழும் சாதகப் பட்சிபோல, நினைவுகளையே விழுங்கி, விழுங்கி எனை நினைவிழக்கச் செய்கின்றன.

அதனுல்நான் உன்னடிமையாகின்றேன். எனக்கிது 'தகாது' என்று நீ பேதம் புகட்ட முடியாது. ஏன்...? நீ என் சிஷ்யை என்பதால்...

எங்கள் உறவுக்கு நிலைக்களன் எது...? அதுவும் எனக்கும், உனக்கும் புரியாதது.

நான் தெருவோரத்து, நடைபாதை மனிதன். நீ நடைபாதைக்கு எழில் சேர்த்த சிட்டு, அப்படிச் சொல்லலாம்!

எப்படியோ கண்டோம். விழிகள் நான்கு இமைக்க மறக்கவில்லை. மொழியை வீணுகச் சிந்தவில்லை. இடையே மொட்டவிழ்ந்த உறவுதான்...?

இன்றும் என்னைத் தவிக்க வைக்கின்றது. நீ...? வசதியுள்ளவளாக இருக்கலாம், 'வசதிகள்' அர்த்த புஷ்டி மிக்க ஒரு சொல்லாகக்கருதுகிறேன். உன் வாழ்விடம் இன்றும் வனப்புள்ளதாக இருக்கலாம். எனவே நான் உனக்குப் பெரிதாகஇல்லை... ...இல்லையா?

என் சிஷ்யையே, நான் உனக்காக அனுதாபப் படுகிறேன். அறிந்த ஒன்று என்பதன் 'மயக்கில்' அழியாத ஒன்றைப் பணயப் பொருளாக வைத்துவிட்டாய்!

உனக்கு வாழ்க்கை இனிமையாகப் படலாம், உன் நினைவுகள் மண்டிவிட்ட என்னுள்ளம் எரியும் சுவாலையாக, எப்பொழுதும் இல்லாவிட்டாலும் சிலபோதுகள்...! அதனை உன்னுல் மறுக்கமுடியுமா?

'ஆசிரியரே, காலம் என் முடிவை உணர்த்தும்' என்ற உன் 'மணிமொழி'யை மகா கவிஞன் ஒருவனின் தீர்க்க தரிசன வாக்காகக் கொண்டாடும் அறிவீனம் என்றும் எனக்கில்லை.

வசந்தகாலத்தின் மலர்கள் சாதாரணமானவை. அவை அளவில் அதிகமானவை. ஆனுல் காலாகாலமாகக்காத்திருந்த, வசந்தமலர் உதிர்ந்தால் வேதனையன்ருே! வண்ணச் சிட்டுக்களின் பரிச்சயம் இந்த ஏழைக் கலைஞனைக் 'கிறங்க' வைத்ததில்லை. வேண்டுமளவுக்குக் குடித்து, வெறித்து, அனுபவித்த குடிகாரனின் போதை நிறைந்த விழிகளை ஒத்த நிலையிலாவது பெண்மையை ஸ்பரிசித்த அனுபவம் உனது குருவுக்குண்டு. ஆனுல் என்னருமைச் சிஷ்யையே,

மானிதத்தின் மென்மையையும்அன்பையும், ஏனைய இனிய பண்புகளையும் உணர வைத்த வசந்தத்தில் அனல் மோதிவிட்டது. அல்லவா?

'ஆம்' என உன்னுலியலாது! பாவம். நீ ஒரு பயந்தாங் கொள்ளி!

என்னினிய சிஷ்யையே! வழமையாக உன்னிடம் 'யாசிக்கும்' ஒரு கடிதமல்ல இது. கலைஞனின் படைப்பு. உணர்ச்சிகளின் ஓட்டம்!

பிரபஞ்சம்—மாயை—அநித்யம் என்பவற்றின் சேர்க்கைகளிலிருந்து விடுபடல் என்பது எமக்கு இயலுவதொன்ரு...?

ஆசைகள் உள்ளவரை மனிதன் மனிதன் தான். இறப்பிருந்தாலும் பிறப்புகள் உண்டு அவனுக்கு எந்தச் சமயச்சாத்திரமும் புறக்கணிக்க முடியாத நியதி. உண்மை இது.

மனிதன் ஆசைகள் உள்ளவரை அமரன்,.ஏன்? 'அழியாதது' அவனிடம் இருக்கவே செய்கின்றது.

விழிகளில் விளிம்பு புரையும் நீருடன் விளம்புதற்கு ஒன்று உளதேல் அது இது தான்!

என்னன்புச் சிஷ்யையே, 'அழியாதது; அது என்ன...'?

(யாவும் கற்பனை)

## வரலாறும் இலக்கியமும்

வரலாறு கடந்த காலத்தின் கன்னிகை; நிகழ்காலத்தின் மனைவி; வருங்காலத்தின் தாய். அவளுடைய கன்னிப் பருவத்தின் இன்பக் கனவுகளை, எழில் மிகு கற்பனைகளை எடுத்தியம்புவதே இலக்கியம்.

'வரலாறும் வாழ்வும்'


## உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினுலும் மந்திர சக்தியினுலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் தலைவர்களுக்கு பிரதமர் அழைப்புவிடாதது ஏன்?

**'நாடற்றவர்' பிரச்சினை பற்றி கருத்தறிய காங்கிரஸ் தலைவர்களை அழைக்கப் பிரதமர் தவறியதற்கும், நமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களை அழைத்தற்கும் உரிய காரணத்தை இக்கட்டுரையாசிரியர் ஆராய்கிறர். மலைநாட்டு மக்களுக்காகப் போராடும் இலட்சிய உறுதிப்பாடு இ. தொ. கழகத்திடம் இருப்பதாகவும், அந்த இயக்கத்தைக் கட்டிக் காக்க மலைநாட்டு மக்கள் முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.**

## மலை நாடு

ஈழநாடு சுதந்திரம்பெற்ற பின் முதல் கடமையாக மலைநாட்டு மக்களின் வாக்குரிமையை வேட்டையாடியது. பின்பு திட்டமிட்டு நம்மை நாடற்றவர்களாக்கி, மனித உரிமைகளைச் சூறையாடி திரிசங்கு சொர்க்கத்தில் தள்ளிவிட்டனர் ஆட்சியாளர்.

பெரும்பான்மை மக்களின் பதவி வெறிக்குப் பலிக்கடாவாக நம்மை வைத்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ற அரசியற் கட்சிகள் முயன்று வெற்றி கண்டன.

இந்தவெறி, உச்ச கட்டத்தில் உயர்ந்தபோது தமிழ் மக்களின் மொழி, குடி உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டன. இந்த நிலையைக்

### கரவைச்சலீம்

கண்ட தந்தை செல்வநாயகம் கண்ணீர் விட்டார்.

தமிழ்பேசும்மக்கள் ஒன்றுபட்டு மூவர்ணக் கொடியின் அணைப்பில் உணர்ச்சி கொண்டு ஆட்சியை ஆட வைத்தனர்.

இந்த நிலையிலும் நமது மலைநாட்டுத் தலைவர்கள் பதவி ஆசையினுல் உந்தப்பட்டு உணர்ச்சிகளை உதறி விட்டு உலக நாடுகளில் பவனி வந்தனர்.

### ஏன் அழைத்தனர்?

இந்தத் தருணத்தில் தான் இலங்கைவாழ் தமிழர்களை ஒன்றுபடுத்தி இழந்த உரிமைகளைத் திரும்பப் பெற அறப்போர் தொடுத்து தமிழரசாரின் இ. தொ. க. மலைநாட்டில் நுழைந்தது.

ஏமாற்றப்பட்ட தொழிலாளி இ. தொ. க. வில் நாட்டங்கொண்டான். தமிழ் பேசும் மக்களின் குரல் மலைநாட்டில் ஒலித்ததும் ஆட்சியாளர் விழிப்புக்கொண்டு விட்டார்கள்.

மக்கள் சக்தி ஒன்ருகிவிட்டது. எனவேதான் தந்தை செல்வாவை அழைத்தனர் ஆட்சியாளர்-நாடற்ற எம்மைப் பற்றிக் கருத்தறிய.

பலவருடங்களாக நமக்குத் தலைமை தாங்கிய காங்கிரசுகளை அரசாங்கம் எண்ணிப் பார்க்கவே இல்லை! ஏன்? அவர்களைப் புரிந்து விட்டது ஆட்சியாளருக்கு.

நமது உரிமைகளைப் போராடிப் பெற முடியுமானுல் அது இ. தொ. க. வால் தான் முடியும். அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினுல்தான் மலைநாட்டுப் பிரச்சினைக்கும் முடிவுகாணலாம் என்று ஆட்சியே கருதும்போது நாம் இன்னமும் காங்கிரசுகளை நம்பவேண்டுமா?

செயலாற்ற இ, தொ. க. உறுதுணையாகும். மலைநாட்டானின் கலங்கரை விளக்கும் இ. தொ. க. தான். நமது உழைப்பைத் தந்து நமது உரிமைகளைப்பெற உதவ முன்வந்துவிட்டோம். இ. தொ. க. கண்ணியத்துடன் கடமை செய்யும். நமது வாழ்வும் சிறக்கும்.

### கர்வம் பிடித்தவர்!

'நேருவைப் போன்ற கர்வம் பிடித்த தலைவரை நான் சந்தித்ததில்லை.'

—சீனப்பிரதமர் சூ. என்-லாய்

பின்னே என்னவாம்? இந்தியாவில் சீன கைப்பற்றிய பகுதிகளைச் சீனவிடமே விட்டு வைக்கச் சம்மதம் தெரிவிக்க மாட்டேனென்று விட்டாரே அந்த நேரு! கர்வமில்லாவிட்டால், அவர் அப்படிச் செய்திருப்பாரா?

### இனிப்பான உபாயம்!

டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்குபற்றும் வீரர்கள் எல்லோருக்கும் ரஷ்யா 300 தொன் இனிப்பு, சொக்லேட் வகைகள் அனுப்பி வைத்துள்ளது.

—செய்தி

ஒலிம்பிக் விளையாட்டுக்களில் ரஷ்யா வெற்றி பெறுவதற்கு இதுவும் ஒரு உபாயமாக இருக்கலாம் என்று ஜப்பானில் உள்ள எமது இரகசிய நிருபர் காதோடு காதாகச் சொல்லி வைக்கிருர்.

### பெண் பேய்

பெண்ணுருவில் வந்த பேய், தொழிலாளிடம் சேட்டை.

—செய்தி

'பெண்ணென்ருல் பேயும் இரங்கும்' என்பது பழமொழி. பேயே பெண்ணுருவில் வரும்பொழுது...?

### இனிமேல் இல்லை!

'தமிழ் மக்களின் நலனுக்காகச் சென்ற சத்தியாக்கிரகங்களில் பங்குபற்றி அதற்காக இதர தலைவர்களுடன் அரசாங்கத்தினுல் மறியலில் வைக்கப்பட்டேன் என்பது எனது கடந்தகால அரசியல் வாழ்க்கையிலிருந்து புலனுகும்.'

—திரு. சிவசுந்தரம் (கிளிநொச்சி எம். பி.)

இனிமேல் அத்தகைய சந்தர்ப்பத்துக்கு எனது வாழ்க்கையில் இடமளிக்க விரும்பாததாலேயே, புதிய கட்சிஒன்றினை ஆரம்பித்துள்ளேன்!

### மனமில்லையே!

திருகோணமலைப் பகுதியிலுள்ள கட்டுக்குளம்பற்று மேற்கில் புதிய காரியாதிகாரி அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டும், காரியாதிகாரி இன்னும் நியமிக்கப்படவில்லை.

—செய்தி

'மனம் இருந்தால் இடமுண்டு' என்பார்கள். ஆனுல், இங்கோ அது தலைகீழ்ப் பாடமாயிருக்கிறது! இடமிருந்தும் மனத்தைத்தான் காணும்!

### நங்கையர் வங்கி!

முற்றிலும் பெண்களே கடமையாற்றும் வங்கியொன்று பாங்கொக்கில் திறக்கப்பட்டுள்ளது.

—செய்தி

அது இயங்க ஆரம்பித்துச் சில வாரங்களிலேயே, பாங்கொக்கிலுள்ள மற்ற வங்கிகளெல்லாம் 'கடை மூடி' விட்டதாகக் கேள்விப்பட்டாலும், ஆச்சரியமில்லை.

# கவலைவேண்டாம் ★ குளிர்ந்த நீர் குமுறும் உணர்ச்சியை அடக்கும்

உங்களை வாட்டும் கவலைகளையிட்டுக் கூறும்படி கேட்டிருந்தோம். எம் முன்னே கவலைகள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. உங்கள் கவலைகளை தீர்த்துவைக்க வேண்டுமே என்ற பெரும் கவலை எம்மைப் பிடித்தாட்டுகிறது. அதிகமாக வளர்க்காமல் உங்களுடைய கவலைகளைத் தீர்க்கும் பணியினை மேற்கொண்டுவிடுகிறேம்.

உங்களை வருத்தும் கவலைகள் பல இங்கு குறிப்பிட முடியாதிருக்கின்றன. ஆகவே உங்கள் புனைபெயரையும் ஊரையும் குறிப்பிட்டு விட்டு உங்கள் கவலை தீர வழியைக் கூறுகிறேம்.

—ஆனந்தன்—

**குகன்—வெள்ளவத்தை**

அரசாங்க ஊழியம் பார்க்கும் போதும், மென்மேலும் படித்துப் பட்டம் பெற வேண்டுமென்ற தங்கள் ஆசை போற்றத்தக்கதே. உங்களுக்கு புத்தக அறிவைவிட சுயமான சிந்தனையினுல் ஏற்படும் அறிவு அதிகப் என்றே கருத இடமுண்டு. ஆனுல் திடமான உறுதியான இலக்கை ஒட்டிய எண்ணம் குறைவு. குறிப்பாக ஒரே இலக்கை நோக்கி உங்கள் கருத்துச் செலுத்தப்பட்டால் நன்மை உண்டாகும். நீங்கள் செய்யும் தொழிலில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. இக்கருத்தையும் வாழ்க்கையில் அனுசரியுங்கள்.

**தமிழ் அபிமானி-இளவாலை**

வாழ்க்கை முன்னேற்றம், தொழில் முதலிய கவலைகள் தங்களை வாட்டுகின்றன. ஓரளவு அறிவு பெற முன்பே, எல்லாம் தெரிந்துகொண்டவர் போல் நடிப்பது கூடாது. கவலைகளினுல் பரீட்சையில் சித்தியடைய முடியாது. கருத்தாலேதான் சித்தியடைய முடியும். பெரியோர்களின் சொற்கேட்டு நடக்கப் பழகிக் கொள்ளுங்கள். வீண் பொழுது போக்குவதும் தவிர்க்கப்பட வேண்டும். தன்னிச்சைப்படி நடப்பதும் நன்மை தராது. தங்கள் செயல்கள் எத்தன்மையதாயிருந்தாலும் எதிர்ப்புகள் தோன்றலாம். சகிப்புத் தன்மையையும்பொறுமையையும் கைக்கொண்டு கைத் தொழிலில் நாட்டம் செலுத்துவது உங்களுக்கு நன்மை தரும்.

**கனகு-செம்பியன்பற்று**

பால் கவர்ச்சி உங்களைப் பிடித்துள்ளது. எப்பொழுதும் அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து குளித்துவிடுங்கள். மனப் பாரம் குறையும். சிறிது நேரம் வெளியில் உலாவுங்கள். பசுமையான மரங்களை, செடி கொடிகளைப் பாருங்கள். அவைகளை ஒட்டியே உங்கள் சிந்தனைகளை ஓடவிடுங்கள். தனித்து அறையில் எப்போதும் இருத்தலைத் தவிர்க்க வேண்டும். பருவ உணர்ச்சிகள் தலை தூக்கும் பொழுது குளிர்ந்த நீரைக் குடியுங்கள். இத்தகைய உணர்ச்சி வசப்படக்கூடிய கதைகளைப் பேசும் உங்கள் நண்பர்களை ஒதுக்குங்கள். மலிவான நாவல்கள் படிப்பது தவிர்க்கப்படவேண்டும். உங்கள் போன்ற இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக நீங்கள் திகழக்கூடிய வழி வகைகளையிட்டுச் சிந்தியுங்கள். ஒருமாதம் இம்முறையில் பயிற்சி செய்த பின்னர் எழுதுங்கள். உங்களுக்குப் பயமும் அதே நேரத்தில் கடவுள் பக்தியும் உண்டு. பயத்தை விலக்கி பக்தியை வளருங்கள். இறைவனையிட்டு எண்ணுங்கள்.

**சரஸ்-பரந்தன்**

இன்றைய வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை என்பது ஓரளவு உண்மைதான், வாழ்க்கையின் ஆரம்பத்தில் துன்பப்பட்டவர்களே முன்னேறியுள்ளனர். சொந்த முயற்சியால் முன்னேறவேண்டிய நீங்கள் மனத்தை வீணுக அலட்டிக்கொள்ள வேண்டாம். சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் உண்டாகும் ஏமாற்றங்களைக் கண்டு அசந்துபோகாமல், துணிந்து நின்று வெற்றி கண்டவர்கள் பலர். நாம் நினைப்பவை அனைத்தும் நிறைவேரு. திடநம்பிக்கையும் செய்யும் தொழிலில் கவனமும் வேண்டும். பொறுமையுடன் உங்கள் இடுக்கண்களை எதிர்கொண்டு வெற்றிகாணுங்கள். சுற்றியிருப்பவர்களின் கிண்டலுக்குச்செவி கொடாதீர்கள். அன்ருடம் நீங்கள் ஆற்றிய பணிகளில் உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக அமைந்தவற்றை, தினசரி படுக்கப் போகும்போது, சிந்தித்துப்பாருங்கள். உங்களைப்போன்ற பாக்கியசாலிகள் வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்ற முடிவுவீர்கள். தோல்வி மனப்பான்மையை விட்டொழியுங்கள். வீண் வாக்குவாதங்கள் இப்பொழுது நன்மை பயக்கா. உங்கள் கொள்கையே சரியானது என்று மற்றவர்களிடம் நிலை நிறுத்த முற்படாதீர்கள்.

**தர வேண்டிய விபரங்கள்:**

வழமையான பெயர்:—
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)
சொந்தப் பெயர்:—
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)
பிறந்த திகதி :—
மாதம் :—
ஆண்டு :—
வழமையான கையொப்பம் :—

ஆனந்தன்,
'கவலை வேண்டாம்'
த. பெ. இல. 1183
கொழும்பு-12


''எனது தொண்டையில் சிறிது வேப்பர் கிறீமைத் தடவினேன். தொண்டை எரிச்சலும், தடிமனுக்குரிய அறிகுறிகளும் அடுத்த நாள் மாயமாய் மறைந்து விட்டன.''

—திருமதி எஸ். டபிள்யூ.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டு வாங்குங்கள்.

எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிரேக்க அறிஞர் ஆர்க்கிமிடீசு

மாமல்லன்

உலக மக்களில் அநேகர் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கிரேக்கர், உரோமர், தமிழர் முதலாய இனத்தவர்கள் பண்பட்ட மக்களாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது சரித்திரம் கூறும் உண்மை. தமிழ் மக்களுக்கும் கிரேக்க, உரோம மக்களுக்குமிடையில் பல்வேறுபட்ட தொடர்புகள் இருந்தன என்பதை இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். கிரேக்கரை யவனர் எனத் தமிழர் அழைத்தனர்.

## பிறப்பு

இவ்வாறாகத் தமிழ் மக்களுடன் தொடர்பு கொண்டிருந்த கிரேக்க மக்கள் மத்தியில் எத்தனையோ அறிஞர்கள் தோன்றினர். சோக்கிரட்டீசு, அரித்தோட்டில், பிளேட்டோ, ஆர்க்கிமிடீசு முதலியோர் கிரேக்க அறிஞர்களில் முதன்மையானவர்கள். முன்னைய மூவரும் மெய்விளக்கர், ஆர்க்கிமிடீசு ஓர் அறிவர். அவரை அறிவர் என்று பொதுவாகக் குறிப்பிடுவதிலும் பார்க்க அவரை ஒரு கணிதர், வானவியலர், பொறியியலர் என்று குறிப்பிடுதல் சாலப் பொருந்தும்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நடு நிலக்கடலிலுள்ள தீவான சிசிலியில் சைரசி- என்னும் நகரில் ஆர்க்கிமிடீசு பிறந்தார். அலெக்சாந்திரியா நகரில் கல்வி பயின்றார். நாட்டில் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார்.

## கிரீடம் தந்த தத்துவம்

ஒரு நாள் நாட்டு மன்னன் ஆர்க்கிமிடீசை அழைத்தான். புதிதாகத் தான் செய்வித்த கிரீடத்தில் தங்கத்தைத் தவிர வேறு உலோகம் கலக்கப்பட்டிருக்கின்றதா என்பதைக் கிரீடத்தை உருக்காமலே கண்டுபிடிக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆர்க்கிமிடீசு அதற்குரிய வழிவகைகளைப் பற்றிப் பல நாட்களாகச் சிந்தித்தார். ஆனால் வழியாதும் தோன்றவில்லை.

சிந்தனையே உருவாக இருந்த ஆர்க்கிமிடீசு ஒரு நாள் நீர்த்தொட்டியில் நீராடிக்கொண்டிருந்தார். நீராடிக்கொண்டிருக்கையில் திடீரென எண்ணம் ஒன்று உதித்தது. உடனேயே ஆர்க்கிமிடீசு களிப்பு மிகுதியால் தொட்டியை விட்டு வெளியேபாய்ந்தார். 'கண்டு பிடித்துவிட்டேன் கண்டு பிடித்துவிட்டேன்' என்று கூவிக்கொண்டே அவர் உடையற்ற நிலையில் தெருவெல்லாம் ஓடினார். தெருவில் நின்ற மக்கள் அனைவரும் வெட்கத்தால் ஒதுங்கினர்.

உண்மையிலேயே ஆர்க்கிமிடீசு ஒரு பேருண்மையைக் கண்டுபிடித்து விட்டார். அந்த உண்மையைத்தான் நாம் இன்று ஆர்க்கிமிடீசின் தத்துவம் என அழைகின்றோம்.

## திருகு ஏந்திரம்

'எந்தப் பொருளும் நிலையாக நிற்கும் ஒருதிரவத்துள் முழுமையாகவோ, பகுதியாகவோ மூழ்குவதினால் வெளியேற்றப்படும் திரவத்தின் எடையளவு எடையை அந்தப் பொருள் இழந்து

## அறிவியல் அரங்கு

விட்டதாகத் தோற்றும்' என்பதுதான் ஆர்க்கிமிடீசின் தத்துவம். பின்னர் கூறவா வேண்டும்? மன்னனது கிரீடத்தில் கலப்பு உலோகம் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

மன்னன் ஒருவனின் கிரீடம் காரணமாகக் கண்டு பிடிக்கப்பட்ட தத்துவம் இன்று திரவ நிலையியலுக்கு (கைட்ரோஸ்டாட்டிக்ஸ்) அடிப்படையாக அமைந்துள்ளதைக் காண்கின்றோம்.

இவ்வாறாக அறிவியல் விருத்திக்காக ஆர்க்கிமிடீசு பாடுபட்டுக் கொண்டிருக்கையில் உரோமர் சைரகியூசு நகர்மீது படையெடுத்தனர். இதைக்கண்ட சைரகியூசு மன்னன் அவசர அவசரமாக ஆர்க்கிமிடீசை அழைத்தான். நகரின் பாதுகாப்புக்காகப் புதுவித ஆயுதங்களை ஆக்கித்தருமாறு கேட்டுக்கொண்டான்.

ஆர்க்கிமிடீசு சுமைதூக்கிகளை நிர்மாணித்தார் அச்சுமைதூக்கிகள் எதிரிகளின் கப்பல்களை உயரத் தூக்கிக் கடலில் போட்டுச் சேதப்படுத்தின. இன்னும் சில எந்திரங்கள் கப்பல்களைக் கரைவரை இழுத்துப் பாறைகளோடு மோத வைத்தன. ஆடிகளையும் (கண்ணாடி) வில்லைகளையும் (லென்ஸ்சு) முறையாக வைத்துச் சூரியனின் கதிர்களைக் குவியச் செய்து பகைவர்களின் கப்பல்களுக்குத் தீ வைத்தார். ஆர்க்கிமிடீசின் இந்த ஒரு செய்கையினால் மூன்றாண்டுகளாக உரோமர்களால் சைரகியூசை யாதும் செய்ய முடியவில்லை. மூன்றாண்டுகளுக்குப் பின் உரோமர் சைரகியூசை வஞ்சகத்தால் வென்றனர்.

## இனப்பற்று மிக்கவர்

வெற்றி வெறியில் வந்த உரோமப் படைஞன் ஒருவன் ஆர்க்கிமிடீசைக் குத்தி கொன்றான். இதைக் கேள்விப்பட்ட உரோமத் தளபதி தாங்கொணாத் துயர்கொண்டான். உரோமரை எதிர்த்துப் போரிடுவதில் கிரேக்க மன்னனுக்கு உறுதுணையாக ஆர்க்கிமிடீசு இருந்தாலும் அவர் அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டவர் என்பதை உரோமத் தளபதி அறிந்திருந்தான். அதனால் அவன் ஆர்க்கிமிடீசை ஒரு மன்னனுக்குரிய மரியாதையுடன் அடக்கம் செய்தான்.

ஆர்க்கிமிடீசின் கல்லறையில் அவருக்கு மிகவும் விருப்பமான கணித உருவங்கள் இரண்டைச் செதுக்குவித்தார். அவ்வுருவங்கள் தான் உருளையும் (சிலிண்டர்) உருண்டையும் (ஸ்பியர்.) உருளையையும் உருண்டையையும் அறியாத மாணவனோ மாணவியோ இன்று நம் மத்தியில் இல்லையெனலாம். ஆகவே உருளையையும் உருண்டையையும் நாம் காணும் போதெல்லாம் ஆர்க்கிமிடீசை ஞாபகப் படுத்திக்கொள்வோமாக.

பொறியியல் அறிவுக்கு வித்திட்டவர் ஆர்க்கிமிடீசு. இனப்பற்று மிக்கவர் ஆர்க்கிமிடீசு. விடுதலை விரும்பி ஆர்க்கிமிடீசு ஆகவே, தமிழ் பேசும் மாணவர்களாகிய நாம் என்றென்றும் அப்பெரியாரை மறவாதிருப்போமாக.

['மாணவர் மன்ற' வெளியீடான 'இளந் தமிழகம்' என்னும் மாத இதழில் இருந்து எடுக்கப் பட்டது]


## வேல் படை, மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தழுவணி, பித்தவெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான் முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## அறிமுகப்படுத்துகிறோம்



## திரு. எம். டி. மோசஸ் (27)

'கலையுலகில் காலடி எடுத்து வைக்குமுன்னரே பலர் தாங்கள் பெரும் கலை வல்லுனர்கள் என்று கர்வம் பிடித்து கண்டபடி உளற ஆரம்பித்து விடுகிறார்கள். இத்தகைய போலித்தனம் ஒழிந்தால் தான் நாடக உலகம் முன்னேற முடியும்'. இத்தகைய கருத்தையுடையவர் தான் கலைஞர் எம். டி. மோசஸ்.

27 வயதுடைய இளைஞரான திரு. மோசஸ் இது வரை பத்து நாடகங்கள் வரையில் நடித்திருக்கிறார். 'ரோமியோ அண்ட் ஜூலியட்' நாடகம்தான் தமக்குப் புகழ் தேடித் தந்த நாடகம் என்று கூறுகிறார்.

கத்திச் சண்டைப் பயிற்சியும் பெற்றுவருகிறார். நாடகத்துறையில் எப் பாகமும் ஏற்றுத் திறம்பட நடிக்க வல்லவர். கொழும்பில் நடைபெறும் நாடகங்களை யிட்டுக் கருத்துக் கூறும் போது இங்கு போதுமான அளவு இரசிகத்தன்மை வளரவில்லை என்று கூறினார். கொழும்பிலுள்ள 'மூசாஜி' நிறுவனத்தில் பணி புரியும் இவ் விளைஞர் நாடகப் பயிற்சியிலும் ஓரளவு கவனம் எடுத்து வருகிறார்.

## திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் (28)



சிரிப்பூட்டுவது பெரியதொரு சாதனை. நல்ல கருத்துக்களை நகைச் சுவையுடன் கூறி மக்களுக்குச் சிரிப்பூட்டும் பணியினைச் செய்து வருகிறார் திரு ஆர். ரி. சுப்பிரமணியம். இவர் தென் மராட்சி முத்தமிழ் கலா மன்றத்தின் போஷகராவர்.

பாடசாலை ஆசிரியராகப் பணி புரியும் இவர் பொது நிறுவனங்களிலும் புகுந்து அரிய பெரிய சேவைகளை ஆற்றி வருகிறார். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல நாடகங்களில் தோன்றி இரசிகர்களைத் தமது நகைச் சுவையால் மகிழ்வித்துள்ளார்.

1956-ல் நடைபெற்ற தென்மராட்சி முத்தமிழ் கலாமன்றப் பொங்கல் விழாவில் 'நகைச்சுவைக் குமரன்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது. சமூகத்திலாற்றும் தொண்டுகளுக்காக மீசாலை வாசிகள் இவருக்கு சமூக மணி என்ற பட்டத்தையும் அளித்தனர்.

நகைச் சுவை மட்டுமல்லாமல் கட்டுரை எழுதுவதுடன் மேடைப் பேச்சிலும் வல்லவர்.

# கலைமகளுக்கு விழா எடுக்கத் தடை?

கள்ளக் குடியேற்றத் தடுப்பு என்ற போர்வையில் வடபகுதியில் இராணுவம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டிருப்பதும், வடபகுதி மக்கள் மீது இராணுவம் ஒருவகைச் சர்வாதிகாரம் செலுத்தி வருவதும் நாடு அறிந்ததே. கள்ளக்குடியேற்றக் காரர்களைப் பிடிப்பதற்காகக் கடற்கரைப் பிரதேசத்தில் நிறுத்தப்பட்டுள்ள இவர்கள் மீன் பிடியாளர்களுக்குத் தொல்லை கொடுத்தும் அவர்களின் உடைமைகளைச் சேதப்படுத்தியும் வந்தார்கள்.

இப்பொழுது இந்த இராணுவ வீரர்களின் நடமாட்டம் கடற்கரைப் பிரதேசம் தவிர்ந்த உள்ளூர்க் கிராமங்களில் அதிகரித்திருக்கிறது. இதனால் வடபகுதியிலுள்ள கிராமப்புற மக்கள் இரவு நேரங்களில் வெளியில் தலை காட்டுவதற்கு அஞ்சுகிறார்களாம்.

'61ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது சிங்கள ஆட்சி வடமாகாணத்தில் செயலற்றிருந்தது. அந்த நிலைக்குப் பழிவாங்கும் முறையில் இப்பொழுது வடமாகாணத்தில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது' என்றுஒரு முதியவர் கூறியது முற்றிலும் பொருத்தமானது.

உள்ளூர்ப் பகுதிகளுக்குத் திக் விஜயம் செய்யும் இராணுவ வீரர்கள் பொதுமக்களிடமிருந்து பொன்னையும் பொருளையும் விட்டு வேறு எதையெல்லாமோ எதிர்பார்க்கிறார்கள்.

மலேயாவில் இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் இருந்த ஒரு அன்பர் 'இலங்கை இராணுவத்தினரின் சில செயல்கள் ஜப்பானிய இராணுவத்தினரின் செயலை மிஞ்சிவிட்டது' என்று வர்ணித்துள்ளார்.

இராணுவத்தினரின் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு உடன் முற்றுப் புள்ளி வைக்கத் தவறினால் எதிர்கால இன விடுதலைப் போராட்டத்தை பெரிதும் பாதிக்கும். தமிழரசுக் கட்சிப் புதிய பொதுச் செயலாளர் வடபகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பாரா என்ற கேள்வி பரவலாகக் கேட்கப்படுகிறது.

### வட மாகாணப் புதினம்

யாழ்ப்பாணப் பகுதிகளில் உள்ள சில கல்லூரிகளில் கடந்த ஆண்டுகளைப் போன்று இவ்வருடம் சரசுவதி பூசையைக் கொண்டாட முடியவில்லையென்று மாணவர்கள் வருத்தப்பட்டுள்ளார்கள். அரசாங்கம் கல்லூரிகளைப் பொறுப்பேற்ற பின்னர் இவ்வித சமய, கலாச்சார நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக்கொண்டாடுவது அத்தனை சுலபமானது அல்ல என்று ஒரு சில ஆசிரியர்களும் குறைப்பட்டுள்ளார்கள். இதற்குரிய காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றைநிவர்த்திசெய்வது தமிழ்பேசும் மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும்.

—சங்கிலியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்த சபையினர் அளிக்கும்

# தமிழிசை விழா

கொழும்பு விவேகானந்த சபையினர் இவ்வருடமும் தமிழிசை விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர். 17ம் திகதி சனிக்கிழமையும் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் விவேகானந்த மண்டபத்தில் இவ்விழா நடைபெறுகிறது.

முதலாவது நாள் நிகழ்ச்சிக்கு இஸ்ரேல் நாட்டுத் தூதுவரான கௌரவ எஸ். ரமடி தலைமைதாங்குகிறார். பிரபல நாதசுர வித்துவான்களான திரு. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, திரு. எம். பி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் நாதசுர இசையுடன் விழா தொடங்குகிறது. பிரபல தவில் வித்துவான்களான திரு. எஸ். பி. தட்சணாமூர்த்தி, திரு. எம். கே. கணேசபிள்ளை முதலியோர் தவில் வாசிக்கின்றனர்.

திரு. கு. சந்திரபாலன், செல்வி கௌரீசுவரி கனகரத்தினம், ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், திருமதி நீலா ராமேஸ்வரி, செல்வி லட்சுமி மாத்துருபூதம் ஆகியோரின் வீணைக் கச்சேரியும், செல்வி சரோஜினிதேவி குமாரசாமியின் வயலின் இசை விருந்தும் முதல் நிகழ்ச்சியில் இடம் பெறுகின்றன. செல்வி யோகா சொக்கநாதனின் பரத நாட்டியமும் இடம் பெறும்.

ஞாயிற்றுக் கிழமை நிகழ்ச்சிகளுக்கு நீதியரசர் பொ. ஸ்ரீஸ்கந்தராசா தலைமை தாங்குகிறார். தாளவாத்தியக் கச்சேரியுடன் நிகழ்ச்சிகள் தொடங்கும். வீணைக் கச்சேரியைத் தொடர்ந்து மெல்லிசை விருந்தும் இடம் பெறும். மெல்லிசைப் பாடல்களையும் இசை அமைப்பையும் 'அங்கவை' ஏற்றுள்ளார்.

திருமதி மகேஸ்வரி அப்பாத்துரை, செல்வி பஜனேஸ்வரி தில்லைநாதன் ஆகியோரின் வீணைக் கச்சேரிக்குப் பின்னர் செல்வி நேசபூபதி நாகலிங்கத்தின் இசை விருந்தும் இடம் பெறும். திரு. வ. க. நடராசன், திருமதி பிஸ்வகாதேவி ஆகியோரும் பாடுகிறார்கள். திரு. எஸ். இராமசாமி ஐயர், செல்வன் செந்தில் தியாகராசா ஆகியோரின் புல்லாங் குழல் இசையும் உண்டு. இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. நடராசாவின் சிறப்புரையைத் தொடர்ந்து யோகாம்பிகை மெய்யப்பன், செல்வி இந்திரசாந்தி யோகராசா முதலியோர்களின் பரத நாட்டியமும் இடம்பெறும்.

இருநாள் நிகழ்ச்சிகளுக்கும் செல்வன் நேசதுரை தியாகராசன், திருவாளர்கள் வி. சங்கரலிங்கம், அ. விசுவநாதன், த. இரத்தினம், த குமாரசிவம், எஸ். கணபதியாபிள்ளை, சு. தமிழ் நாதன், இரா. சோமநாதன், எஸ். சோமஸ்கந்த சர்மா முதலியோர் பின்னணி வாத்தியங்களை மீட்டுகின்றனர்.

நவராத்திரி விழா, வாணி பூசை முதலிய விழாக்கள் முடியும் தறுவாயில் இத் தீகைய இசை விழாவை கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளனர் விவேகானந்த சபையினர்.



பி எஸ். ஆறுமுகம்பிள்ளை



எஸ். வி. தட்சணாமூர்த்தி

## கல்கத்தாவில் எம். ஜி. ஆர்.

"தமிழ் மணம் வீசாத பிரதேசத்தில் — தமிழ் நாட்டிலிருந்து பல நூறு கல்களால் பிரிக்கப்பட்டிருந்தும் தமிழின் சுவை குன்றுமல் பேசியும், தமிழன் பண்பு குன்றுமல் வாழ்ந்தும், தமிழ் பணியில் சிறந்தும் இங்கு செயல் புரியும் தமிழர்களைக் காண நான் பெருமையும் பேருவகையும் அடைகிறேன்." இவ்வாறு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தமக்கு கல்கத்தா தென்னிந்திய சங்கங்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

ஆர். ஆர். பிக்சர்ஸ் தயாரித்து வரும் புதிய தமிழ்ப் படத்துக்கான வெளிப்புறக் காட்சிகள் கல்கத்தாவிலுள்ள 'பொட்டானிக்கல்' பூங்கா, விக்டோரியா ராணி நினைவு மண்டபம், அவுராபாலம், ரவீந்திரநாத் தாகூர் ஏரி போன்ற இயற்கை எழில் ததும்பும் சூழலில் படமாக்கப்படுகின்றன.



ஆர். ஆர். பிக்சர்ஸ் குழுவினருடன் எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஆர். விஜயா, சௌகார் ஜானகி, சக்தி கிருஷ்ணசாமி, இயக்குநர் ராமண்ணா முதலானோரும் சென்றிருந்தனர். இவர்களனைவரையும் வரவேற்று உபசரிக்குமுகமாக கல்கத்தாவிலுள்ள தென்னிந்திய சங்கங்கள் ஒன்றுசேர்ந்து ஓர் பெருவிழா ஏற்பாடு செய்திருந்தன.




## வாழ்க்கை முறையைச் சித்தரிக்கும் படங்கள்

இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளின் மக்கள் வாழ்க்கை முறை, பண்பாடு, பொருளாதார நிலை ஆகியவற்றைச் சித்தரிக்கும் திரைப்படங்களின் பட்டியலை மேற்கு ஜெர்மனியிலுள்ள சர்வதேசப் பண்பாட்டுப் பரிமாற்றக் கழகத்தின் திரைப்படக் குழு தயாரித்து வருகிறது. இந்த நாடுகளைப்பற்றி வெளிநாடுகளில் நிலவிவரும் தவருன கருத்துக்களைப்போக்குவதற்காக பிறநாடுகளில் இந்தத் திரைப்படங்கள் திரையிடப்படும். பல படங்களைப் பார்த்து அவற்றில் குறிப்பிட்ட சில படங்களைத் தேர்ந்தெடுத்து இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

'இந் நாடுகளிலுள்ள மக்கள் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் இருக்கலாம். உணவு இன்றி, உடையின்றி, உறைவிடமின்றி அவர்கள் இன்று அவதியுறலாம். ஆனல், அவர்களுக்கும் அறிவும், ஆற்றலும் குடிப் பெருமையும் உண்டு. வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள அவர்கள் செய்யும் முயற்சியில், வளர்ந்துவிட்ட நாட்டு மக்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்' என்ற உயர்ந்த கருத்தை வெளிநாட்டு மக்களுக்கு உணர்த்தும் நோக்கத்துடன் இக்குழு இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

(யூ. பி. எஸ்.)



அழகுத் தேவதையாகத் திகழும் தேவிகா இப்படித் தோன்றுவது இளம் காளையரை மயக்குவதற்கா? அல்ல...அல்ல...கர்ணனை மயக்கவே இப்படிக் காட்சி தருகிறார். பத்மினி பிக்சர்சாரின் வர்ணத் தயாரிப்பான 'கர்ணன்' சினிமாஸ் அளிக்கும் தீபாவளி விருந்தாகும்.

## பொம்மை

ஒரு வருடத்துக்கு முன்னரே முடிவடைந்தும் திரைக்குவர முடியாமல் தவித்த எஸ். பி. கிரியேஷன்சுக்காக பாலச்சந்தர் புதுமையாகத் தயாரித்துள்ள 'பொம்மை' இப்பொழுது தமிழகத்திரைகளில் வெற்றி முழக்கமிட்டு வருகிறது. பரபரப்பூட்டும், திகிலூட்டும் கட்டங்களை இப்படத்தில், புகுத்திபெரிய வெற்றியினை பாலச்சந்தர் ஈட்டிவிட்டார் என்றே இரசிகர்கள் கூறுகின்றனா.

எல். விஜயலட்சுமி இப்படத்தில் பிரதான பாகத்தில் நடிக்கிறார். இப்படத்தின் வெற்றி விஜயலட்சு



மிக்கும் பெருவெற்றியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

## 'சிவலீலா' மீண்டும் வளரும்

சிவாஜிகணேசனை 9 வேடங்களில் தோன்றவைக்கும் 'நவராத்திரி' தீபாவளிக்கு திரைக்குவரவிருக்கிறது. இதன் இயக்குநர் ஏ. பி. நாகராஜன் தமது அடுத்த



தயாரிப்புக்கான திட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

1960ம் ஆண்டு பூஜை போடப்பட்டு, சேலத்தை அடுத்த ஓகனகல் என்னுமிடத்தில் படப்பிடிப்பும் நடைபெற்றது. காலமான கண்ணும்பா, சுப்பையா, பேபி விமலா ஆகியோரும் மற்றும் கோஷ்டி நடனமாடும் 20 மங்கையர் சம்பந்தப்பட்ட காட்சிகளும் 'சிவலீலா' வர்ணப்படத்துக்காகப் படமாக்கப்பட்டன. இப்படத்தில் 7 வேடங்களில் சிவாஜி தோன்றுவதாக இருந்தது. ஆனல் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டு விட்டது.

மீண்டும் இப் படப்பிடிப்பைத் தொடர கலைஞர் நாகராஜன் தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறார்.

திருவிளையாடல் புராணத்தில் வரும் ஏழு காண்டங்களை அடிப்படையாக வைத்தே 'சிவலீலா' படம் அமைக்கப்படும். இப்படத்தை ஹிந்தி, ஆங்கிலம் ஆகியவற்றிலும் தயாரிக்க எம். ஏ. வேணுவும் நாகராஜனும் திட்டமிட்டிருந்தனர். இப்பொழுது [illegible] இப்படத்தைத் தயாரிக்கிறார்கள்.

### தென்னவன் பிரமராயன்

யாழ்ப்பாணம்—கவின் கலை வளர்ச்சி மன்றத்தினர் எதிர்வரும் டிசம்பர் மாசத்தில் அரங்கேற்ற இருக்கும் 'தென்னவன் பிரமராயன்' என்னும் நாடகத்துக்கான நடிகர் தெரிவு கடந்த 26-9-64 சனிக்கிழமை மன்றக்காரியாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மன்றத் தலைவர் இரசிகமணி கனக செந்திநாதன் தலைமை வகித்தார்.

நாடகத்தை எழுதிய ஆசிரியரான யாழ்ப்பாணம்—தேவன் அவர்களும் சமுகமளித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்ரோவர்கள் நடத்தும் உரிமைப் போராட்டம்

ஆபிரகாம் லிங்கன் தன்னைக் காவு கொடுத்து, அமெரிக்க அரசியல் சட்டத்தில் 13வது திருத்தத்தை நிறைவேற்றி அடிமை முறையை 1865ல் அமெரிக்க மண்ணிலிருந்து சட்டபூர்வமாக ஒழித்துக் கட்டினன். அதிலிருந்து கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக தங்களுக்கான சம உரிமையைக் கோரி—அதாவது வெள்ளையரைப் போலவே முதல்தரக் குடிமக்களாகத் தங்களையும் நடத்த வேண்டும் எனக்கோரி நீக்ரோக்கள் ஓயாது கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர். பிராந்தியச் சூழ்நிலைக் கேற்ப அவ்வப்போது சிலர் சேர்ந்து செய்யும் அராஜகமாகவோ அல்லது கொலை—கொள்ளைகள் மூலமாகவோ நீக்ரோக்களின் உரிமை உணர்வு வெளிப்படுத்தப்பட்டு வந்தது. முறையாக, கட்டுக்கோப்பாக கண்ணியத்தின் அடிப்படையில் நீக்ரோக்களுக்குப் போராடவோ, அவைகளைப் பயிற்றுவிக்கத் திறமையான தலைவர்களைக் கண்டு பிடிக்கவோ இயலாமலேயே இருந்தது. நீக்ரோக்கள் அடிமைகளாக இல்லையெனினும், இரண்டாந்தரக் குடிகளாக வாழ்ந்து வந்தனர்; வெள்ளையர் எஜமானர்களாக இல்லையெனினும் சலுகைகள் பெற்ற முதல் தரக் குடிமக்களாக கோலாச்சிக் கொண்டிருந்தனர்.

## பஸ் வண்டியில் பாகுபாடு

இந்த நிலையில்தான், ஒரு சிறு நிகழ்ச்சி—அருகில் இருந்தோரைக் கூட அவ்வளவாகக் கவர்ந்திழுக்காத நிகழ்ச்சி—நெடுங்காலக் கிலேசங்கள் நொடிப் பொழுதில் சீராக அணிவகுக்கக் கூடிய அற்புத நிகழ்ச்சி 1955 டிசம்பர் 1ம் நாளன்று அலபாமா மாநிலத்தின் மாண்ட் கோமரி நகரத்தில் நடைபெற்றது.

அன்று மாலை திருமதி ரோசா பார்க்ஸ் என்ற நடுத்தரவயது நீக்ரோப் பெண்மணி, கடைகண்ணிக்குப் போன களைப்புடன் வீடு திரும்ப பஸ்வண்டியில் ஏறி அமர்ந்தாள். அவளைத் தொடர்ந்து வெள்ளையர்களும் அதில் ஏறினர். நெரிசலான நேரம். இடம் இல்லை. வெள்ளையர் சிலர் ஆசனமின்றி நின்றனர். அமர்ந்திருந்த நீக்ரோப் பெண்மணியை எழுந்து நிற்குமாறும், வெள்ளையருக்கு ஆசனமளிக்குமாறும் அந்த பஸ் வண்டியின் டிரைவர் வற்புறுத்தினன். அலபாமா மாநிலத்தின் சட்டம் அப்படி. வெள்ளையர் நிற்கும்போது, நீக்ரோக்கள் அமர்ந்திருக்கக் கூடாது. முதல் சலுகை அனைத்தும் வெள்ளையர்களுக்கே. வெள்ளையர் ஒதுக்கியதைத்தான் எங்கும் எதிலும் நீக்ரோக்கள் அனுபவிக்க வேண்டும் இந்த மரபுக்கேற்ப ரோசா பார்க்கை பஸ் டிரைவர் மிரட்டினன். தான் நிரம்பக் களைத்திருப்பதாகவும், தன்னல் எழுந்து நின்று பிரயாணம் செய்ய இயலாதென்றும் அவள் கெஞ்சினாள். சட்டப்படி எழுந்து நின்று வெள்ளையருக்கு ஆசனமளித்தே ஆக வேண்டும் என்று டிரைவரும் சாதித்தான்.

ரோசா பார்க்குக்கு மனித உரிமைகளைப் பற்றியோ அதற்காகப் போராடவேண்டும் என்பது பற்றியோ எதுவும் தெரியாது. வழிவழியாகப் பழக்கப்பட்டுப் போன அடிமை வாழ்வில் ஊறிப் போனவள் தான் அவள். வெள்ளையரை எதிர்க்க வேண்டும் என்ற சிந்தனை அவளுக்கு அப்போது இல்லை. தன்னல் நிற்பதற்கு இயலவில்லை என்று மனிதத் தன்மையின் அடிப்படையில் தான் டிரைவருடன் அவள் வாதாடினாள்.



மார்டின் லூதர்கிங்

## வரலாற்றை உருவாக்கிய வார்த்தைகள்

வாதம் வலுத்தது. இறுதியாக 'என்னல் எக்காரணங் கொண்டும் எழுந்து நிற்க முடியாது, மன்னித்து விடுங்கள்' என்று அழுத்தந்திருத்தமாக அவள் தெரிவித்து விட்டாள். 'என்னல் முடியாது; மன்னிக்கவும்' என்று அவள் உதிர்த்த அந்த வார்த்தைகள் அவளையும் அறியாமல் புதியதொரு வரலாற்றையே சமைத்துவிட்டன; மிகப் பெரிய சாதனையை ஒரு பெரிய சமுதாயம் சாதித்துக் கொள்வதற்கு அந்த வார்த்தைகள் அடிகோலி விட்டன. அலபாமா மாநிலத்தின் போக்குவரத்துத்துறையில் பரம்பரை பரம்பரையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இனப் பாகுபாட்டுக்கு அவள் வார்த்தைகள் அறைகூவலாக அமைந்து விட்டன.

ரோசா பார்க்ஸ் கைது செய்யப்பட்டாள். பத்து டாலர் அபராதமும் விதிக்கப் பட்டது. அத்துடன் ரோசா பார்க்கைப் பற்றிய விவகாரம் முடிந்து விட்டது. [illegible] பாகுபாட்டையும், வெள்ளையருக்குள்ள நிறத் திமிரையும் கண்டு நீக்ரோ சமுதாயமே கொந்தளிக்கத் தொடங்கிற்று. மாண்ட் கோமரி பஸ் நிகழ்ச்சியை ஒவ்வொரு நீக்ரோவும் தனக்கே ஏற்பட்ட அவமானகரமான அனுபவமாகக் கருதினன். தூங்கிக் கிடந்த மனச்சாட்சி துள்ளியெழுந்தது; கொலை, கொள்ளை, துப்பாக்கி வேட்டுகளை விடுத்து, உலகத்தார் மெச்சிமதிக்கும் வகையில் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்ற சிந்தனையை நீக்ரோக்கள் தீவிரமாகத் தொடங்கினர். ரோசா பார்க்ஸ் அவமானப் படுத்தப்பட்ட சேதி அமெரிக்கா முழுவதிலும் முட்டி மோதி ஆபிரிக்கா ஆசியாவிலும் எதிரொலித்தது. வெள்ளையரின் நிறத்திமிரையும் அதனை எதிர்த்து நிற்பதில் நீக்ரோக்கள் கையாளப் போகும் முறைகளையும் உலகம் கவலையுடன் கவனித்தது.

உலகத்தின் கவலையைத் தீர்க்கும் வகையிலேயே நீக்ரோ சமுதாயத்திற்கான புதுத் தலைவர் அப்போது உலாவரத் தொடங்கினர்.

## ❁ பஸ் வண்டிகள் பகிஷ்காரம்
## ❁ பஸ் கட்டணத்திற்கு டாக்சிகள்
## ❁ சட்டமும் நிர்வாகமும் அடிபணிந்தன

## பஸ் வண்டிகள் பகிஷ்காரம்

'பஸ் டிரைவர்களாக இருக்கும் நீக்ரோக்கள் வேலைக்குச் செல்ல வேண்டாம்; யாருமே இன்று முதல் வெள்ளையர் நடத்தும் போக்குவரத்துச் சாதனங்களை நாடவேண்டாம்; தனிப்பட்ட வண்டியில் பயணஞ் செய்யுங்கள்; அல்லது போக வேண்டிய தூரத்தை நடந்தே கடவுங்கள். இந்தத் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு ஓல்ட் தெரு மாதா கோவிலுக்கு நீக்ரோக்கள் அனைவரும் வாருங்கள். மேற்கொண்டு நடந்து கொள்ளவேண்டிய முறை பற்றி அங்கு தெரிவிக்கப் படும்"—என்ற வாசகங்களுடன் அச்சிடப்பட்ட துண்டறிக்கைகள் ஒவ்வொரு நீக்ரோ வீட்டிலும் அளிக்கப் பட்டன.

அதிலிருந்து நகரத்து நீக்ரோ யாரும் கட்டுப்பாடாக பஸ்வண்டியில் ஏறவில்லை. சொந்தமாகக் கார் வைத்திருப்பவர்கள் வண்டிகொள்ளும் மட்டும் நீக்ரோக்களை ஏற்றிச் சென்றனர்; குதிரை வண்டிகளில் பிரயாணம் செய்தனர்; சைக்கிள்களில் போயினர்; எதுவு மற்றோர் எத்தனை மைல்களானாலும் கால்கடுக்க நடந்தே சென்றனர். பள்ளிச் சிறார்கள், பெண்கள், முதியோர், நோயுற்றோர் எவரும் பஸ்களில் ஏறவில்லை. கால் கடுக்கப் பல மைல் நடந்து வந்த நீக்ரோ மூதாட்டி ஒருவர் பிரபல பத்திரிகையொன்றின் நிருபரிடம் சொன்னர்; 'ஆமாம், மகனே; என் கால்கள் தள்ளாடுகின்றன. ஆனல் என் மனம் மகிழ்ச்சியால் நிரம்பித் தளும்புகிறது'. உலகமே வியக்கும் அற்புத ஒற்றுமை அங்கு அப்போது நிலவியது.

## பண்பினிருப்பிடம் பரணி பாடுகிறது

திங்கட்கிழமை இரவு ஓல்ட் தெரு மாதாகோவிலிலும் அதை யொட்டிய தெருக்களிலும் நீக்ரோக்கள் நிரம்பி வழிந்தனர். இரவு 7 மணிக்கு அதுவரை யாரும் கேட்காத புதிய குரல் கணீரென முழங்கிற்று. ரெவரெண்ட்—மார்ட்டின் லூதர் கிங் முதன் முதலாக மக்களிடையே பேசத் தொடங்கினர். பஸ் நிகழ்ச்சியையொட்டி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளுக்காக அவசரக் கோலத்தில் அமைக்கப்பட்ட 'மாண்ட் கோமரி முன்னேற்றச் சங்கத்தை' நடத்திச் செய்ய வேண்டிய பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பாதிரியாக மாதா கோவிலில் மதப் பிரச்சாரம் செய்து வந்தவரை, மக்கள் உரிமைக்குப் போராடும் மனிதராக இருக்குமாறு பொறுப்பு கொடுக்கப்பட்டு விட்டது. இந்த இரவுதான் தற்போது அவர் தலைமை தாங்கி நடத்திவரும் 'தென்பகுதி கிருத்துவ முன்னணியினர் குழு'வுக்கு வித்திட்டதாகப் பிறகு அவர் தெரிவித்தார்.

'அற உணர்வு நமது போராட்டத்தில் இழையின்றி இருக்க வேண்டும். உறுதியாகப் போராட வேண்டும். துணிச்சலாக எதிர்த்து நிற்க வேண்டும். அறவழியிலும் கண்ணியத்தின் நிழலிலும் நமது போராட்டம் இருக்குமானல், வருங்காலச் சரித்திரம் நமக்குப் புகழ்மாலை சூட்டத் தவறாது. கவுரவத்திற்குரிய பெரு மக்கள்—அங்கு நிறை வாழ்வு வாழ்ந்தார்கள். அவர்கள் அளப்பரிய பெருமையையும் ஈடற்ற புகழையும் மனித நாகரிகத்திற்குப் பாய்ச்சினர்கள் என்று நம்மைப் பற்றி வருங்கால உலகம் சொல்லும். இவைதாம் நாம் மேற்கொண்டுள்ள பொறுப்புக்கேற்ப பிரகடனப் படுத்தும் அறைகூவலாக இருக்க வேண்டும்.'

இதற்குமேல் அங்கு கூடியிருந்த நீக்ரோக்கள் அவரை விளக்கம் கேட்கவில்லை. செய்ய வேண்டியது என்னவென்று ஒவ்வொருவருக்கும் தெளிவாகவே தெரிந்தது. பஸ் பகிஷ்காரம் தொடர்ந்து—காலவரையறையின்றி—வெள்ளையர் பணியுமட்டும் நடக்க வேண்டும். நீக்ரோக்களுக்குள்ள உரிமையும் மதிப்பும் என்னதான் என்பதைப் பார்த்து விட வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

---

# சங்கப் பலகை

## விநாயக மஹோற்சவ விளக்கம்

ஆக்கியோன்:
ஆர். க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள்
விலை. ரூபா, 3-00.

மக்களிடத்து துன்பங்கள் காரணமாக ஆஸ்திகம் குறைந்து நாஸ்திகம் பெருகி வருகின்ற இந்நாட்களில் சைவ சமய உண்மைகள் மூலம் வளரும் சிறுவரிடத்து சமயப்பற்று, ஒழுக்க விருத்தி என்பனவற்றை ஏற்படுத்த வேண்டியது சமயாசாரியரது கடமையாகும்.

இத்தொண்டை இலகுப் படுத்தவும், மக்களே படித்து அறியவும் விநாயக மஹோற்சவ விளக்கம் என்னும் நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலின் சிறப்புக்கு, அணிந்துரை உதவியுள்ள பெரியாரின் திறமையே சான்ருகும். தனி முதல்வரான விநாயகரைப் பற்றிப் பொது மக்கள் அறிவது முதற் கடமையாகும்.

ஆசிரியரது தமிழ் நடை ஓரளவு விளங்கக் கூடியதாயிருப்பினும் சில சொற்களின் பொருளைப் பொது மக்கள் அறிவது கஷ்டமாயிருப்பதனல் அரும்பத விளக்கம் ஒன்று கடைசியில் இணைக்கப்படுவது பெரிதும் வேண்டப்படுகிறது. தெளிவான அச்சுப்பிரதியாயினும் பிழைகள் ஏற்படா வண்ணம் இரண்டாம் பதிப்பில் கவனித்தல் நல்லது.

சைவ சமயபாட மேற் பிரிவுப் பரீட்சைக்கு ஒரு நூலாகச் சேர்த்துக் கொள்ளக் கூடியது என்பதே இந்நூலின் சிறப்பாகும். இதனை பரீட்சை அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வருவது எமது கடமையாகிறது. அத்துடன் பூசகராகத் தகுதி பெறும் மாணவர்களும் படித்துப்பயன் பெறலாம்.

## தோத்திரப் பாமாலை

நினைவு மலர்
கிடைக்குமிடம்.
நியூ லீலா அச்சகம்
33, சென் செபஸ்தியன் மேடு
கொழும்பு-12.

முருகா—குமரா—பரமா என்று மூன்று தரம் சொன்னலே முத்தி கிடைக்கும் என்று தமது சமய விரிவுரைகளை நடத்தும் போது அடிக்கடி கூறிவருவதே கடமையாகக் கொண்டவர் உயர்திரு கிருபானந்தவாரியார் அவர்கள். இதனை ஈழத்தில் அவருடைய விரிவுரைகளைக் கேட்ட பக்த கோடிகளுக்கு ஞாபகப்படுத்த வேண்டியதில்லை.

அதாவது, பாராயணத்தினல் மட்டுமே மனவமைதியைப் பெறுவதுடன் முத்திக்கும் வழி தேடலாம் என்பதே.

நினைவு மலரான இந்நூலில் தேவாரங்கள் தொகுக்கப்பட்ட திறமை பெரிதும் வரவேற்கத்தக்கது. இதனைப் பிள்ளைகள் வீட்டில் தினமும் பாராயணஞ் செய்யும் வகையில் வகைப்படுத்தியுள்ளது நல்லதொரு முயற்சியாகும்.

இதனைப் பற்றிப் பொது மக்கள் அறியச் செய்ய வேண்டுமாயின் பாடசாலைகளில் ஏழைப் பிள்ளைகளுக்கு இந்நூல் கிடைக்கும்படி வழி செய்யின் நிலையான நினைவுப் பெ[illegible]கும்.

—"ரமணி"

---

## வெள்ளைக்காரன் ஒருவன் உட்காருவதற்கு இடம் கொடுக்க மறுத்தாள் ஒரு கறுப்புப் பெண்; அதன் குமுறல் எப்படி வெள்ளாம் வெடித்தது...என்பதைப் படம் பிடித்துக் காட்டும் இக்கட்டுரை இன்று தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியிருக்கும் மற்றுமொரு பஸ் பிரச்சினைக்கு வழிகாட்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர் கதை

# அதிசயத்தீவில் கலிவர்

—மாஸ்டர் சிவலிங்கம்—

ஆடிக்கடி நீரில் அமிழ்ந்திக்கொண்டு வந்ததால் குட்டி மனிதர்கள் பொழிந்த அம்புகளிலிருந்து கலிவர் ஒருவாறு தப்பிக்கொள்ள முடிந்தது. தையலூசிபோன்ற ஓரிரு அம்புகள் அவருடைய உடலில் தைத்துச் சிறிதுவேதனையை ஏற்படுத்தின. என்றாலும் சுகமாகக் கப்பல்களுடன் 'லிலிப்புட்' வந்துசேர்ந்தார்.

கடற்கரையில்...அரசர், மந்திரி பிரதானிகள் உட்படத் திரளாக மக்கள் கூடி நின்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கலிவரை வரவேற்றனர். கலிவரின் தீரத்தை அரசர் வெகுவாகப்புகழ்ந்து பாராட்டினர்.

அதிகார வெறி பிடித்த அரசர்...கலிவரின் உதவியுடன் பெலிபுஸ்கோத்தீவை அடிமைப்படுத்தி, தனது ஆட்சிக்குட்படுத்த ஆவல் கொண்டார். தனது ஆசையைக் கலிவரிடம் மெள்ள வெளியிட்டுத் தனது ஆசையைப் பூர்த்திசெய்து வைக்கும்படியும் கலிவருக்குப் பணித்தார்.

ஆனல்...!

கலிவர் அந்தச் செயலை அறவே வெறுத்தார். 'சுதந்திரமாக வாழும் எந்த மக்களையும் அடிமைப்படுத்தும் செயல் அடாத, அநியாயச் செயலாகும். இந்தச் செயலுக்கு நான் உங்களுக்குஉதவ முடியாமைக்கு வருந்துகிறேன். மன்னிக்கவும்...' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

கலிவரின் கண்டிப்பு அரசருக்கு அறவே பிடிக்கவில்லை. அவருடைய முகத்தில் கோரம் தாண்டவமாடியது. எடபடியாவது மிகவிரைவில் கலிவரைத் தொலைத்துக் கட்ட வேண்டும் என்று மனதில் திட்டம் தீட்டிக் கொண்டே அரண்மனைக்கு விரைந்தார்.

தங்கள் தீவை அடிமைப்படுத்தும் திட்டத்திற்குக் கலிவர் கண்டிப்பாக மறுத்த செய்தியை ஒற்றர் மூலம் அறிந்த பெலிபுஸ்கோ மன்னர் அன்று மாலை ஒரு ஒற்றர் மூலம் கலிவருக்குத் தமது நன்றியைத் தெரிவித்துதமது பெலிபுஸ்கோத் தீவிற்கு வருகை தரவேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார்.

கலிவர் பெலிபுஸ்கோத் தீவு ஒற்றனுடன் பேசிக்கொண்டிருந்ததை மறைந்திருந்து அவதானித்த லிலிப்புட் தீவு ஒற்றன் விரைந்து சென்று அரசரிடம்தெரிவித்தான். அரசர் அதிர்ச்சியில் அப்படியே தரையில் சாய்ந்தார்.

சற்று நேரத்தில் மயக்கந் தெளிந்து எழுந்த அரசர், அவசர அவசரமாகத் தனது இராஜசபையைக் கூட்டி, கலிவர்மீது தமக்கு நம்பிக்கை கிடையாதென்றும், பெலிபுஸ்கோத் தீவுடன் உறவாடும்கலிவரால்தமக்கு எப்போதும் அபாயமேற்படலாமென்றும் கூறி அவரைத் தொலைத்துக் கட்டுவதற்கு வழிவகைகளை ஆராய்வதில் துரிதமாக ஈடுபட்டார்.

அன்றிரவு...நேரம் சுமார் பதினென்றிருக்கும். கறுத்த உடை அணிந்த ஒரு உருவம் இருளோடு இருளாகப் பதுங்கியபடி கலிவருடைய இருப்பிடத்தை நெருங்கிக்கொண்டிருந்தது......

(அடுத்த இதழில் முடியும்)

எனது கிராமம்

## தென்புலோலியூர்

[கே. கணபதிப்பிள்ளை]

புலவர்கள் ஒலித்த இடம் ஆதலால் 'புலோலியூர்' என்று பெயரேற்பட்ட எனது கிராமம், பருத்தித்துறைக்கு ஒரு மைல் அப்பால் இருக்கின்றது!

எனது கிராமமாகிய 'தென்புலோலியூர்'க்கு அடுத்ததாக சரித்திரம் பிரசித்தி பெற்ற 'ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்' கோவில் அமைந்திருக்கின்றது. இக் கோயிலுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பல பல பக்தர்கள் வந்து போவார்கள்.

எனது கிராமத்துக்கும் இக் கோவிலுக்கும் இடையில் பலபல நீண்ட சவுக்கு மரங்கள் காட்சி அளிக்கின்றன.

எனது கிராமத்தில் உள்ளோர் அநேகர் கமக்காரர்கள்தாம். 'சுதந்திரன்' போன்ற பத்திரிகைகள் படிப்பதற்கு இரு நூல் நிலையங்கள் இருக்கின்றன.

அறிவுரை: 5

## உண்மை

உண்மை என்பது பொய்பேசாதிருப்பது மட்டுமல்ல.

இந்த உலகத்தில் எவை எவை பிரத்தியட்சமாக உண்மைகளென இருக்கின்றனவோ, அவை எல்லாம் உண்மைதான்; கண்கண்ட உண்மை.

'காலையில் கதிரவன் உதிக்கின்முன்; மாலையில் மேற்றிசையில் மறைகின்முன்' என்றால், அது உண்மை.

'மனிதனுக்கு இரண்டு கால்கள் உண்டு' என்றால், அது நூற்றுக்கு நூறு உண்மையாகாது. காலில்லாத மனிதரும் இருக்கத் தானே செய்கிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

எந்த மனிதனும் நூற்றுக்கு நூறு உண்மையாக வாழ முடியாது.

இயற்கை ஒன்று தான் நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

மனிதனைப் பொறுத்த வரையில், எந்த உண்மையிலும் ஒரு அரைப் பொய்யோ, கால் பொய்யோ மறைந்து கிடக்கும்.

பிறருக்குக் கட்டாயமாக நன்மை விளைவிக்குமென்றால், பொய் கூடக் கூறலாம் என்ற கருத்தை மனிதன் ஏற்கிருன்.

அப்படியானல், பிறருக்குக் கட்டாயமாகத் தீமை விளைக்குமென்றால், உண்மையைக் கூருமல், அதை மறைத்து விடலாம் என்பது முன்னதிலிருந்து தொடருகிறது.

ஆகவே, எது உண்மை, எது பொய் என்பதே பிரச்சினையாகி விடுகிறது.

ஈற்றில், ஒவ்வொரு மனிதனுடைய மனச் சாட்சிக்கும் எது உண்மையெனப் படுகிறதோ,அது உண்மை; எது பொய்யாகப் படுகிறதோ அது பொய், என்ருகி விடுகிறது.

இயற்கை உண்மைகள் என்றும் அழியா.

—வளர்மதி மாமா.

## மருமக்கள் எழுதுகிருர்கள்...

வளர்மதி மாமாவுக்கு,

மாஸ்டர் சிவலிங்கத்தின் 'அதிசயத் தீவில் கலிவர்' என்ற கதை விறு விறுப்பாகச் செல்கின்றது. ஒரே மூச்சில் படித்து முடித்துவிடத் துடிக்கின்றேன். எனவே இதை மொத்தமாக வெளியிடுவீர்களா? அடுத்தது 13-9-64 இதழில் மாமாவின் 'அன்பு' என்ற அறிவுரையும், 20-9-64ல் வெளியான 'ஆசை' என்ற அறிவுரையும், மாணவ மாணவிகளுக்கும், வளர்மதி மருமக்களுக்கும், சிறந்த அறிவுரைகளாக அமைந்திருக்கின்றன. இவற்றைப் பின்பற்றி நடப்பது எல்லாரினதும் கடமையாகும். இப்பேர்ப்பட்ட சிறந்த விடயங்களை மதிப்பின் சிகரமாய்விளங்கிவரும் வளர்மதி சுதந்திரன் மாணவர் மன்றத்தில் தொடர்ந்து வெளியிட வேண்டுமென்று மாமா அவர்களைப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

அன்பு மூர்த்தி,
மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.

அன்புள்ள வளர்மதி மாமா!

உங்களது எழுத்தோவியத்தைப் பார்த்து ரசித்து அதிலுள்ள உண்மைக் கருத்துக்களைக் கைக்கொண்டு நடக்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் அவா. நான்எழுதிக் கேட்பதற்கு முன்னமே தாங்கள் விரும்பிவிட்டீர்கள்.

மாமா! எழுதுங்கள் எழுதுங்கள் என்று மீண்டும் மீண்டும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொ. கிருஷ்ணபிள்ளை,
மட்/செட்டிபாளையம்,
குருக்கள் மடம்.

மதிப்பிற்குரிய வளர்மதி மாமா!

தாங்கள் கூறிவரும் அறிவுரைகள் எங்களுக்கு மிகவும் பயன்படுகின்றன. அன்பு, ஆசை, இவற்றின் உண்மைப் பொருளின்தத்துவத்தைத் தெள்ளிய தமிழில் அழகாகக் கூறியிருக்கிறீர்கள். அளவிலா மகிழ்ச்சி.

வணக்கம்.
நோ. இராசம்மா,
கல்முனை.

தமிழ்க் கன்னிக்கு மருமக்கள் அஞ்சலி:

## ஏனிந்த வியப்பம்மா?

— 'ஈஸ்வரி' மூளாய்—



அழகுத் தமிழ்க் கன்னி!
ஆரணங்கே! நீ யிப்போ
சுழலும் விழிகளினல்
சொல்பவை தான் என்னேடி?

இதழிலே விரல் பதித்து
எங்கோ நீ நோக்குகிருய்?
இதயத்தை இழுப்பதற்கு
என்னம்மா இருக்கங்கே?

'வளர்மதி' தனைக் கண்டு
மலர்ந்ததுவோ அல்லிமலர்?
இளைஞர் திறன் கண்டு
விரிந்ததுவோ குவளைமலர்?

ஏனிந்த வியப்பம்மா
இன்று தான் முதலில்
தேன் பொழியும் வளர்மதி
தன்னை நீ கண்டனையோ?

பதிலெதுவும் கூருது
பதுமையாகி விட்டாயே,
மதிவதன மங்கையே
வேண்டாமிம் மௌனமம்மா!

## எண்ணக் கன்னி

—'எம். வேலன்'—


கன்னி யிதழின் கனிக் கோவை
காட்டு மழகின் புதுத் தேவை
என்ன வென்று தானறிவோம்
எத்தனை யெத்தனை யாரறிவார்!

பள்ளி செல்லும் போதினிலே
பாட்டிசைப்பான் காதினிலே
'கள்ளி' யென்றே கண்காட்டி
கருத்தை மீட்பான் சாடையிலே

தீந்தமிழ்க் காதலன் திருமுகமும்
தெவிட்டாதினிய அவ னிசையும்
வந்தே வாட்ட நெஞ்சில்
வளரும் எண்ண மாயிரமே!

காந்தக் கருவிழி அவளெண்ணம்
கடலின் விரிவு புதுஎண்ணம்
சந்திர வதனச் சிரிப்பலையில்
சாற்றுமவ ளெண்ணம் ஆயிரமே!

## தலைப்புத் தாருங்கள்!



மேற்காணப்படும் படத்திற்குப் பொருத்தமான தலைப்பை எழுதி அனுப்புங்கள். முடிவு திகதி 23-10-64. சிறந்த தலைப்பு 'வளர்மதி'யில் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீபாவளிப் பெரு விருந்து!

## சிலோன் தியேட்டர்சாரின் திரைகளில்!


எம். ஜி. ராமச்சந்திரன் — சரோஜாதேவி
எம். ஆர். ராதா - நம்பியார் - பாலாஜி - நாகேஷ் - விஜயலக்ஷ்மி - மனோரமா
மற்றும் பலர் நடித்த

# என் கடமை



செல்லமஹால் — 4வது வாரம்
(கொட்டாஞ்சேனை)
ஜெமினி கணேசன் — சரோஜாதேவி
தங்கவேலு — எம். வி. ராஜம்மா

# வாழ்க்கை வாழ்வதற்கே



4வது புகழ் வாரம்!
கிங்ஸ்லி பிளாஸா
(கொழும்பு)
நவா
(கும்பனித்தெரு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மொடேர்ன்
(பதுளை)
விஜயா (மட்டுநகர்) விஜிதா (ஹட்டன்)
ஸ்ரீகிருஷ்ணு
(திருமலை)
கல்யாணி
(நாவலப்பிட்டி)

எம். ஜி. ஆர்—சரோஜாதேவி
அசோகன்—நாகேஷ்
மனோகர்—மணிமாலா
நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்

# பணக்கார குடும்பம்

# தீபாவளித் திரை விருந்து!

நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
மற்றும் பல ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களும் தோன்றும்
பத்மினி பிக்சர்ஸ்

# கர்ணன்



டைரக்ஷன்:
பி. ஆர். பந்துலு

வசனம்:
சக்தி கிருஷ்ணசாமி

பாடல்கள்:
கண்ணதாசன்

இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி

# 3வது வாரம்



இயற்கைவர்ண எழிற்காட்சியில் 'பேராசிரியர்?'
ஆடுகிறார், பாடுகிறார், அறிவூட்டுகிறார்
நம்மை ஆனந்தக் கடலிலாட்டுகிறார்

வட நாட்டில் வெள்ளி விழாக் கொண்டாடிய
'மெஹ்ரா' அளிக்கும்

# 'புரொபெசர்'

ஈஸ்ட்மென் கலர் ஹிந்திச் சித்திரம்

ஷம்மிகபூர்—கல்பனா—லலிதா பவர் நடித்தது

செண்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ஆகிய திரைகளில்!

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.